வெளியீடு: 3-4-2008 Issued: 3-4-2008

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008 எழும்பூர்
சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS
1284 27.08.2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 30, 2008—தொகுதி 40—எண் 2

Wednesday, the 30th January, 2008—Volume 40—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 30–01–2008

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 213-253 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) திருவொற்றியூர், எம்.ஆர்.எப். நிறுவன கதவடைப்பு | 254-270 |
| திரு. டி. ஜெயக்குமார் | 255-257, 269, 270 |
| திரு. சி. ஞானசேகரன் | 257-258 |
| திரு. தி. வேல்முருகன் | 259-263, 269 |
| *திரு. கே. மகேந்திரன் | 263-265 |
| திரு. சு. குணசேகரன் | 265-267 |
| மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் | 267-269 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 270 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 270-271 |
| **3. அறிவிப்பு—** | |
| தியாகிகள் தினத்தையொட்டி தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல் | 258 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 271 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 272 |


93-420—1

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 ... 272-273

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி ... 273-331

*திரு. ஓ. சுப்பிரமணியம் ... 273-274

*திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ... 275-294

திரு. கோவை தங்கம் ... 296-306

திரு. அ. தமிழரசு ... 306-314

திரு. வே. மாரிமுத்து ... 315-321

*திரு. டி. இராமச்சந்திரன் ... 321-325

திரு. செ. பொன்னுதுரை ... 325-330

7. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் படகுகள் விடுவிப்பு—அரசு நடவடிக்கை— ... 274

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ... 274

8. விதி 110—ன்கீழ் அறிக்கை—

தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகச் செயல்படுவோர்மீது நடவடிக்கை—மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை ... 304-305

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 331-333

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, தை 16

## 2008 ஜனவரி 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று"

பண்பாளர்கள், இனிமையல்லாத சொற்களைக்கூடச் சொல்லிவிடலாம். ஆனால் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பதே நல்லது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள், வினா எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**31—**

### புதிய கட்டடம்

***29942—திரு. சி. துரைராஜ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பேரையூர் சார்நிலைக் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 ஜனவரி 30

மதுரை மாவட்டம், பேரையூர் சார்நிலைக் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநரால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் அரசால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சார்நிலைக் கருவூலம் தனியாருடைய வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. எனவே, வரக்கூடிய நிதிநிலை அறிக்கையில் அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்படுமா? கட்டடம் கட்டுவதற்கு அரசு மேல் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் கட்டுவதற்காக, பேரூராட்சி மன்றத்திலேயிருந்து இடத்தை ஒதுக்கித் தரும்படி கேட்கப்பட்டு, இடம் ஒரு முறை அளவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஏதோ குறைபாடுகள் காரணமாக மறுபடியும் அளவு செய்யப்பட்டு, அந்த நிலம் எடுக்கப்பட்டுவிட்டது என்ற தகவல் இயக்குநருக்கு வந்தவுடன், அவர்கள் நிதித் துறைச் செயலரை இதற்காக நிதி ஒதுக்கும்படிக் கேட்பார்கள். இதுசம்பந்தமான மற்றக் கடமைகள் நிறைவேறி விடுமானால் வருகிற ஆண்டில் நிதியொதுக்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**32—**

**கட்டடத்தை விரிவுபடுத்துதல்**

***31530—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு ... காணும் வினாவிற்கு விடையளிப்பா[ர்]—

22800
Chennai-600 008



2008 ஜனவரி 30]

தருமபுரி நகரிலுள்ள மாவட்டக் கருவூலக் கட்டடத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டக் கருவூல அலுவலகத்தின் விரிவாக்கத்திற்காகத் தேவைப்படும் கூடுதல் இட ஒதுக்கீட்டினைப் பெறுவதற்கான கோரிக்கை ஏற்கெனவே சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் மாவட்டக் கருவூல அலுவலரால் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பான மேல் நடவடிக்கை, இயக்குநர் அளவில் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய மேற்கண்ட நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, தருமபுரி நகரிலே செயல்பட்டு வருகின்ற சார்நிலைக் கருவூலக அலுவலகம் போதுமான இடவசதியின்றி உள்ளது. அதோடு மட்டுமல்லாமல் சென்ற நிதியாண்டிலே அமர்வு நீதிமன்றம் அறிவிக்கப்பட்டு, அங்கே நீதிமன்ற வளாகங்கள் புதிதாகக் கட்டப்பட உள்ளன. ஆகவே, தற்போது இருக்கின்ற சார்நிலைக் கருவூலத்திற்கான புதிய கட்டடத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகிலேயே கட்டித் தருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள அந்த முயற்சியின்படி மாவட்ட ஆட்சித் தலைவரை இப்போதுள்ள கட்டடத்தையொட்டி இடவொதுக்கீடு செய்து தரும்படி கேட்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த இடத்திலே இடம் ஒதுக்கித் தருகிறபோது இருக்கிற கட்டடத்தோடு சேர்த்துப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு தகுந்த முறையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

[2008 ஜனவரி 30

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**33—**

### மின் உற்பத்தி

***8840—திரு. ரெ. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை பகுதியில் காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை பகுதியில் காற்றின் வேகம் காற்றாலைகள் அமைப்பதற்குத் தேவையான அளவு இல்லாமையால் அங்கு காற்றாலைகள்மூலம் மின்சாரம் தயாரிக்க முடியாது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம், வறட்சியான மாவட்டம், முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய மாவட்டம். இப்பகுதியில் காற்றாலைகள்மூலம் மின்சாரம் உற்பத்திச் செய்ய அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது வறட்சியான மாவட்டம் என்று சொன்னார்கள். அந்த மாவட்டத்தில் காற்றும் வறட்சியாக இருக்கிறது. காற்றாலைகள் அமைக்க வேண்டுமென்றால் ஒரு மணிக்கு 18 கிலோ மீட்டர் வேகத்திலே காற்று வீச வேண்டும். அப்படிக் காற்று அங்கே வீசாதது மட்டுமல்ல; காற்றின் விசை அடர்த்தி ஒரு சதுர மீட்டருக்கு சுமார் 150 வாட்டுக்கு அதிகமாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லாத காரணத்தினாலே புதுக்கோட்டை மாவட்டத்திலே காற்றாலைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை. இருந்தாலும்கூட, சூரிய ஒளியின்மூலம் மின்சாரம் உற்பத்திச் செய்ய தனியார் யாராவது முன்வருவார்களேயானால் அவர்களை ஊக்குவிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. அதைப்போலவே bio-mass; உயிரியல் சக்தி மூலமாக மின்சாரம் தயாரிக்க யாராவது முன்வந்தாலும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது. ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் 13.5 மெகாவாட் மின்சாரத்தை bio-mass மூலம் உற்பத்திச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களே வருடத்திற்கு 4 மாதங்களுக்கு மூலப்பொருள் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நிலக்கரி கொடுத்தாவது மின்சாரத்தை உற்பத்திச் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின்சாரத்தை விவசாயிகளுக்கு அடுத்தபடியாக அதிகமாகப் பயன்படுத்துவது உள்ளாட்சித் துறைதான். அதிகமான மின்சாரம், தெருவிளக்குகள் மற்றும் குடிநீருக்காக பயன்பாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 24 மணி நேரத்தில் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற திட்டத்தை எல்லாம் தந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனித்தனியாக ஒவ்வொரு காற்றாலை அமைக்கப்பட்டால், அந்தக் காற்றாலைமூலம்

[2008 ஜனவரி 30

வருகின்ற மின்சாரத்தை அவர்கள் சுய தேவைக்குப் பூர்த்தி செய்துகொள்வதோடு, மின் பற்றாக்குறையும் குறையும் என்பதை இந்த நேரத்தில் ஆலோசனையாகச் சொல்கிறேன். ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்குச் சொந்தமாக, எங்கு அதிகமாக காற்று வீசுகிறதோ அந்தப் பகுதிகளில் அந்தந்தப் பேரூராட்சிகளுக்குச் சொந்தமாக காற்றாலை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 12,600-க்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே மக்கள் தொகை ஊருக்கு ஊர் வித்தியாசப்படுகிறது. ஒரு கிராமத்திற்கு ஒரு மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்ய வேண்டுமென்று சொன்னால்கூட, 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். அப்படி முதலீடு செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலேயும் ஏற்பாடு செய்வார்களேயானால் காற்றாலைகள்மூலமாக மின்சாரத்தை உற்பத்திச் செய்து தருவதற்கு அரசாங்கம் உதவி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி பல வகைகளிலே செய்யப்பட்டாலும், நமது நாட்டினுடைய தட்பவெப்ப நிலையைக் கருதி, சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தியைத் தயாரிக்க, தொழில்நுட்பம் மிகுந்த இன்றைய காலகட்டத்திலே ஏற்பாடு செய்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி காற்றாலை சம்பந்தப்பட்டது. அதைப் பற்றிக் கேட்கிறீர்களா?

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்ற தமிழகத்தை டாக்டர் முதல்வர் அவர்கள் முன்னிலையில் எடுத்துச் செல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அது குறித்து ஆவன செய்யப்படுமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து ஒரு நல்ல கருத்து. ஏனென்று சொன்னால், ஓர் ஆண்டில் ஏறக்குறைய தமிழகத்தில் 20 அல்லது 25 நாட்கள்தான் மழை பெய்கிறது. மீதி நாட்களிலே சூரிய வெளிச்சம் அதிகமாகவே கிடைக்கிறது. அதன்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்தால், உற்பத்திச் செலவு எதுவும் கிடையாது. மற்ற நீர் மின் நிலையங்கள் ஆனாலும் சரி, அனல் மின் நிலையங்கள் ஆனாலும் சரி, இப்போது அதற்கெல்லாம் நாம் செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. ஆனால், சூரிய ஒளியின் மூலமாக மின்சாரம் உற்பத்திச் செய்தால், அதற்காக உற்பத்திச் செலவு என்று தனியாக எதுவும் இல்லை. ஆனால், அதற்கான இயந்திரங்களைப் பொருத்துவதற்கும், Photovolt அமைப்பதற்கும் தேவையான செலவைத்தான் முதலிலே செய்ய வேண்டும். அந்தச் செலவு அதிகமாக இருக்கிறது. ஒரு மெகா வாட் மின்சாரம், அனல் மின் நிலையம்மூலம் உற்பத்திச் செய்ய 4 கோடி ரூபாய் ஆகிறது. நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய 5 கோடி ரூபாய் ஆகிறது. ஆனால், சூரிய வெளிச்சத்தின்மூலம் மின்சாரம் உற்பத்திச் செய்ய 25 கோடி ரூபாய் ஆகிறது. அதை இப்போது வெளிநாட்டில் ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளிலே 12 கோடி ரூபாய்க்கு உற்பத்திச் செய்ய முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுகுறித்து நம்முடைய TEDA அதிகாரிகளையும், மின்சார இலாகாவிலே இருக்கக்கூடிய பொறியாளர்களையும் போய் பார்த்துவிட்டு, 12 கோடி ரூபாய்க்கு ஒரு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அதை இங்கே காற்றாலைகள்மூலம் உற்பத்தி செய்கின்ற முதலாளிகள் அந்த நிலத்திலேயே சூரிய வெளிச்சத்தின்மூலம் கிடைக்கின்ற மின்சாரத்தையும் பயன்படுத்தத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால், சூரிய வெளிச்சத்தின் மூலமாக மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்றால் அதிகமாக நிலம் தேவை. அந்த நிலம் காற்றாலை உற்பத்தியாளர்களிடத்திலேதான் இருக்கிறது. தமிழ்நாட்டிலே மட்டும் கிட்டத்தட்ட 1 கோடியே 50 இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அதுகுறித்து ஆய்வு செய்யவும், அங்கேபோய் விவாதித்து, அந்த technology–யைக் கொண்டு

வருவதற்கும் ஏற்கெனவே முதலமைச்சரிடத்திலேயும் சொல்லியிருக்கின்றேன். மறுபடியும் அதிகாரபூர்வமாக நம்முடைய முதலமைச்சரிடத்திலே அனுமதி வாங்கி, அந்த அதிகாரிகளை அங்கே அனுப்பி, அந்த technology–யைக் கொண்டு வந்தால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே காற்று வராத காரணத்தினால் இப்போது உடுமலைப்பேட்டை மற்றும் கயத்தாறு போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய காற்றாலைகள் ஓடாத காரணத்தினாலே 1,400 மெகா வாட் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய மின்சாரம் இந்த முறை கிடைக்காமல் போய்விட்டது; அதனால்தான் ஆங்காங்கே மின் தடை ஏற்படுகிறது என்ற கருத்தை இந்த அவையிலே தெரிவித்தார்கள். இந்தக் கேள்விக்குக்கூட, கந்தர்வக்கோட்டைப் பகுதியிலே காற்று இல்லை என்ற கருத்து இருக்கிற காரணத்தினாலே அங்கே ஓட்ட இயலாது என்று சொன்னார்கள். நாம் இந்தத் துறையின்மூலம் தமிழ்நாட்டில் எங்கெங்கெல்லாம் காற்று அடிக்கிறது; காற்றின் velocity–ஐக் கண்டுபிடிப்பதற்கான ஓர் ஆய்வினை இந்தத் துறை மேற்கொள்ளுமா? ஏனென்று சொன்னால், அப்படிப்பட்ட ஓர் ஆய்வைச் செய்வதற்கு ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் நிறையச் செலவாகிறது. அந்தச் செலவைத் தவிர்க்கின்ற வகையில் அரசே எங்கெங்கெல்லாம் காற்று அடிக்கிறதோ, அந்த இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்க முன்வருமா? அதேபோல, இப்போது technology–யைப்பற்றிச் சொன்னார்கள். Solar மூலமாகக் கிடைக்கக்கூடிய, சூரிய ஒளியிலிருந்தும் கிடைக்கக்கூடிய current, அதைப்போலவே காற்றாலை இரண்டையும் சேர்த்து two-in-one ஆக, காற்றடித்தால் அப்படியே காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்கலாம் அல்லது வெயில் காய்ந்தால் அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம். இப்படி two-in-one என்கிற technology–யை (குறுக்கீடு) hybrid technology–யைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முன்வருமா?

காற்று வந்ததும் கொடி அசைந்ததா,
கொடி அசைந்ததும் காற்று வந்ததா

என்கிற வினா எப்போதும் உண்டு. அந்த இடங்களிலே காடெல்லாம் நிறைய அழிந்துவிட்ட காரணத்தினாலேதான் இப்போது அந்தக்



காற்றாலைகள் எல்லாம் ஓடாமல் இருக்கின்றன. ஆகவே, காற்றை வரவழைக்கக்கூடிய திட்டத்தை ஏதாவது அரசு இப்போது வகுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று வீசுவதைக் கண்டுபிடிப்பதற்கு எந்தக் கருவியும் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், எந்தெந்தப் பகுதிகளிலே காற்றாலைகள்மூலம் மின்சாரம் தயாரிக்கலாம் என்பதற்கான புள்ளிவிவரங்களை நம்முடைய தமிழக அரசு TEDA மூலமாகச் சேகரித்து வைத்திருக்கிறது. தமிழ்நாட்டிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு பகுதி, திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு பகுதி, கோயம்புத்தூரிலே சில பகுதிகள்; இப்படிப்பட்ட பகுதிகளிலே காற்றாலைகள் மூலமாக மின்சாரத்தை உற்பத்திச் செய்ய முடியும் என்று கண்டுபிடித்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவைப்பட்டால் TEDA மூலமாக அந்த விவரங்களையெல்லாம் பெற்றுக்கொள்ளலாம் அல்லது Computer மூலமாக நேரடியாகப் download செய்தும் தெரிந்துகொள்ளலாம். எனவே, காற்றாலைகளைப் பொறுத்தவரையிலே காற்று எங்கே அதிகமாக வீசுகிறதோ அங்கே காற்றாலைகளை அமைக்கிறோம். காற்று வீசாத இடத்திலே நம்மாலே அதை அமைக்க முடியாது. காற்றை அதிகமாக வீசச் செய்வதற்கு நம்மாலே எதையும் செய்ய முடியாது. இயற்கையாக காற்று வீசினால்தான் மின்சாரம் உற்பத்தியாகும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்தில் சில மாதங்கள் காற்று வீசாத காலமாக இருக்கிறது. அதேபோல சில மாதங்கள் வலுவான காற்று வீசுகின்ற காலமாக இருக்கிறது. ஆகவே, காற்று இல்லாதபோது போதிய மின்சாரம் நமக்குக் கிடைப்பதில்லை. அதிக காற்று வீசுகிற காலத்திலே கிடைக்கிற அதிக மின் உற்பத்தியை நாம் பயன்படுத்திக்கொள்வதற்குரிய மின் நிலையங்கள்—Power Station-கள்—இல்லை என்று அதன் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அதிக காற்று வீசுகின்ற

காலங்களில் உற்பத்தி ஆகின்ற முழு மின்சாரத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்வதற்குரிய மின் நிலையங்கள்—Power Station-கள்—ஏற்படுத்தி அதைப் பெறுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே அப்படிக் காற்று வீசுகின்ற பகுதிகளிலே, அதிகமாக காற்று வீசுகின்ற நேரத்திலே, அந்த மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வசதி இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது உடுமலைப்பேட்டை மற்றும் பொங்கலூர் பகுதிகளிலே எங்கெங்கே காற்று அதிகமாக வீசுகிறதோ அந்தப் பகுதிகளை எல்லாம் கண்டுபிடித்து புதிய Sub-station-களை உருவாக்கியிருக்கிறோம். எந்த இடத்திலேயும் காற்றாலைகளினுடைய உரிமையாளர்களிடமிருந்து மின்சாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை என்ற புகார் இப்போது கிடையாது. எதிர்காலத்திலேயும் அப்படி வராமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அமைந்து இருக்கின்ற ஜவ்வாது மலை, மேற்கு தொடர்ச்சி மலையிலே அமைந்திருக்கின்றது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அனைத்து வாய்ப்புகளும் அங்கே இருக்கின்றன. தேவையான காற்று அங்கே வீசுகிறது. மலைவாழ் மக்கள் வாழ்கின்ற இன்னும் பல கிராமங்களிலே மின்சார வசதி இல்லாத காரணத்தினால், மின்சார வசதி பெறாத காரணத்தினால் அந்தப் பகுதிகளிலே காற்றாலை மூலமாக மின்சாரம் தயாரித்து மலைவாழ் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இந்த அரசு காற்றாலைகளை அமைத்துத் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே காற்று வீசும் என்று சொல்ல முடியாது. நீலகிரியாக இருந்தாலும் சரி, கொடைக்கானலாக இருந்தாலும் சரி, ஜவ்வாது மலையாக இருந்தாலும் சரி அங்கேயெல்லாம் ஒரு மணிக்கு 18 கி.மீ. வேகத்திலே, காற்று வீசுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஜவ்வாது மலை போன்ற பகுதிகளிலே அவர்களுக்கு சூரிய வெளிச்சத்தின் மூலமாகக் கிடைக்கின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி தெருவிளக்குகள் அமைத்து இருக்கின்றோம். வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்து இருக்கின்றோம். அப்படி காற்று இல்லாத இடங்களிலேகூட, எந்தெந்த இடங்களிலே சூரிய வெளிச்சத்தின்மூலம் மின்சார வசதி கொடுக்க முடியுமோ அப்படி இந்தியாவிலேயே அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்து இருக்கின்ற ஒரே மாநிலம் நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாடு மட்டும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது இந்த Hybrid Power Supply System என்பதைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். என்னுடைய சட்டமன்ற தொகுதியிலே திரு. ஷியாம் பெனகல், M.P. அவர்கள் பத்து இலட்சம் ரூபாய் கொடுத்து இரண்டு ஊராட்சிகளிலே இந்த முன்மாதிரித் திட்டத்தை உருவாக்கித் தருவதற்காக ஸ்டீபன் என்ற இளைஞர்மூலம் அளித்து, இப்போது அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. அதை நிர்மாணிக்கின்ற பணியிலே அவர்கள் இருக்கிறார்கள். இதற்காக நம்முடைய மின்சார வாரியத்திடம்கூட அனுமதி கேட்டோம். மின்சார வாரிய அதிகாரிகளும் அதைப் பார்த்து கடந்த வாரம் அதற்கான அனுமதி தந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த Hybrid System Power Generation Plants-ஐ ஒவ்வொரு ஊராட்சியிலும் அமைத்தால் மின்சாரக் கட்டணம் ஒவ்வொரு ஊராட்சியிலும் வெகுவாகக் குறைய வாய்ப்பு

இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களை அமல்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ முன்வந்தால் தமிழ்நாடு மின்சார வாரியம் அதற்கான உதவிகளையும், ஏதாவது மானியத்தையும் வழங்குவதற்கு முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய தொகுதியிலே சில குறிப்பிட்ட கிராமங்களில் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக தமிழக அரசும், மின்சார வாரியமும் தேவையான உதவிகளைச் செய்யும். ஆனால் அதற்காக ஏதாவது நிதி உதவி செய்ய முடியுமா என்று கேட்டால் அது கொஞ்சம் கஷ்டம். சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முடிந்த வரையிலே முதலீடு செய்து மின்சாரத்தை உற்பத்திச் செய்ய முன்வருகின்ற நேரத்திலே, ரூ.10 இலட்சம், 15 இலட்சம் கூடுதலாக, அவர்களே செய்துகொள்ளலாம். அப்படிச் செய்தால் இந்த அரசு அவர்களை வரவேற்கும்.

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு காற்றாலைகளின் திறனும், காற்றின் வளமும் அதிகமாக இருந்தும்கூட, காற்றாலைகளின் மின் உற்பத்தி அதிகம் இல்லாததற்குக் காரணம், காற்றாலை நிர்மாணிக்கப்பட்ட அந்தக் கட்டமைப்பில் 5-லிருந்து 50 Kilo Watt Power Micro grid பொருத்தப்படவில்லை என்பது காரணமாகச் சொல்லப்படுகின்றது. அது உண்மையா என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாளிதழ்களிலே அப்படித் தவறானத் தகவல் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் காற்றாலையை உற்பத்திச் செய்கின்ற முதலாளிகள், காற்றாலைகளை அமைத்துத் தரும்போதே, எல்லா கருவிகளையும் அதிலே பொருத்தி வைக்கிறார்கள். ஏனென்றால், அப்படி ஏதாவது குறை இருக்குமானால் அவர்களுடைய வியாபாரம் நடக்காது. ஆகவே, காற்று வீசுகின்ற நேரத்தில், மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கான அனைத்துக் கருவிகளையும் அந்தக் காற்றாலைகளிலேயே அவர்கள் பொருத்திக் கொடுக்கின்ற காரணத்தால், இந்தக் குறைபாடுகள் இதுவரையிலே தமிழ்நாட்டில் எழுந்தது இல்லை. இனியும் எழாது. அப்படி எழாமல் பார்த்துக்கொள்வதற்காகத்தான் TEDA என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அவர்கள் அதையெல்லாம் சரிபார்த்துத்தான், காற்றாலைகள் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

## பேருந்து நிலையம்

***1167—திரு. மு. அப்பாவு:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரத்தில் அருள்மிகு வரகுணபாண்டீஸ்வரர் நித்திய கல்யாணி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், ராதாபுரம் ஊராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அருள்மிகு வரகுணபாண்டீஸ்வரர் நித்திய கல்யாணி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 90 சென்ட் நிலத்தை, ராதாபுரம் ஊராட்சிக்கு வழங்குவதற்கு இந்து சமய அறநிலையத் துறை அனுமதி அளித்திருக்கிறது. இதன்படி

நிலத்திற்கான கிரையத் தொகை செலுத்தப்பட்டிருக்கிறது. பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி 6-2-2008 அன்று கோரப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தாலுகாவினுடைய தலைநகராகவும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதற்கெல்லாம் சரி என்று சொல்லிவிட்டார்கள். இன்னும் என்ன? நன்றி என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நன்றி சொல்ல வேண்டாமா? நீங்கள் அதற்குள்ளே மணியைத் தட்டி விட்டீர்களே. ராதாபுரம் தாலுகா தலைநகராகவும், அதேபோல, வட்டார வளர்ச்சி அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்கள் எல்லாம் இருந்தும், இதுநாள் வரை அங்கு பேருந்து நிலையம் அமையவில்லை. பேருந்து நிலையத்திற்கான இடமும் இதுவரை கிடைக்காமல் இருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் கேட்டபோது, வரகுணபாண்டீஸ்வரர் நித்திய கல்யாணி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான 90 செண்ட் நிலத்தைத் தருவதற்கு அனுமதி அளித்தார்கள். அதற்கான நிதி 4 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்றும் ஆணை வழங்கினார்கள். பஞ்சாயத்தில் பணம் இல்லாத காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர் சொந்த நிதியிலேயே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி அல்ல, சொந்த நிதியிலே 4 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் கட்டியதன் பயனாக, அங்குள்ள ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் அதற்கு நன்றி தெரிவிக்கும் வண்ணமாக, ராதாபுரத்தில் ஒருகாலத்தில் குடிநீர் இல்லை, எந்த வசதியும் இல்லாத பகுதிக்குக் குடிநீர் தந்தது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். ஆகவே, அவருடைய அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக சிறப்பாக பணியாற்றி வருகின்ற தளபதி அவர்கள், இதற்கு அனுமதியும் அளித்து, அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு நிதியை அளித்தமைக்கு நன்றி கூறும் வண்ணமாக ஏகமனதாக அந்தப் பேருந்து நிலையத்திற்கு முத்துவேலர் அஞ்சுகம் அம்மையார் நினைவுப் பேருந்து நிலையம் என்றும், அதன் முகப்பில் அவர்களுடைய திருவுருவச்சிலையையும் வைக்க வேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



அதற்கும் நம்முடைய மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்திருக்கின்றார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் வருகின்ற 6 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளியோடு சேர்த்து விரைவாக அந்தப் பணி செய்வதற்கு ஆணை வழங்கிய நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைக் கூறி விரைவாக அந்தப் பணியைச் செய்து தருவதோடு, அதன் திறப்பு விழாவிலும் தாங்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் நன்றி சொன்னார்கள். ஆகவே, அந்த நன்றியை ஏற்றுக்கொள்கிற அதேநேரத்தில், அதனுடைய கிரையத் தொகையாக இருக்கக்கூடிய 4 இலட்சத்து 70 ஆயிரத்து 448 ரூபாயை சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய அப்பாவு அவர்கள், சொந்த நிதியிலிருந்து வழங்கியதற்காக அரசின் சார்பில் நானும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

### ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

***8811—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 30

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிப்பது குறித்தான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தில் மலைவாழ் மக்கள் சுமார் 50 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளியில் +2–வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேரவேண்டுமானால், நாமக்கல், ஈரோடு, கரூர், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் உள்ள தனியார் பயிற்சிக் கல்லூரிகளில் அதிக பணம் கட்டி சேருகிற நிலை இருந்து வருகிறது. அந்நிலையைப் போக்க கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி என்பது பட்டப் படிப்பு முடித்தபிறகு சேருவது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் +2 பாஸ் பண்ணுபவர்கள் சேருகிற Secondary Grade Teachers Training Institute–ஐப்பற்றிக் கேட்கிறார்கள். அது பள்ளிக் கல்வித் துறை அமைச்சரைப் பொறுத்தது. ஆக, அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், நாமக்கல் மாவட்டத்தில் ஒரு அரசு கல்வியியல் கல்லூரியும், அதுமட்டுமல்லாமல் 24 தனியார் சுயநிதிக் கல்லூரிகளும் அந்த மாவட்டத்திலே இருக்கின்றன. ஆகவே, அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்குவதற்கான திட்டம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.



2008 ஜனவரி 30]

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை என்பது 3200 அடி உயரத்தில் உள்ளது. அங்கு ஆரம்பப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. அந்தப் பள்ளிகளுக்குச் செல்ல ஆசிரியர்களுக்கு பணி உத்தரவு வழங்கினாலோ, பணி மாறுதல் வழங்கினாலோ, அவர்கள் முறையாக அங்குள்ள பள்ளிகளுக்குச் செல்வதில்லை. காரணம், அவர்கள் கொல்லிமலை என்றாலே பயப்படுகிறார்கள். 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்கிற ஒரு நிலை இருந்து வருகிறது. நடந்து செல்கிற பள்ளிகளுக்குப் போகும்போது ஒரு நாள் கடந்து விடுகிறது. வாரத்தில் 5 நாள் பள்ளி என்று சொன்னால், ஒருநாள் ஊருக்குச் செல்கிற ஒரு நிலையும், ஒரு நாள் பள்ளிக்குச் செல்கிற ஒரு நிலையும், இரண்டு நாள் போக, மீதி மூன்று நாள்தான் பள்ளிக்குச் செல்கிற நிலை இருந்து வருகிறது. அந்த நிலையைப் போக்க கொல்லிமலையிலே ஆசிரியர் பயிற்சி மையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். +2 படித்துவிட்டுச் செல்கிற மாணவர்களுக்கான ஆசிரியர் பயிற்சி பட்டயப் படிப்பிற்கான அந்தப் பயிற்சிப் பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சரிடம் இருக்கிறது. அவரிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியியல் கல்லூரி என்பது தனியார்களின் பல ஆயிரக்கணக்கான கல்லூரிகள் தமிழகத்திலும், அதேபோல ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆயிரக்கணக்கிலும் உருவாக்கப்பட்டு, எதிர்கால மாணவர் சமுதாயம் பொறியியலையோ, விவசாயத்தையோ, மருத்துவத்தையோ வேறு எந்தக் கல்வியும் சென்று படிக்காத அளவுக்கு இதன்மீது நாட்டம் ஏற்பட்டு இதிலே சென்று கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மாணவர்கள் இந்த ஆசிரியர்

பயிற்சி நிறுவனங்களில் கல்லூரிக் கல்வியை முடித்த அவர்களுக்கு வேலை தரமுடியாத ஒரு நெருக்கடிக்கு அரசு உள்ளாகின்ற ஒரு மிகப் பெரிய அவலம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்திவிட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையோ அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையோ இந்த ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வியியல் கல்லூரியில் படிக்கிற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற அளவுக்கு இந்த ஆசிரியர் பயிற்சி நிலையங்களை உருவாக்குவதற்கு அரசிடம் ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கிறதா? அதேபோல் நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில்கூட இவை எண்ணிக்கையில் அடங்காமல் தொடங்கப்பட்டிருக்கின்றன; இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு ஒரு குழு அமைக்க வேண்டும் என்று கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அமைத்தார்கள். தனியார் கல்வி நிறுவனங்கள் அதற்குத் தடையாணை பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தி இருக்கிறது. தடையை நீக்குவதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதையும் பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் தமிழக அரசினுடைய அனுமதி இல்லாமலேயே தொடங்குகிற வாய்ப்புகள் இருக்கின்றன. கல்லூரிகளைப் பொறுத்தவரையில், NCTE–யிடம் அவர்கள் அனுமதி பெற்றுவிட்டு பல்கலைக்கழகங்களுடைய ஒப்புதலோடு துவக்கிவிடுகிறார்கள். தமிழகத்திலே இப்பொழுது கிட்டத்தட்ட self-financing என்ற அடிப்படையிலே 288 B.Ed. கல்லூரிகள் மட்டும் இருக்கின்றன. அரசுத் தரப்பிலே 7 கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, இவ்வளவு கல்லூரிகள் இருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் புதியதாகத் திறப்பதற்கு மாநில அரசு எந்த அனுமதியும் கொடுப்பதில்லை. இதுவரையிலும் கொடுத்ததும் இல்லை. ஆனால் அங்கு அவர்கள், விரும்புகிறவர்கள் NCTE–யிடம் அனுமதி வாங்கிக் கொண்டு வந்து பல்கலைக்கழகங்களிலே பதிவு செய்துகொள்கிறார்கள். இதுதான் நடைமுறையிலே இருக்கிற நடைமுறைக் கூற்று. ஆகவே, இதைப் பொறுத்தவரையிலே, இவற்றைத் தடை செய்து நிறுத்துவது என்பதைவிட, மாணவர்களே அங்கு போவதை நிறுத்திவிட்டார்கள் என்றால் கல்லூரிகளைத் தானாக மூடிவிடுவார்கள். ஒரு காலக்கட்டத்தில் கல்லூரிகளிலே நாம்



பார்த்தோம். Civil Engineering இருந்தது; demand இல்லை என்று சொன்னவுடன் Civil Engineering–ஐ விட்டுவிட்டு இப்போது Computer Engineering–க்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி Teachers College–லும் கொஞ்ச நாள்தான். இந்த வருடம், அடுத்த வருடம் எல்லாம் போனால் நிச்சயமாக அடுத்த ஆண்டுகளில் demand இருக்காது. இருக்கிற கல்லூரிகளிலேயே வேறு மாதிரி மாற்றிக்கொள்ள அவர்களாகவே முன்வருவார்கள் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

*முற்பகல் 10-00*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு கல்லூரியும் இல்லாத தொகுதிகளிலே, சிறப்பான survey செய்து, அந்தத் தொகுதிகளிலே கல்லூரி துவங்குவதற்கு அரசு எண்ணியிருக்கிறது என்று நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சொன்னார்கள். அதன்படியே எங்கள் தொகுதிகளில் எல்லாம் விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அந்த வகையிலே எந்தக் கல்லூரியும் இல்லாத, எந்த ஒரு தொழில்நுட்பக் கல்லூரியோ அல்லது Polytechnic என்று சொல்லப்படுகின்ற அந்தக் கல்விக்கூடமோ இல்லாத தொகுதிகளிலே ஏதேனும் ஒரு கல்லூரி ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் 7 புதிய அரசு கலைக் கல்லூரிகள் இந்த 1½ ஆண்டுகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பல கல்லூரிகளை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் இருந்தாலும்கூட, தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு அதிக தேவையிருக்கிற காரணத்தினால் அங்கேயிருக்கிற அண்ணா பல்கலைக்கழகத்தின்மூலமாகவே—மூன்றாக அண்ணா பல்கலைக்கழகம் பிரிக்கப்பட்டு அதன்மூலமாகவே—சில பொறியியல் கல்லூரிகளைத் துவக்குவதற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு, முதன்முதலாக பண்ருட்டி, திண்டிவனம், விழுப்புரம்

ஆகிய இடங்களிலே இந்தப் பொறியியல் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களின்மூலமாகத் துவக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மேலும் இந்த ஆண்டே குறைந்தது பத்தாவது துவக்க வேண்டுமென்று முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே எந்த மாவட்டங்களிலே இதுபோன்ற கல்லூரிகள் இல்லையோ அந்த மாவட்டங்களில் நிச்சயமாக இதை வழங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான செய்யாறு தொகுதியானது மாவட்டத்தின் கடைகோடியிலே இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், காஞ்சிபுரத்திற்கு மிக அருகில் இருக்கின்ற தொகுதியிலே ஒரேயொரு பொறியியல் கல்லூரி, அதுவும் தனியார் பொறியியல் கல்லூரிதான் நடந்து கொண்டிருக்கின்றது. அது கிட்டத்தட்ட காஞ்சிபுரம் எல்லையோரத்தில் இருப்பதனால் செய்யாறு பகுதி மக்களுக்கு அதனால் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, சிப்காட் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தந்த தமிழக முதல்வர் அவர்கள், மேலும் அந்தப் பகுதி மக்களுக்குப் பொறியியல் கல்லூரி தொடங்கி அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளிவீசச் செய்வாரா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏனென்றால் புலவர் கோவிந்தன் இருந்த காலத்திலேதான் அங்கே கலைக் கல்லூரி 1960-இலே ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு எந்தவிதப் பொறியியல் கல்லூரியும் அங்கே தொடங்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கு ஒரு நல்ல தீர்வு காண இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறைப் பொறுத்தவரையில் அங்கே மிகப் பெரிய ஓர் அரசு கலைக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இரண்டு முறை நானே அங்கே சென்றிருக்கிறேன். அது மட்டுமல்ல. பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் ஒரு தனியார் பொறியியல்





லூரிகூட இல்லாத மாவட்டங்களும் இருக்கின்றன. ஆகவே, ந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு படிப்படியாக வையேற்படுமானால், அதுவும் செய்யாறைப் பொறுத்தவரையில் ன்னைக்கு அருகிலே இருக்கிற பகுதி. 1½ மணி நேரத்தில் துவிடலாம். உங்களுக்கு அருகிலே, பக்கத்து மாவட்டங்களிலேயே, தனியார் கல்லூரிகள், சிறந்த கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே ய்யாறைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டத்தைப் ாறுத்தவரையில், தொகுதியைப் பொறுத்தவரையில், இப்பொழுது தற்கான அவசியம் இருப்பதாகக் கருதவில்லை. இதைவிட பசி பக்காரர்கள் நிறைய இருக்கிற காரணத்தால் அவர்களுக்குக் ாடுத்துவிட்டு, பிறகு இங்கே அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வட்டம், மேலூர் தொகுதியில் ஏற்கெனவே அரசு சார்பிலே ஓர் ிரியர் பயிற்சிக் கல்லூரி இருந்தது. அது 1975 ஆம் ஆண்டுக்கு ன்பிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த அரசு ஆசிரியர் ிற்சிக் கல்லூரியை மீண்டும் மேலூர் தொகுதியிலே தொடங்குவதற்கு மைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக ிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை மைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் பர்களே, மேலூரில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இருந்து, அது ப்பட்டதாக எனக்குத் தகவல் இல்லை. எனக்குத் தெரியாது. ப்படியிருக்குமானால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியியல் கல்லூரிகள் நடுவண் அரசினுடைய அங்கீகாரம் பெற்று நில அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் தொடங்கப்பட ண்டும். அப்படி மாநில அரசின் அனுமதி பெறாமல் பல லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றனவா? அப்படி

இயங்குகின்றவேளையில் அங்கீகாரமும், அனுமதியும் இல்லாமலேயே சில கல்லூரிகள் தொடங்கப்பட்டு, இலட்சக்கணக்கிலே பணம் கொடுத்து அதிலே சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்வு எழுத முடியாத நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறதே; அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதுகுறித்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்திலே, இந்தக் கல்வியியல் கல்லூரி சம்பந்தமான குற்றச்சாட்டுக்கு அமைக்கப்பட்ட குழுவினுடைய நடவடிக்கை என்ன? அதைச் சொல்லுகிறவேளையில் அமைச்சர் அவர்கள் இங்கே பொறியியல் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். பொறியியல் கல்லூரியினுடைய அவசியத்தை நாட்டு மாணவர்கள் உணர்ந்திருக்கின்றவேளையில் கட்டுமானங்கள் குறைந்து உபகரணங்கள், ஆய்வுக்கூட வசதி மட்டும் இருந்தால் போதும் என்ற வகையில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கிற அரசு கலை அறிவியல் கல்லூரிகளிலேயே காலை நேர வகுப்பாக அல்லது மாலை நேர வகுப்பாக பொறியியல் பாடப் பிரிவுகளைத் தொடங்கினால் ஏதுவாக இருக்கும் என்ற எண்ணம் பரவலாக மேலோங்கி இருக்கின்றது. அந்த அடிப்படையிலே மாணவர்களின் கல்வி நலன் கருதி, மாலை அல்லது காலை நேர வகுப்பாக பொறியியல் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளிலே தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசுக் கலைக் கல்லூரிகள் எல்லாம் இரண்டு ஷிப்டில்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதையும் பொறியியல் கல்லூரிகளாக மாற்றிவிடுவோம் என்று சொன்னால், Basic Sciences –அடிப்படை அறிவியல்களையோ, அடிப்படை கலைப் பாடங்களையோ படிக்கிறவர்களே இல்லாமல் சென்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். ஆகவே அந்தப் பாடத் திட்டங்களையும் நம்மால் முழுவதுமாகப் புறக்கணிக்க முடியாது. அந்தக் கல்லூரிகள் இரண்டு வேளைகளிலும் இயங்குகிற காரணத்தால், மாணவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டுகூட அதைப் பற்றி



நாங்கள் விவாதித்திருக்கிறோம். பாலிடெக்னிக் கல்லூரிகளிலேகூட அந்த 2 ஷிப்ட் முறையைக் கொண்டுவர முடியுமா என்பதையும் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். அதுபோன்ற கல்லூரிகளை வேறு இடங்களிலே தனியார்கள் நிறைய துவக்க முன்வருவார்கள் என்று சொன்னால், பாலிடெக்னிக், தொழில்நுட்பக் கல்லூரிகள், பட்டயப் படிப்புக்கான கல்லூரிகளைத் துவங்குவதற்கும் அரசு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, மாநில அரசினுடைய அனுமதி இல்லாமல் 149 கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. சில கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுடைய affiliation இல்லாமலேயேகூட செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தேர்வு எழுதுகிறபோது அந்த மாணவர்களைத் தூண்டிவிட்டு அவர்கள் போராடுகிற சூழ்நிலைகள்கூட சில இடங்களிலே உருவாகியிருக்கின்றன. அதையெல்லாம் அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது. அதுகுறித்துதான் இந்த வாரம் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அரசின் சார்பாக அனுப்பப்பட்டிருக்கிறது. உங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுடைய பட்டியலை அனுப்புமாறும், அப்படி அனுப்பப்பட்ட கல்லூரிகளில் இந்த ஆண்டு மாணவர்களை அவற்றில் அட்மிட் செய்வதற்கு முன்பாகவே, எந்தெந்தக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுடைய அங்கீகாரம் பெற்றிருக்கின்றன என்பதை பத்திரிகைகளிலே விளம்பரம் செய்யவும் இருக்கிறோம். அதன்மூலமாக மாணவர்கள் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் மட்டுமே படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூரிலே இளநிலை வேளாண்மை B.Sc. Agriculture பாடத் திட்டத்தில் தமிழ் மொழி ஒரு பாடமாக உருவான காலம் முதல் இருந்து வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) 2007-லே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆசிரியர் பயிற்சிப் பள்ளி சம்பந்தப்பட்டது கேள்வி.

**திரு. எஸ்.வி. சேகர்:** இல்லை. Education சம்பந்தமாக ஒரே ஒரு கேள்வி. Education ஆக இருப்பதனால்தான். . .

[2008 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஆசிரியர் பயிற்சிப் பள்ளி சம்பந்தப்பட்ட கேள்வி. (குறுக்கீடு) Subject வேறு. அமைச்சரே வேறு.

**திரு. எஸ்.வி. சேகர்:** அதில் தமிழ் மொழியை நீக்கிவிட்டார்கள். அதனால்தான் தமிழ் மொழியை, நமது முதலமைச்சர் கவனத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தப்பட்ட துறை அமைச்சரே வேறு. தனிக் கேள்வி போடுங்கள்.

**திரு. எஸ்.வி. சேகர்:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***28482—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பல்லடத்தில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடத்தில் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் (மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்) அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் துணை வட்டார ஆய்வகம் வேண்டுமென்று 3 ஆண்டுகளுக்கு முன்னரே கருத்துரு உள்ளது. தற்போது திருப்பூர் வட்டாரப்



2008 ஜனவரி 30]

போக்குவரத்து அலுவலகத்தில் இணைக்கப்பட்டிருக்கிற பகுதிகளில் சுமார் 18,000 டிரான்ஸ்போர்ட் வாகனங்களில் 6,000 வாகனங்கள் பல்லடத்தினுடைய பகுதியைத் தாண்டி சுல்தான்பேட்டை, பொங்கலூர், சூளூர் ஆகிய பகுதிகளிலிருந்து வருகின்றன. இந்த வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் திருப்பூர் வடக்கு, தெற்கு என்று பிரிக்கப்பட்டு வீரபாண்டிக்கு தெற்கே என்று பிரிக்கப்பட்டதாகத் தகவல் தெரிகின்றது. வீரபாண்டி என்பது ஒரு பேரூராட்சி. வாகனம் அதிகமாக இருக்கக்கூடிய பல்லடம், நகராட்சிப் பகுதியில் இருக்கக்கூடியது. இரண்டு முறை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதற்குப் பிறகும்கூட, வீரபாண்டி என்ற பேரூராட்சி திருப்பூர் தெற்கு, வடக்கு என்று பிரிக்கப்பட்டது. இது மாற்றாந்தாய்ப்போக்கு போல, பல்லடம் தொகுதி ஆளுங்கட்சி உறுப்பினர் தொகுதியாக இல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி என்ற அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டதாகக் கருதுகின்றேன். இதை மறுபரிசீலனை செய்து, உண்மையிலேயே மக்களுக்குப் பணி செய்ய வேண்டுமென்ற கருத்தோடு அது பிரிக்கப்பட வேண்டுமானால், பல்லடத்திற்கு துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வர வேண்டும் என்பதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு வேண்டாம். கேள்வியை மாத்திரம் கேளுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் இயங்கிக்கொண்டிருந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் திருப்பூர் மற்றும் பல்லடம் ஆகிய இரு தாலுகாக்கள் மட்டுமே இருந்தன. இதிலே திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அரசாணை நிலை எண் 1093 போக்குவரத்துத் துறை, நாள் 23-7-2007-ல் திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு என இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் சொன்ன பல்லடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே வந்த கோரிக்கையைப் பரிசீலித்தபோது திருப்பூரிலே மொத்தம் இருக்கிற வாகனங்களுடைய எண்ணிக்கை 2,24,000.

முற்பகல் 10-10

பல்லடம் தாலுகாவிலே 50 ஆயிரம் வாகனங்கள் இருக்கின்றன. இதிலே டிரான்ஸ்போர்ட் வாகனங்கள் திருப்பூரிலே 11 ஆயிரமும், பல்லடத்திலே 5 ஆயிரம் வாகனங்களும் இருக்கின்றன. வருவாயைப் பொறுத்தவரையில், ஒரு ஆண்டிற்கு, திருப்பூரிலே ரூ.30 கோடியும், பல்லடத்திலே ரூ.6 கோடியும் வருகிறது. Driving licence திருப்பூரிலே 1,04,000 பேரும், பல்லடத்திலே 60,000 பேரும் வைத்திருக்கிறார்கள். Conductor licence திருப்பூரிலே 1,800 பேரும், பல்லடத்திலே 600 பேரும் வைத்திருக்கிறார்கள். ஆனால், திருப்பூர் வடக்கு, தெற்கு என்று பிரிக்கின்றபோது, திருப்பூர் ஆர்.டி.ஓ. ஆபீஸ் வடக்கிலே 1,60,000 வாகனங்களும், தெற்கிலே 1,16,000 வாகனங்களும் வருகின்றன. அதனால்தான் பல்லடத்தை உள்ளடக்கி அந்த அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, திருப்பூருக்கும் பல்லடத்திற்கும் இடையில் இருக்கின்ற 17 கி.மீ. தூரத்தில், இடையிலே பல்லடத்திற்கு அருகிலே, 10-வது கி.மீட்டருக்கு அருகிலே இருக்கின்ற வீரபாண்டிபுதூர் என்ற இடத்திலே இந்த அலுவலகம் அமையவிருக்கிறது. அது திருப்பூருக்கும் புண்ணியமாக இருக்கும்; அதேபோல, அங்கேயிருக்கின்ற பல்லடத்திற்கும் அது சௌகரியமாக இருக்கும் என்ற எண்ணத்தாலும், இங்கே வாகனங்களும் அதிகமாக இருக்கின்றன என்ற காரணத்தாலும், அந்த அலுவலகம் அங்கே அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை.

நீங்கள், 'அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள், அதனால் அங்கே அலுவலகங்கள் அமைக்கப்படுவதில்லை' என்று சொல்கிறீர்கள்; அப்படிச் சொல்லவேண்டாம். நீங்கள் அமைச்சராக இருந்திருக்கும்போதே, நீங்களே அதை அமைத்திருக்கலாம். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில், 12 புதிய ஆர்.டி.ஓ. அலுவலகங்களை நாங்கள் திறந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) குஜராத்திலே சென்று பார்த்தபோது, கடந்த 30 ஆண்டுகளாக 90 அலுவலகங்கள்தான் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், நம்முடைய ஆட்சியிலே, கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, இப்போது 7 ஆர்.டி.ஓ. அலுவலகங்களும், 5 யூனிட் அலுவலகங்களும், மொத்தம் 12 புதிய அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற பல இடங்களிலே இந்த அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் வீரபாண்டிபுதூர் பேரூராட்சி என்பது ஒரு சிறிய பேரூராட்சி. பல்லடம் தாலுகாவில், வரக்கூடிய காலங்களில் கோட்டாட்சியர் அலுவலகம் வரக்கூடிய வாய்ப்புள்ளது. பொங்கலூர், சுல்தான்பேட்டை, சூளூர் போன்ற மத்தியப் பகுதிகளைக் கொண்டது. எனவே, அந்தப் பகுதிகள் இருக்கக்கூடிய பகுதியிலே உருவாக்குவதுதான் சரி என்பதை நான் கூறிக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அமைச்சர் அவர்கள், 'நீங்கள் அமைச்சராக இருக்கும்போதே அதைச் செய்திருக்கலாம்' என்று சொன்னார்கள். அது நியாயமான விஷயம் என்பதை அவரே ஒத்துக்கொள்கிறார். எனவே, மீண்டும் பரிசீலனை செய்து, வீரபாண்டிபுதூரில் இருப்பதை, இன்னும் South என்றும், North என்றும் எத்தனை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். பல்லடத்தில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வேண்டுமென்பதை மீண்டும் கோரிக்கையாக வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மூன்று அலுவலகங்கள் இப்போது திறக்கப்பட்டிருக்கின்றன; சேலம் தெற்கு என்றும், வடக்கு என்றும், சங்ககிரி பகுதியிலே தனியாகவும், பெருந்துறை பகுதியை ஒட்டியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதியிலே யார் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து இந்த அரசு செயல்படவில்லை. எந்த இடத்தில் வாகனங்கள் அதிகமாக இருக்கிறதோ, எந்த இடத்தில் மக்களுக்குச் சௌகரியம் வேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த இடத்திலேதான் திறந்திருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே கோட்டாட்சியர் அலுவலகம் வருகின்ற ஒரு பகுதியாக அந்தப் பகுதி விரிவடையப் போகின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அப்படி விரிவடையும்போது, இந்த அரசு அதைக் கருத்திலேகொண்டு, அங்கே புதிய அலுவலகம் தொடங்க முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

[2008 ஜனவரி 30

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதி, பழனியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.1 இலட்சம் வாடகையாகச் செலுத்தப்பட்டு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், துறையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஆர்.டி.ஓ. அலுவலகங்கள், யூனிட் அலுவலகங்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இடம் ஒதுக்கித் தருவார்களேயானால், அந்த இடத்தில் புதிய கட்டடங்களைக் கட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். இப்போது 12 இடங்களிலே புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பழனியிலும், நம்முடைய உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, இந்தப் போக்குவரத்து அலுவலகம் கட்ட இடம் ஒதுக்கித் தருவார்களேயானால், இந்த ஆண்டு அந்தப் பணியை எடுத்துக்கொள்ள அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில் வத்தலகுண்டில் போதுமான புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால், வத்தலகுண்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை, போதுமான புறம்போக்கு இடம் உள்ள நிலக்கோட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடத்தைக் கட்ட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் இருக்கின்ற அலுவலகத்தை, இன்னொரு



2008 ஜனவரி 30]

இடத்திற்கு மாற்றுகின்றபோது, அங்கே எதிர்ப்பு நிச்சயமாக வரும். அதனால் இதை அதிகாரிகளை அனுப்பி பரிசீலித்து, முடிவு சரியாக இருக்குமானால், அதைப் பற்றி யோசிக்கலாம்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

### கயிறு தொழிற்சாலை

***8064—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் பகுதியில் தேங்காய் நார் பொருட்கள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை அமைக்கப்படும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் தேங்காய் நார் பொருட்கள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற தொகுதி. அந்தத் தொகுதியில் எந்தத் தொழிற்சாலைகளும் அமைக்கப்படாமல், விவசாயத்தையே நம்பி இருக்கின்ற தொகுதியாக இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் அந்தத் தொகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் வேலைக்காக அருகில் இருக்கின்ற

ஆந்திராவிற்கும், கர்நாடகத்திற்கும் சிற்றாளாக கட்டுமான வேலைக்காக தினக்கூலிகளாக சென்றுகொண்டிருக்கின்றார்கள். விவசாயத்தையே நம்பியிருக்கின்ற தொகுதி. அந்தத் தொகுதியில் தென்னைத் தோப்புகள் அதிகமாக இருக்கின்றன. குடியாத்தம் தொகுதியில் இந்த அரசு கட்டாயமாக தேங்காய் எண்ணெய் உற்பத்திச் செய்கின்ற தொழிற்சாலையையும், நார் உபபொருட்கள் உற்பத்திச் செய்கின்ற தொழிற்சாலையையும் அமைப்பதற்கு அங்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதனை என்னுடைய கன்னிப் பேச்சிலேயே சொல்லியிருக்கின்றேன். அதேநேரத்தில், மத்திய அரசின் நிதியுதவியுடன் சிறு தொழில் புத்துயிரூட்டும் திட்டத்தின்கீழ் இந்தத் திட்டத்தை அரசு செயல்வடிவமாக்கும்போது வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்ற எண்ணத்தோடு சென்ற கூட்டத்தொடரில் நம்முடைய கலைஞர் அரசு ஓமலூர் தொகுதிக்கு ரூபாய் ஒரு கோடியே 17 இலட்சத்தில் கயிறு உற்பத்தித் தொழில் செய்யும் குழுமத்தை அந்தத் தொகுதிக்கு அளித்திருக்கின்றது. அதேபோல இந்தத் தொழிற்சாலையை குடியாத்தம் தொகுதியில் நிறுவுவதற்கு அரசு முன்வருமா என்றும், அதேநேரத்தில், ஆளுநர் உரையின் 19-வது பக்கத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்காக அரசு உதவிட முன்வரும் என்றும், அந்தத் தொழிலில் தனிக் கொள்கையை வெளியிடயிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் குடியாத்தம் தொகுதிக்கு தேங்காய் உற்பத்திச் செய்கின்ற அந்தப் பகுதியில் தொழிற்சாலை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதியில் தேங்காய் நார் பொருட்கள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலையை அமைப்பதற்கான திட்டம் இல்லை. எனினும், தனியார் தொழில் முனைவோர்கள் தேங்காய்ப் பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள், திட்ட அறிக்கைகள் தயாரித்தல், வங்கிக் கடனுதவி. துறை சார்ந்த ஒப்புதல்கள் பெறுதல், மானிய உதவி, சந்தை உதவி ஆகியவற்றிற்குத் தேவையான உதவிகளையும் வேலூர் மாவட்ட தொழில் மையம்மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.



மேலும், குடியாத்தம் பகுதியிலுள்ள கயிறு தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசின் திட்டமான SFRUTI எனப்படும் பாரம்பரிய தொழில்களுக்கு உயிரூட்ட நிதி என்ற திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் தமிழக அரசின் மானியம் மற்றும் பயனாளிகள் பங்கேற்புடன் ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கயிறு குழும மேம்பாட்டுத் திட்டத்தில், பொது வசதி ஏற்படுத்துதல், புதிய பொருட்களை உற்பத்திச் செய்தல் மற்றும் அதற்கான வடிவமைப்புகள் மற்றும் சந்தை வாய்ப்பு மேம்படுத்துதல் போன்ற உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. மொத்தத் திட்ட மதிப்பீடான ரூ.1.17 கோடியில் மத்திய அரசின் பங்கு ரூ.102 இலட்சம், தமிழக அரசின் பங்கு ரூ.14.5 இலட்சம். ஆகவே, இந்த அரசு, கலைஞருடைய அரசு, கயிறு மேம்பாட்டுக்காக பல்வேறு உதவிகளை எதிர்காலத்திலே செய்யும். விரைவிலே வெளிவரவிருக்கின்ற சிறுதொழில் கொள்கையில் தலைவர் அவர்கள் இந்தத் தொழில்களை மேம்படுத்துவதற்கான பல அறிவிப்புகளை அறிவிக்க இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா**: பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி காமராஜரை முதல்வர் ஆக்கிய தொகுதி. தேசியக் கொடியை உருவாக்கிய தொகுதி. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அங்கு உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நாங்கள் அந்தக் கேள்வியை முன்வைத்தோம். அதேநேரத்தில் பல கோடி ரூபாய் அந்தத் தொகுதியின் தொழில் வளர்ச்சிக்காக முன்வைத்ததாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இந்த விஷயங்கள் அந்தத் தொகுதியில் எதுவுமே நடைபெறவில்லை என்பதை என்னுடைய கருத்தாகப் பதிய வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி**: தலைவர் அவர்களே, விரைவில் நான் சொன்ன அந்த வேலைகள் எல்லாம் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

[2008 ஜனவரி 30

*முற்பகல் 10-20*

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், காவிரிப்பட்டினம் தொகுதி விவசாயிகள் நிறைந்த தொகுதியாகும். தென்னை அதிகமாக விளையும் தொகுதியாகும். இங்கு சிறு சிறு தனியார் நார் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் உள்ளன. தனியார் அல்லாது அரசு கயிறு தொழிற்சாலைகள் ஏதுமில்லை. எனது தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியாகும். எனவே, அரசு கயிறு தொழிற்சாலை அமைத்தால் வேலைவாய்ப்புகள் பெறுவதோடு, மக்கள் பயன்பெற ஏதுவாக இருக்கும். எனவே, அரசு ஒரு கயிறு தொழிற்சாலையை அமைக்க முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி தமிழக அரசின் சார்பிலே புதிதாக சிறுதொழில்கள் ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. தனியார்கள் முன்வந்தால் அதற்குரிய அத்துணைச் சலுகைகளையும் வருகின்ற புதிய சிறு குறு தொழிற்கொள்கைகளின்மூலம் அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

## விளையாட்டு மைதானம்

***31795—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், அலவந்தான்குளத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், அலவந்தான்குளத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அலவந்தான்குளத்தில் ஏழாயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அங்கு சிறுபான்மை சமுதாயத்தினரால் நடத்தப்படுகின்ற ஒரு மேல்நிலைப் பள்ளி, இருபாலரும் பயிலக்கூடிய மேல்நிலைப் பள்ளி உள்ளது. அங்கே அரசுக்குச் சொந்தமான 6 ஏக்கர் 48 சென்ட் இடமும் உள்ளது. கிராம மக்களின் விளையாட்டுத் திறனை ஊக்கப்படுத்துகின்றவிதமாக அங்கு ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் நம்முடைய அமைச்சரை தாத்தா என்றும், மாமா என்றும் அன்போடு அழைக்கக்கூடிய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, அவர்களுடைய அன்பை மேலும் ஊக்கப்படுத்துகின்றவிதமாக அவர்களுக்கு இந்த விளையாட்டு மைதானம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறவு முறைகளைப் பற்றி தாத்தா, மாமா என்று சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தளவிலே மத நல்லிணக்கத்திற்கு உதாரணமாக, ஜாதிபேதத்திற்கு அப்பாற்பட்டு ஒருவரையொருவர் அன்போடு அழைத்துக்கொள்கிற அந்தப் பாச உணர்வு அண்ணன் தம்பியாக, மாமன் மச்சானாக வாழ்ந்துகொண்டிருக்கிற, அந்த மாவட்டத்தின் மக்களுடைய பெருமையை அவர் சுட்டிக்காட்டுவதாகவே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அலவந்தான்குளத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பது பற்றிக் கேட்டார்கள். ஏற்கெனவே நெல்லை மாவட்டத்தில் மாவட்ட அளவிலே ஒரு விளையாட்டு அரங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுபோக, கல்லிடைக்குறிச்சியிலும் ஆலங்குளத்திலும் இரண்டு

ஏக்கரில் mini stadium அமைக்கப்பட்டு அது முடியுந்தறுவாயில் இருக்கிறது. இதுபோக, மேலும் இதுபோன்ற விளையாட்டு மைதானம் தேவை என்று கருதினால் ஐந்து ஏக்கர் இடம் அளித்து, அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்தால் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சருடைய ஒப்புதலைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும். மேலும் அதனுடைய திட்ட மதிப்பீட்டுத் தொகையான 30 இலட்ச ரூபாயில் பாதியை மக்களுடைய பங்களிப்பாகச் செலுத்தத் தயாராக இருப்பார்களானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பங்களிப்பான அந்த 15 இலட்ச ரூபாயைப் பெற்றுத்தந்தால் அதை உடனடியாக நிறைவேற்றித் தருவதாகத் தெரிவித்த நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் இந்திய விளையாட்டு ஆணையம் SAI Sub-Centre அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது என்று அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன். அத்தோடு சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்திடவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மத்திய அரசினுடைய விளையாட்டு ஆணையத்தைப் பற்றிக் கேட்டார்கள். ஏற்கெனவே அந்த உத்தரவு கடந்த ஆட்சிக் காலத்தில் அனுமதிக்கப்பட்டு அங்கே இடம் தேர்வு செய்யப்படாததாலும், அந்தப் பணி முடிவடையாததாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இடமில்லை என்று நெல்லை மாவட்டத்திற்கு அந்தத் திட்டத்தை மாற்றலாம் என்று பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குமரி மாவட்டத்தின் மக்களுடைய மனநிலையைக் கருத்தில்கொண்டு அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று





எங்களுக்கு உத்தரவிட்ட காரணத்தால் இப்போது குமரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வேறு இடம் பார்ப்பதற்கான உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. அவரும் இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார். அந்த இடத்தைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பரிசீலனை செய்து, மத்திய விளையாட்டு ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உடல் ஆரோக்கியத்தைப் பேண வேண்டும் என்பதற்காக, நூற்றுக்கணக்கானோர், ஆயிரக்கணக்கானோர் நடைப்பயிற்சி செய்வதை வழக்கமாக வைத்திருக்கின்றார்கள். ஆனால், பட்டுக்கோட்டை போன்ற சிறிய நகரங்களிலே, மைதானங்கள் இல்லாத இடங்களிலே சாலைகளிலேதான் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அரசு ஆய்வு செய்து, அரசு புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்தோ அல்லது தனியார் இடங்களை விலைக்கு வாங்கியோ அங்கு நடைப்பயிற்சி மைதானங்களை அமைத்துக் கொடுப்பதற்கு நமது அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில், இதுவரை நடைப்பயிற்சி மையம் என்று தனியாக எங்கும் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை; ஆனால், விளையாட்டு மைதானங்கள் இருக்கக்கூடிய இடங்களிலே அல்லது பொது இடங்களிலே இதுபோன்ற அமைப்புகளை ஏற்படுத்தி, அதிலே நடைப்பயிற்சி செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொள்வது என்பது நடைமுறையில் உள்ளது. ஆகவே, இதுகுறித்து அரசு தனியாகக் கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஜனவரி 30

39—

## மீன்பிடித் துறைமுகம்

***18639—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகளைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகளைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எப்போதெல்லாம் நல்ல திட்டங்கள் வந்திருக்கின்றதோ அப்போதெல்லாம் அவற்றிற்குப் பின்னால் ஒரு கிரியா ஊக்கியாக, காரண கர்த்தாவாக, கதாநாயகனாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கனவு. அந்த மாவட்டத்தில் வசிக்கக்கூடிய மூன்று இலட்சம் மீனவ மக்களின் ஏக்கப் பெருமூச்சு. அதற்கு இன்றைக்கு ஒரு நல்ல பதில் கிடைத்திருக்கிறது. அதற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இந்த அரசையும், துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்; அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதிக்காக கோப்புகள் சென்றிருப்பதாக அறிகிறேன். அந்த அனுமதியைத் துரிதமாகப் பெற்று அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக, இதற்கான அடிக்கல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் நாட்டப்பட வேண்டும் என்ற அந்த மாவட்ட மக்களின் ஆசை நிறைவேறுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட, அரசாணை எண் 216, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 21-12-2005-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று, மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடமிருந்து பெறப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினைத் தனியாரிடமிருந்து கையகப்படுத்தி, மீன்வளத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மத்திய அரசின் நிர்வாக அனுமதியைப் பெறும்பொருட்டு, நடப்பாண்டின் விலை விகிதத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.38 கோடியே 10 இலட்சத்திற்கு, கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன், கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்திலுள்ள குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய நிலை என்ன? அது எப்பொழுது தொடங்கப்படும்? இராஜாக்கமங்கலத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்குப் பொதுமக்கள் நிதியுதவி அளித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இதுபோன்று, முட்டத்தில் தனியார் முதலீட்டுடன் ஒரு துறைமுகம் அமையவிருக்கிறது. இந்தத் துறைமுகங்களின் பணிகள் விரைவுபடுத்தப்படுமா? அவை எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, அரசாணை எண் 150, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 1-9-2006-இன்படி ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றினை அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் இத்திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்கிட தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய அரசின் நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு, நடப்பாண்டின் விலை விகிதத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.27.10 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

அதைப்போலவே, இராஜாக்கமங்கலம், முட்டம் ஆகிய இரு தனியார் துறைமுகங்கள் அரசாணை எண் 43, மீன்வளத் துறை, நாள் 31-3-2005 மற்றும் அரசாணை எண் 2010, மீன்வளத் துறை, நாள் 13-12-2005-இன்படி மீன்பிடித் துறைமுகங்கள் BOOT திட்டத்தின்கீழ் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இரு இடங்களில் ஒன்றான முட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க எம்.எஸ். ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியைத் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டு விழா வருகின்ற 5-2-2008 அன்று நடைபெறவுள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இராஜாக்கமங்கலத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க இராஜாக்கமங்கலம் துறைமுக அபிவிருத்திக் கழகத்திற்கு ஒப்பந்த ஆணை வழங்க துறையின் சார்பில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.



**40—**

## பால் பவுடர் தொழிற்சாலை

***23747—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, மதுக்கரையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் அளவிற்குக் கோவை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் உற்பத்தி இல்லாததால் பேரூர் தொகுதி, மதுக்கரையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க தற்போதைக்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதி, மதுக்கரையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கினால் அப்பகுதி மக்களும், விவசாயிகளும் பயன்பெறுவார்கள். கோவை மாவட்டத்தில் அதிகமாக பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஈரோடு, மதுரை, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில் திருவண்ணாமலையிலும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆகவே, மதுக்கரையிலோ அல்லது பச்சாபாளையம் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலோ பால் பவுடர் தொழிற்சாலை தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் நாளொன்றுக்கு சராசரியாக இரண்டு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், உள்ளூர் விற்பனைக்கு நாளொன்றுக்கு 1.85 இலட்சம் லிட்டர் போக மீதியுள்ள உபரி பால், பால் உபபொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கத் தேவையான பால் உற்பத்தி கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் இல்லாததால், பேரூர் தொகுதி, மதுக்கரையில் தற்போதைக்கு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மதுக்கரை அருகிலுள்ள பச்சாபாளையம் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் தினமும் இரண்டரை இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, கோவை மாவட்டம், திருப்பூரில் கொள்முதல் செய்யப்படும் பால் ஈரோட்டுக்கு அனுப்பப்படுகிறது. அதேபோல, விவசாயிகளுக்குப் பால் கொள்முதல் விலையாக அரசு அதிகபட்சமாக ரூ.10.45 கொடுக்கிறது. ஆனால், தனியார் பால் கொள்முதல் செய்பவர்கள் ரூ.11.45, அதாவது ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறார்கள். மாட்டுத் தீவனம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே ரூ.390 ஆக இருந்தது. தற்போது இரண்டு மாதங்களுக்கு முன்னால் அது ரூ.498 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பால், திருப்பூர் போன்ற நகரங்களிலிருந்து ஈரோடுக்கு செல்கிறது. அதையெல்லாம் தடுத்து, கோவை மாவட்டத்திலே, அந்தப் பாலை எல்லாம் சேர்த்து, பயன்படுத்தினால் கண்டிப்பாக இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். விவசாயிகளுக்குப் பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

அதேபோல, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலமாக கறவை மாடுகள் வாங்க 4 சதவிகித வட்டியில் கடனுதவி வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கடனுதவி



வழங்கப்படுவதில்லை. எனவே, டாப்சிட்கோ லோன்மூலம், 4 சதவிகித வட்டியில் கறவை மாடுகள் வாங்க கடனுதவி வழங்கவும், கோவை மாவட்டம் பச்சாபாளையம் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை விரிவாக்கம் செய்யவும், பால் பவுடர் தொழிற்சாலை தொடங்கவும், பால் உற்பத்தியாளர் சங்க ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தவும், இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 10 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சுமார் 20 கோடி ரூபாய் தேவைப்படும். அதற்கு சுமார் ஒரு இலட்சம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. திருவண்ணாமலையில் நாளொன்றுக்கு இரண்டரை இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட 20 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை சுமார் 40 கோடி ரூபாய் செலவில் அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நபார்டு வங்கியின்மூலமாகவும், மாநில அரசுமூலமாகவும் நிதியுதவி பெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு ஈரோடு மாவட்டத்தில் 30 மெட்ரிக் டன் பால் பவுடர் தொழிற்சாலை, மேலும் 10 மெட்ரிக் டன் பால் பவுடர் தொழிற்சாலையும் உள்ளது. மதுரை, சேலம், தருமபுரியில் தலா 10 மெட்ரிக் டன் பால் பவுடர் தொழிற்சாலையும் உள்ள காரணத்தினால் தற்போதைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2008 ஜனவரி 30

## 2. தகவல் கோரல்

### (அ) திருவொற்றியூர், எம்.ஆர்.எப். நிறுவன கதவடைப்பு

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே…

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

சென்னை திருவொற்றியூரிலுள்ள எம்.ஆர்.எப். டயர்ஸ் தயாரிக்கும் நிறுவனம் திடீரென கதவடைப்பு செய்யப்பட்டதால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. பி. பலராமன் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சி. ஞானசேகரன்; பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு ஜிகே மணி, திரு தி. வேல்முருகன், திரு கி. ஆறுமுகம், திரு மு.க. பெரியசாமி, திரு. கோ. எதிரொலி மணியன், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. கே.எல். இளவழகன், திரு. பெ. கண்ணன், திருமதி பெ. கமலாம்பாள், திரு. வீ.ஏ.டி. கலியவரதன், திரு. வை. காவேரி, திரு. அ. தமிழரசு, டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. டி. மூர்த்தி, திரு. த.அ. மேகநாதன், திரு. தி.க. ராஜா, திரு. இல. வேலுசாமி, திரு. கே.வீ. ராமநாதன்; இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. தி. இராமசாமி, திரு. சு. குணசேகரன், திரு. எஸ். இராசசேகரன் ஆகியோர் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம். முதலில் அ.தி.மு.க. சார்பில் (குறுக்கீடுகள்) யார் பேசப் போகிறார்கள்? (குறுக்கீடுகள்)

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்வதை என்னவென்று கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள்.



2008 ஜனவரி 30]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்த அலுவல் முடிந்தபிறகு அதனை எடுத்துக்கொள்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவெல்லாம், இல்லை. பிறகு பார்ப்போம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இப்போது சொல்லட்டுமா? நான் இப்போது சொல்லிவிடுகிறேன். அதற்குரிய பதிலை பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பேசுகிறீர்களா, இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. இது வேறு, நான் zero hour-லே இப்போது எழுப்புகிறேன். நீங்கள் அதனை எடுத்துக்கொள்வதும் எடுக்காததும் உங்கள் இஷ்டம். நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதனை இப்போது எடுத்தாகிவிட்டது. இதில் பேசப்போகிறீர்களா, இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. நான் சொல்வது, நேற்றைக்கு முன்தினம் கொடுத்தது…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி சார்பாக யாராவது பேசப் போகிறார்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) நான் எடுத்ததில் முதலில் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அதைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இப்போது எடுத்ததில் முதலில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) No. (குறுக்கீடுகள்) அதற்கப்புறம் அதைக் கேட்கலாம். (குறுக்கீடுகள்) இப்போது நான் எடுத்ததில் முதலில் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதை எடுத்ததற்குப் பிறகு அதுகுறித்து என்னவென்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் கட்சி சார்பாக யார் பேசப் போகிறார்? (குறுக்கீடுகள்) சரி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** சொல்கிறேன், சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னெடுங்காலமாக வடசென்னை பகுதிக்குட்பட்ட திருவொற்றியூர் தொகுதியில், எம்.ஆர்.எப். தொழிற்சாலை இயங்கிவருகிற நிலையில், எம்.ஆர்.எப். நிறுவனத்தினுடைய வளர்ச்சி என்று சொல்லும்போது, தொழிலாளர்களுடைய பங்குதான் அந்த நிறுவனத்தினுடைய வளர்ச்சிக்குக் காரணம் என்பது யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்றாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், தொழிலாளர்கள்

தங்களுடைய வியர்வையைச் சிந்தி உழைத்த உழைப்பின் காரணமாக அசுர வேக வளர்ச்சியை எம்.ஆர்.எப். நிறுவனம் எட்டியுள்ளது. ஆண்டு ஒன்றிற்கு, 5,014 கோடி ரூபாய் turn over செய்கின்ற ஒரு சூழ்நிலையையும், வருடத்திற்கு 600 கோடி ரூபாய் அளவிற்கு இலாபத்தை ஈட்டுகின்ற ஒரு நிலையையும், நம்முடைய தொழிலாளர்கள் அளித்திருக்கின்ற ஒரு சூழ்நிலையில், ஒரு பெரிய பிரச்சினை குறித்து அந்தத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. வருடம்தோறும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய அந்த C.M.D.-Chairman-cum-Managing Director Award என்று சொல்லக்கூடிய ஒரு சொற்பத் தொகை தொழிலாளர்களுக்கு நிறுத்திவிட்டதன் காரணமாக, அந்தக் கோரிக்கையை முன்வைத்ததன் காரணமாக, நிர்வாகம் சங்க நிர்வாகிகள் 2 பேரை suspend செய்துள்ளதோடு, 26 சகத் தொழிலாளர்களையும் suspend செய்து, 2 சகத் தொழிலாளர்களையும் dismiss செய்துள்ளது. Dismiss செய்ததோடு மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 59 நாள் தொடர்ந்து சட்டவிரோதமாக lock-out என்று சொல்லக்கூடிய அளவிற்கு கதவடைப்பைச் செய்து, அதன்மூலம் 1,750 தொழிலாளர் குடும்பங்கள் இன்றைக்கு நடுத் தெருவிலே வறுமையிலே வாடிக்கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது.

*முற்பகல் 10-40*

M.R.F. நிறுவனத்தைப் பொறுத்தவரையிலே, அவர்கள் பாகிஸ்தானில் இல்லை, ஆப்கானிஸ்தானில் இல்லை, அமெரிக்காவில் இல்லை, நம்முடைய தமிழ்நாட்டிலேதான் இருக்கின்றார்கள். ஆனால், அந்த நிறுவனம் இந்தச் சட்டவிரோத கதவடைப்பை செய்தபோது, தொழிலாளர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன், 2 அரசாணைகளைப் போட்டார்கள். அந்த 2 அரசாணைகளைக்கூட அந்த நிறுவனம் மதிக்காமல் கிடப்பிலே போட்டு, எங்களை ஒன்றும் செய்ய முடியாது, எந்த அரசும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்கின்ற வகையிலே அந்த நிறுவனத்தினுடைய போக்கு இருக்கின்றது. இதில் தொழிலாளர்கள் மத்தியில் என்ன சந்தேகம் என்று சொன்னால், ஏதோ அரசாங்கம் அடிப்பது போல் அடிக்கட்டும், அழுவதுபோல் நாங்கள் அழுகிறோம் என்று சொல்லி பேருக்கு நிறுவனத்தைத் திருப்தி செய்ய வேண்டும் என்ற வகையிலே இந்த 2 அரசாணைகளைப் போட்டுவிட்டு, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்கின்ற பழமொழிக்கேற்ப, ** ஒரு அவல நிலைதான் இன்றைக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இருந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 59 நாட்கள் ஆகிவிட்ட ஒரு சூழ்நிலையில், இனியும், தொழிலாளர்களைப் பரிதவிக்கவிடாமல் அந்த நிர்வாகத்தையும், தொழிலாளர்களையும் அழைத்துப் பேசி, உடனடியாக அந்த M.R.F. நிறுவனத்தைத் திறந்து தொழிலாளர்களுக்கு வாழ்வை அளிக்கும்படி கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூரில் பல ஆண்டுக் காலமாக இயங்கி வந்த M.R.F. தொழிற்சாலை. 59 நாட்களுக்கு மேலாக மூடப்பட்டு, இப்பொழுது தொழிலாளர்கள் எல்லாம் பணிக்குச் செல்ல முடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. அவர்களிடையே ஒரு பதட்டம் நிலவிக்கொண்டிருக்கிறது. அரசாணைகளைப் போட்டும், அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியும் இதைத் திறப்பதற்கான முயற்சிகள் ஏதாவது மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் மூலமாக எடுக்கப்பட்டதா? நிர்வாகம் உடனடியாக இந்த ஆயிரம் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கின்ற ஒரு முயற்சியை எடுத்திருக்கிறதா? இதுவரை எடுக்கவில்லை என்று சொன்னால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு, எப்படியாவது அந்த நிறுவனத்தைத் திறக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அங்கே பல ஆண்டுக் காலமாகப் பணியாற்றிய தொழிலாளர்கள் பணியை இழந்துகொண்டிருக்கிறார்கள். சில நாட்களாக தொழிற்சாலைகளில் என்ன trend போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இப்பொழுது சென்னையைச் சுற்றி ஒரு ஏக்கர் 5 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய் என்று விலை உயர்வாகிவிட்ட காரணத்தால், நிறுவனத்தை மூடி, நிலத்தை விற்று பணத்தை எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்ற நிலைதான் இப்பொழுது அந்த முதலாளிகளுக்கு வந்திருக்கிறது. இப்படியே போகும் என்று சொன்னால், இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு, இவை எல்லாம் real estate இடங்களாக மாறிவிடக்கூடிய ஒரு அபாயம் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, எப்படியாவது இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க வேண்டும்.

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஜனவரி 30

ஏனென்றால், இப்படிப்பட்ட தொழிற்சாலைகள்மூலம் நிறைய tyre-கள் நமக்குத் தேவைப்படுகின்றன. நாகர்கோவில் போன்ற பகுதிகளிலே கிடைக்கக்கூடிய ரப்பரை எல்லாம் இவர்கள் கொள்முதல் செய்து, நிறைய tyre, tube போன்றவற்றையெல்லாம் தயார் செய்து, குறைந்த விலையில் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இருக்கிற தொழிற்சாலைகளையெல்லாம் மூடிவிட்டு, நிலம் மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இடத்தை விற்று எடுத்துக்கொண்டு ஓடிப் போய்விடலாம் என்ற ஒரு மனப்போக்கு இன்று நம்முடைய சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளிலே வந்திருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தலையிட்டு எப்படியாவது அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த M.R.F. . . . .

*முற்பகல் 10-45*

## 3. அறிவிப்பு

### தியாகிகள் தினத்தையொட்டி தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தியாகிகள் தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று, 30-1-2008 காலை 11 மணிக்கு தலைமைச் செயலக பிரதானக் கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் 'தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி' செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் 11-15 மணிக்குக் கூடி, எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ளும். ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.

*பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*



*முற்பகல் 11-15*

*(பேரவையின் அழைப்பு மணி ஒலிக்கப்பட்டது)*

*முற்பகல் 11-20 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) திருவொற்றியூர், எம்.ஆர்.எப். நிறுவன கதவடைப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, திருவொற்றியூரில் இயங்கி வருகின்ற எம்.ஆர்.எப். நிறுவனம், 1957-இல் வெறும் 10 ஆயிரம் ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்டு, இன்றையதினம் 5,500 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு இருக்கிறது. பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், அன்றைய அரசாங்கத்தால் பல்வேறு நிலைகளில் ஆதரவு தரப்பட்டு, நிறுவப்பட்ட அந்த நிறுவனம் இன்றையதினம் 800 நிரந்தரத் தொழிலாளர்களையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களையும் மற்றும் apprentice -களையும் வைத்துக்கொண்டு இயங்கி வருகின்ற அந்த நிறுவனம், சமீபத்தில் 40 கோடி ரூபாய்க்கு உற்பத்தியைத் தொடங்குவதற்கான புதிய machine-ஐக் கொண்டு வந்து, அதில் நிரந்தரத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்காமல், அவர்கள் அதை இயக்குவதற்கு அனுமதி அளிக்காமல், apprentice-ஆக இருக்கின்றவர்களையும், ஒப்பந்தத் தொழிலாளர்களையும் வைத்து அந்த நிறுவனம் அதை இயக்குவதற்கு முயற்சி எடுத்தபோது, அங்கிருக்கின்ற நிரந்தரத் தொழிலாளர்கள், இதனால் மிகப் பெரிய ஆபத்து நேரிடும்; கை, கால்கள் இழக்க நேரிடும்; கண் பார்வை இழக்க நேரிடும், ஆதலால் நிரந்தரத் தொழிலாளர்கள் இதை இயக்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அவர்களோடு நீங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையையும், அதனுடைய அதிபராக இருக்கின்றவர் ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் அளித்து வந்ததை நிறுத்தியதையும், ஆகிய இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்தபோது, அந்த எம்.ஆர்.எப். நிறுவனம், அரசினுடைய அனுமதியும் பெறாமல், முன்னறிவிப்பும் தராமல், திடீரென்று சட்டவிரோத கதவடைப்பை

[திரு. தி. வேல்முருகன்] [2008 ஜனவரி 30

நடத்தியுள்ளது. அவ்வாறு சட்டவிரோத கதவடைப்பு நடத்தியதைத் தட்டிக் கேட்ட தொழிற்சங்கவாதிகளையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் அந்த நிருவாகம் பழி வாங்கியிருக்கிறது. சஸ்பெண்ட் செய்திருக்கிறது, இரண்டு பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கின்றார்கள். 28 நபர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் ஆட்சிக் கட்டிலில் இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினரும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும் அன்பான வேண்டுகோளையும், கோரிக்கைகளையும் வைத்து, ஒரு சுமுகமான நிலைக்கு அந்த நிறுவனம் வரவேண்டுமென்று எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு, தான்தோன்றித்தனமாக, தமிழகத்தில் வாழ்ந்துகொண்டு, தமிழகத்தில் உற்பத்தி செய்துகொண்டு, தமிழகத்திலே கோடிக்கணக்கான ரூபாயை கொள்ளையடித்து சம்பாதித்துக் கொண்டிருக்கின்ற அந்த நிறுவனம், அதன் உற்பத்திக்கு அடிகோலாக, முதுகெலும்பாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்க நினைப்பதும், அழிக்க நினைப்பதும், பழி வாங்க நினைப்பதும், காவல் துறையையும், குண்டர்களையும் கொண்டு அவர்களை மிரட்டுகின்ற ஒரு பாணியை கடைபிடித்து வருகின்றது. 1957 இல் தொடங்கப்பட்டு முதன்முதலில் இந்திய நாட்டின் இன்றைய நிதியமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, அதிலிருந்து தொழிற்சங்க மாமேதைகளெல்லாம் தலைவராக இருந்து, இப்போது 2007 இல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தா. பாண்டியன் உட்பட, திரு. குசேலர், திரு. இரங்கராஜன், திரு. குமாரமங்கலம் போன்ற எண்ணற்ற தலைவர்கள், தலைவராக இருந்தவர்கள், இத்தனை இயக்கத்தினுடைய முன்னோடிகளும் அங்கே வாயிற்கூட்டத்திலே கலந்துகொண்டிருக்கின்றார்கள். பிரதான எதிர்க்கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜெயக்குமார் அவர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற நானும், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் தலைவராக இருக்கக்கூடிய திரு. தொல். திருமாவளவன் அவர்களும், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளும் ஒரே அணியில் இருந்து, நிர்வாகமே கதவடைப்பை திரும்பப் பெற்றுக்கொண்டு, நிறுவனத்தைத் திறந்து தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுங்கள்,



2008 ஜனவரி 30] [திரு. தி. வேல்முருகன்]

பழிவாங்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களுடைய சஸ்பெண்ட் உத்தரவுகளை இரத்து செய்யுங்கள் என்று சொன்னபோதும், அடங்காமல், அவர்கள் திரும்பவும் அந்தக் கதவடைப்பை 60 நாட்களாக தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-25*

இந்த வேளையில்தான், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசால், தொழிலாளர் ஆணையர்மூலம் சொல்லப்பட்டிருக்கிறது; உடனடியாக தொழிலாளர்களை பேச்சுவார்த்தைக்கு அழையுங்கள், அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துங்கள், பழிவாங்கப்பட்டு, சஸ்பெண்ட் செய்யப்பட்டதை உடனடியாக இரத்து செய்யுங்கள் என்று அறிவுறுத்தியும்கூட அவற்றையெல்லாம் நிர்வாகம் கண்டுகொள்ளவில்லை.

அதற்கு அடுத்தாற்போல் இரண்டு அமைச்சர்களும் பிரச்சினையைத் தீர்க்க ஒரு சுமுகமான முன்முயற்சி எடுத்தபோது, இரண்டு அமைச்சர்களுடைய கருத்துகளையும் கொஞ்சம்கூட காதில்கேட்டுக்கொள்ளாமல் இன்றைக்கு தான்தோன்றித்தனமாக அந்த நிறுவனம் தன் செயலைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அரசு 655, 656 என்கிற இரண்டு அரசாணைகளை வெளியிடுகிறது. தமிழ் நாட்டிலே இருக்கிற தனியார் நிறுவனம், இன்றைக்கு நம்முடைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனத்தின் மின்சாரத்தைக் கொண்டு, நகராட்சியினுடைய தண்ணீரைக்கொண்டு, நம்முடைய சாலையைக் கொண்டு, அடிப்படைத் தேவைகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு கோடிக்கணக்கிலே இலாபம் ஈட்டுகின்ற நிறுவனம், இந்த நாட்டினுடைய அமைச்சர் பெருமக்களுடைய கருத்துகளையும், ஆலோசனைகளையும், இந்த அரசினுடைய ஆலோசனைகளையும், தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளுடைய தலைவர்களின் ஆலோசனைகளையும், வாயில் கூட்டத்தில் விடுத்த வேண்டுகோள்களையும், தூக்கி எறிந்துவிட்டு இன்றைய நாள் வரையிலும் கதவடைப்பு செய்திருக்கிறது.

சஸ்பெண்ட் செய்யப்பட்டதை இரத்து செய்யவில்லை என்கிற கொடுங்கோல், சர்வாதிகார மேலாண்மைத் தன்மையை அந்த நிறுவனம் கடைபிடித்துக்கொண்டிருக்கிறது. இறுதியாக அரசினுடைய தொழிலாளர் துறையினுடைய செயலாளர் அவர்கள் அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், தமிழக அரசின் ஆணையையும்

எதிர்த்து ஒரு தனியார் நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை கோருகின்றது. சென்னை உயர்நீதிமன்றம் தடை தர மறுக்கிறது. அரசு எடுத்த முடிவு சரியான முடிவு என்கிறது. தமிழகத்தினுடைய வரலாற்றில் ஒரு தனியார் நிறுவனம் மூடப்பட்ட 18 நாட்களில் அரசு எடுத்த பெரும் முயற்சியின் காரணமாக, தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய அந்த உத்தரவுக்கு இணங்க அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். உடனடியாக நீங்கள் திறக்க வேண்டும், சஸ்பென்ட் செய்யப்பட்டவர்களைத் திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தும்கூட அதையும்கூட தூக்கி எறிந்திருக்கிறார்கள். அத்தனை உத்தரவுகளும் இன்றைக்கு என்னுடைய கையிலே இருக்கின்றன. ஆனால், எவ்வளவு சொல்லியும் இந்த நாட்டினுடைய எதிர்க்கட்சிகளும், பிரதான ஆளும் கட்சியும், கூட்டணிக் கட்சிகள் என்று அனைத்தும் ஒட்டுமொத்த தமிழகமே குரல் கொடுத்தபோதும், அரசு குரல் கொடுத்தபோதும், அமைச்சர்கள் குரல் கொடுத்தபோதும், உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோதும், இன்னும் சொல்லப்போனால், அரசினுடைய ஆணைகளையும், எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, நான் வைத்ததுதான் சட்டம், நான் நினைப்பதுதான் நடக்கும் என்று தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டிருக்கிறது எம்.ஆர்.எப். நிறுவனம்.

உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு பேச்சுவார்த்தையின்மூலமாக ஒரு சுமுக தீர்வு எட்டப்படுவதற்கும், சஸ்பென்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களுடைய வாழ்வு பாதிக்கப்படாத வகையில் வேலை தருவதற்கும், உடனடியாக ஆலையைத் திறப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும், சட்ட விரோதமாக, அரசின் விதிமுறைகளுக்கு, தொழிலாளர் சட்ட விதிமுறைகளுக்கு எதிராக கதவடைப்பு செய்திருக்கின்ற நாட்களுக்கு சம்பளத்துடன் விடுப்பு அளித்து அவர்கள் ஆலையைத் திறப்பதற்கு ஆணையிட வேண்டும். அத்தனை அமைச்சர்களையும் ஏமாற்றிய இந்த நிர்வாகத்தைக் கண்டிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடி தலையீட்டின்கீழ் இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் மூத்த அமைச்சர்களைக்கொண்ட குழுவை அமைத்து உடனடியாகத் தீர்வு காணவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய வேண்டுகோளை வைக்கின்ற அதேநேரத்தில், இந்த நிறுவனத்தினுடைய வரலாறு என்பது, அரக்கோணத்தில் இருக்கின்ற எம்.ஆர்.எப். நிறுவனத்தில் 14 ஆண்டுகளாக 50-க்கும் மேற்பட்டவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டைம் ஆகிவிட்டது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தமிழகத்திலே இருக்கின்ற மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் எல்லாவற்றிலும் தீர்ப்பு வழங்கியும் மதிக்காத அந்த நிறுவனம், ஜெனிவாவில் இருக்கின்ற I.L.O. என்று சொல்லக்கூடிய உலக தொழிலாளர் நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் இருக்கிறது. தமிழக அரசின் தொழிலாளர் ஆணையம் கண்டித்திருக்கிறது. கண்டித்திருக்கிறது என்றுகூட நான் சொல்லமாட்டேன், வேண்டுகோள் வைத்திருக்கிறது. தீர்வு எட்டப்பட வேண்டும். அரக்கோணம் எம்.ஆர்.எப். பிரச்சினை 14 ஆண்டுகால பிரச்சினை. தொழிலாளர்கள் நட்ட நடுவீதியிலே கஞ்சிக்கு வழியில்லாமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; எல்லாவற்றையுமே காதுகொடுத்துக் கேட்பதில்லை. எதுவும் செய்வதில்லை. நான் வைத்ததுதான் சட்டம் என்கிற ஆணவத் திமிரோடு இருக்கின்ற அந்த நிறுவனத்திற்குச் சரியான பாடம்புகட்டி, தொழிலாளர் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நேரடி தலையீட்டில் அந்த நிறுவனம் திறக்கப்படவும், அந்த நிறுவனத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய மனதிலே ஒரு மிகப் பெரிய ஆதங்கம் இருக்கிறது. அந்த ஆதங்கம், நிறுவனம் சீக்கிரம் திறக்கப்பட வேண்டும்; அரசு தலையிட வேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** சீக்கிரம் திறக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1957 ஆம் ஆண்டு திருவொற்றியூர் பகுதியிலே அடிப்படை யூனிட்டாக திறக்கப்பட்ட M.R.F. நிறுவனம் 59 நாட்களாக தான்தோன்றித்தனமாகக்

கதவடைப்பைச் செய்திருக்கிறது. வெறும் பலூன் கம்பெனியாக துவக்கப்பட்ட M.R.F. நிறுவனம் இன்றைக்கு டயர் உற்பத்தியில் ஆசியாவிலேயே மிகப் பெரும் நிறுவனமாக மாறியதோடு மட்டுமல்லாமல் 5,500 கோடி ரூபாய்க்கும் அதிகமான விற்றுமுதலோடு, 600 கோடிக்கும் அதிகமான இலாபத்தோடு செயல்படக்கூடிய இந்த நிறுவனம் டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி நிருவாகத்தினுடைய தன்னிச்சைப் போக்கினால் கதவடைப்பு நடத்தப்பட்டு, 59 நாட்களாக 1,500-க்கும் அதிகமான தொழிலாளர்கள் நிறுவனத்தைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கைகளுக்காகப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கதவடைப்பை நிருவாகம் தன்னிச்சையாகச் செய்ததற்கு எதிராக M.R.F. தொழிற்சாலையில் இருக்கக்கூடிய தொழிற்சங்கம் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து சென்னை உயர் நீதிமன்றம் M.R.F. நிறுவனம் செய்திருக்கக்கூடிய கதவடைப்பு, சட்டவிரோதமான கதவடைப்பு என்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கியதற்குப் பின்பும் அந்த ஆலை திறக்கப்படாமல் இருக்கிறது.

மாநிலத்தினுடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகத் தலையிட்டுப் பேசியதற்குப் பின்பும்கூட அந்நிறுவனம் திறக்கப்படவில்லை. மாநில அரசாங்கத்தின் சார்பாக இரண்டு அரசாணைகள் வெளியிட்டதற்குப் பின்பும்கூட இன்றைக்கு அந்த நிருவாகம் விடாப்பிடியாக நிறுவனத்தைத் திறப்பதற்குப் பதிலாக கதவடைப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த நிறுவனத்தினுடைய Chairman அவர்கள் பெயரிலே வருடந்தோறும் தீபாவளிக்கு 2 ஆயிரம் ரூபாய் Chairman Award என்று அந்த நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த Award இந்த ஆண்டு நிறுத்தப்பட்ட காரணத்தினால், Chairman Award கொடுக்கப்பட வேண்டும், அதேபோன்று நிரந்தரப் பணிகளில் apprentice–களைப் பயன்படுத்தக் கூடாது, தினக்கூலிகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற அரசினுடைய சட்டம் அமலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தொழிற்சங்கம் வலியுறுத்தியது. அரசாங்கம் வலியுறுத்த வேண்டிய ஒரு கோரிக்கை இன்றைக்கு தொழிற்சங்கத்தால் வலியுறுத்தப்பட்ட காரணத்தினால், Chairman Award என்று கொடுக்கப்பட்ட, 2 ஆயிரம் ரூபாய் மறுக்கப்பட்டதால்,



அதற்கான கோரிக்கையை வைத்த காரணத்தினால் நிருவாகம் தன்னிச்சையாக நிறுவனத்தை கதவடைப்புச் செய்திருக்கிறது. ஏதோ சென்னை, திருவொற்றியூரில் இருக்கக்கூடிய நிறுவனம் மட்டுமல்ல, இவர்களுக்கு அரக்கோணத்தில் இருக்கக்கூடிய யூனிட்டிலுள்ள தொழிலாளர்களும் தொடர்ச்சியாகப் பழிவாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கோரிக்கையை வைத்த காரணத்தினால் தொழிற்சங்கத்தினுடைய இரண்டு தலைவர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 28 தொழிலாளர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு இருப்பதோடு, 2 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் இன்றைக்கு திருவொற்றியூர் பகுதியிலே உள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் எல்லாம் M.R.F. டயர் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய தொழிற்சங்கத்திற்கு ஆதரவாக, தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் தங்களது ஆதரவுகளை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் இதைக் கணக்கில்கொண்டு, தமிழகத்தினுடைய முதல்வர் மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் உடனடியாக M.R.F. தொழிற்சாலையைத் திறப்பதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். அங்கே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கும், 59 நாட்கள் தன்னிச்சையான கதவடைப்பிற்கு சம்பளத்துடன்கூடிய விடுப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள M.R.F. ஆலை நிருவாகம் 3-12-2007 ஆம் தேதி சட்ட விரோதமாக கதவடைப்பைச் செய்துள்ளது. M.R.F. ஆலையில் பயிற்சிக்காக வரும் பயிற்சியாளர்களை நேரடியாக உற்பத்திக்கான தகுதி படைத்த தொழிலாளர்களைப் போல வேலையில் ஈடுபடுத்துகிறார்கள். அபாயகரமான இயந்திரங்களில் பணிபுரிய வைக்கிறார்கள். அதனால் விபத்து ஏற்படுகிறது. இதைத் தவறு என்று சுட்டிக்காட்டியதற்காக சங்கத்தின் தலைவர்கள், செயற் குழு உறுப்பினர்கள் உள்பட

[திரு. சு. குணசேகரன்] [2008 ஜனவரி 30

28 தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்தார்கள். இத்தகைய ஜனநாயக விரோதச் செயலை M.R.F. சங்கத்தின் தலைவராக உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் திரு. தா. பாண்டியன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த நிலையில் தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆலை நிருவாகத்தின் தவறான நடவடிக்கையைச் சுட்டிக்காட்டி துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவருடைய வழிகாட்டுதல்களையும் மீறி நிருவாகத்தின் பழி வாங்கும் செயல் தொடருகிறது. தொழிலாளர் நல ஆணையர் 28-11-2007 ஆம் தேதி நிருவாகத்தினுடைய ஆணையை இரத்து செய்தும் இந்த நிலை தொடருகிறது. மேலும் தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையையும் ஏற்காமல் ஒருதலைப்பட்சமாக தொழிலாளர்களைப் பழி வாங்கும் நோக்கோடு 3-12-2007 ஆம் தேதி கதவடைப்பும் செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

இத்தகைய நடவடிக்கைகள் தமிழகத்தின் தொழிலாளர்கள் நலனுக்கு நல்லதல்ல. இத்தகைய போக்குகளைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழகத்திலே அரசின் சார்பில் 3,000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இருக்கிற நிலையிலும் அரசுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான வாகனங்கள் இருக்கிற நிலையிலும், இன்றைக்கு நாம் தனியாரிடம் டயர் போன்றவற்றை வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் M.R.F. நிருவாகத்தினுடைய தான்தோன்றித்தனமான செயலைத் தடுத்து நிறுத்துகிற வகையில், அந்த ஆலையை அரசே உடனடியாக ஏற்று நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். உலகமயமாக்கல் கொள்கை வந்ததற்குப் பின்னால், இன்றைக்கு தொழிலாளர்களுடைய நலன் கொள்கை புறக்கணிக்கப்படுகிறது என்பதை இந்தியாவிலும், தமிழகத்திலும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில், M.R.F. போன்ற நிறுவனங்களின் இப்படிப்பட்ட செயலை, அரசு, உயர்நீதிமன்றம் எல்லா அமைப்புகளையும் மீறி, தான்தோன்றித்தனமாக இப்படிப்பட்ட தொழிலாளர் விரோத நடவடிக்கையை, நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கக் கூடாது. எனவே, பல்வேறு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வெளி முதலீட்டில் வந்திருக்கிற நிலையில், அவர்கள் பாடம் கற்கிற விதத்திலும், தமிழகத்தினுடைய



2008 ஜனவரி 30] [திரு. சு. குணசேகரன்]

தொழிலாளர்களுடைய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், இந்த ஆலையை அரசே ஏற்று நடத்துவதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூரில் M.R.F. நிறுவனம் அமைந்து உள்ளது. இந்த நிறுவனத்தில் டயர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிறுவனத்தில் 790 நிரந்தரத் தொழிலாளர்கள், 320 பயிற்சியாளர்கள், 59 தகுதிகாண் பருவத்தினர் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிறுவனத்தில் M.R.F. தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கம் இயங்கி வருகிறது. 31-10-2007 அன்று முதல், இரவு shift-ல் பயிற்சியாளர்களை வைத்து F.270 என்ற இயந்திரத்தினை இயக்கியதை ஆட்சேபித்த 28 தொழிலாளர்களை நிர்வாகம் தற்காலிக வேலைநீக்கம் செய்தது. நிர்வாகத்தின் செயலை ஆட்சேபித்து தொழிலாளர்கள் மிகைப் பணி–over time செய்யவில்லை. இப்பிரச்சினையில் தொழிலாளர் ஆணையர் தலையிட்டு 28-11–2007 அன்று தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் விசாரணையை நிலுவையில் வைத்து, தற்காலிக வேலைநீக்கத்தை விலக்கிக்கொண்டு, பணி வழங்கவும், புதிய இயந்திரத்தின் உற்பத்தி அளவு மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக இரு தரப்பினரும் தொழிலாளர் ஆணையர் முன்பு பேசி தீர்வு காண வேண்டுமென அறிவுரை வழங்கினார். மேற்படி அறிவுரையை நிர்வாகம் ஏற்க மறுத்து 30-11-2007 அன்று ஒரு நாள் கதவடைப்பு செய்தது. இதனைத் தொடர்ந்து புதிய இயந்திரங்களுக்கு உற்பத்தி அளவு குறித்து எந்தவித உடன்பாடும் ஏற்படாததால் நிர்வாகம் 3-12-2007 முதல் காலவரையற்ற கதவடைப்பு செய்தது. கதவடைப்பு குறித்து சென்னை தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாததால் அரசு இத்தாவாவினை தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு அனுப்பி உத்தரவு பிறப்பித்தது. மேலும், தொழில் தகராறுகள் சட்டப் பிரிவு 10 (3)-ன்கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கதவடைப்புத் தொடர்வதைத் தடை செய்து 20-12-2007 அன்று அரசு உத்தரவிட்டது. ஆனால், நிர்வாகம் கதவடைப்பை விலக்காமல், அரசாணையை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமை மனு தாக்கல் செய்தது. சென்னை உயர் நீதிமன்றம் அரசாணைக்குத் தடை விதிக்கவில்லை.

[திரு. தா.மோ. அன்பரசன்] [2008 ஜனவரி 30

ஆனால், அரசாணையை அமல்படுத்தாமைக்கு நிர்வாகத்தின்மீது குற்ற வழக்கு தொடர தடையாணை வழங்கியுள்ளது. இது தொடர்பாக அரசு பதிலுரை தாக்கல் செய்துள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவில் ஒவ்வொரு நிரந்தரத் தொழிலாளிக்கும், முன்பணமாக ரூ.5,500 வழங்க உத்தரவிட்டது. உயர் நீதிமன்ற உத்தரவின்படி, இந்தத் தொகையினை நிர்வாகம் 790 நிரந்தரத் தொழிலாளர்கள் வங்கிக் கணக்கில் 12-1-2008 அன்று செலுத்திவிட்டது. இப்பிரச்சினையில் இரு தரப்பினருக்கும் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அரசு, சட்டப்படியான அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் உத்தரவு கிடைத்தபின் அதற்கேற்ப உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் உரையாற்றுகிறபோது ** என்ற குற்றச்சாட்டைச் சொன்னார். மூன்றாம் தேதி கதவடைப்பு செய்த அந்த நிர்வாகத்தின்மீது, 17 நாட்களில் உத்தரவு பிறப்பித்த ஒரே அரசு கலைஞருடைய அரசுதான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும் தொழிற்சங்கத் தலைவர்கள், நிர்வாகத் தரப்பினர் எல்லாம் நாங்களே தொடர்ந்து நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம். விரைவிலே இந்த ஆலையைத் திறப்பதற்கு இந்த அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்ற உறுதியினை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. clarification. இதில் என்ன இருக்கிறது? Nothing. He has given an elaborate answer. *(குறுக்கீடு)* No, *(குறுக்கீடு)* என்ன சொல்லுங்கள். அடுத்த issue. *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. No clarification. Nothing. Everything is over. Sit down *(குறுக்கீடு)* திரு. வேல்முருகன் நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். You have taken much time. *(குறுக்கீடு)* சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



2008 ஜனவரி 30]

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. வேல்முருகன் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இவ்வளவு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்தும் அவர்கள் ஒத்துவராத காரணத்தினால்தான் நாங்கள் அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் வேண்டுகோள் வைக்கிறோம். அனைவரும் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைத் தந்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக இதை நாட்டுடைமையாக்குவோம் என்ற அறிவிப்பை வெளியிட்டால் மட்டும்தான் அவர்கள் அரசினுடைய கட்டுப்பாட்டுக்கு வருவார்கள் என்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலே நம்முடைய தமிழக அரசு ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைச்சர் அவர்கள் Suspend திறப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். Suspend செய்யப்பட்டவர்களுக்கு இந்த இடைக்காலங்களிலே சம்பளம் வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் *(குறுக்கீடு)* சொல்லுங்கள் என்ன? *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* சொல்லுங்கள். இதே issue-விலே இரண்டாவது topic-க்கா?

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை நான் சொல்கிறேன் சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். அரசாணை போட்டிருக்கிறீர்கள். என்ன பிரயோசனம் அதனால்? **.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கின்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே குற்ற நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று தடையுத்தரவு பெற்றதால்தான் நாங்கள் எதுவும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. வேறு என்ன செய்ய முடியும்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஜனவரி 30

**திரு. டி. ஜெயக்குமார்:** சிமெண்ட் கம்பெனிகளை நீங்கள் கூப்பிட்டு ஒத்துவரவில்லையென்றால் நாட்டுடைமையாக்குவோம் என்று சொன்னீர்கள் இல்லையா? அதேபோல எம்.ஆர்.எப்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், ** என்பது அவையில் உபயோகப்படுத்துகிற வார்த்தையா? What is this? [interuption] No. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் எம்.ஆர்.எப். தொழிற்சாலையின் கதவடைப்பை நீக்க வேண்டுமென்றும், தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும், அதற்காக அரசாங்கம் எடுத்த முடிவுகளை நிர்வாகம் மதிக்கவில்லையென்றும், நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைக்கூட அவர்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்றும், எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் மின்சாரத்தை நிறுத்த வேண்டுமென்றும், அந்தத் தொழிற்சாலையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த விவாதத்திற்குப் பின்னரும் அவர்கள் இந்தத் தொழிற்சாலையைத் திறக்கவில்லையென்றால் ஒரு வார காலத்திற்குப் பிறகு முதலமைச்சரே இதிலே தலையிட்டு அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி அதற்குப் பிறகும் அவர்கள் தொழிற்சாலையைத் திறக்க முன்வராவிட்டால், அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையை நாட்டுடைமையாக்க முயற்சி எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகேயுள்ள சித்தாலை என்ற கிராமத்தில் கற்பகவல்லி என்ற செவிலியர், நர்ஸ் தனியார் மருத்துவமனை ஒன்றில் மதுரையில் வேலை பார்த்துக்கொண்டிருந்த சூழ்நிலையில் தி.மு.க. . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுசம்பந்தமாக நீங்கள் கடிதம் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். இன்றைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவையில் இல்லை. எனவே, நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) No, nothing உட்காருங்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன் உட்காருங்கள். நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. என். நன்மாறன்:** இதே பிரச்சினைதான்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அது உங்களுக்கும் சேர்த்துத்தான். உட்காருங்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

### (அ) பொதுக் கணக்குக் குழு—தொடர்ச்சி

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 80 முதல் 85 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2008 ஜனவரி 30

## (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 74 முதல் 79 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-45

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறிமுக நிலையிலேயே கடுமையாக எதிர்க்கிறது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கிறோம் என்று சொன்னால் போதும். கடுமையாக எதிர்க்கிறோம் என்றால் என்ன? உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். 9 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம். உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் 15 நிமிடங்கள்.

*** திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள் முன்மொழிந்த மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பேரவைக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ், தமிழ் இன நலன் என தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு தமிழினத்தின் பாதுகாவலராகவும், தந்தை பெரியாரின் கோரிக்கையான ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாகவும் ஆக்கித்தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,

(மேசையைத் தட்டும் ஒலி) கோப்பெருஞ் சோழனுக்கு ஒரு பிசிராந்தையார்போல் நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்து வரும் நமது நிதி அமைச்சர் மாண்புமிகு அண்ணன் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், "அன்று போரிலே உயிரைச் சிந்திய என் வீர மக்களோடு நானும் மடிந்திருக்க வேண்டும், கோட்டையைவிட்டு வெளியேறிய எனக்கு இந்த இழிவுச் சாவு ஒரு நல்ல பரிசு, தம்பி அஞ்சாத சிங்கமே, இந்த கடைசி நேரத்தில் உன்னைக் காண வேண்டும் என்று துடிக்கிறேன், முடியவில்லை, என் புன்னகை புரியும் தமிழ் மண்ணே, உன்னை விட்டுப் போவது ஒன்றே எனக்கு வருத்தம். தருக்கர்கள் சிலரால் இன்று நீ தாழ்வுற்றிருப்பினும் எதிர்காலத்திலே ஆயிரம், ஆயிரம் இளைஞர்கள் வருவர், உன் பெருமையை உயர்த்துவர் என்று" எந்த நெல்லைச் சீமையில் வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்குக் கயிற்றை முத்தமிட்டாரோ அவருடைய வாரிசாக இன்று அதே நெல்லைச் சீமையிலே இலட்சோப இலட்சம் இளைஞர்களை ஒன்று திரட்டி தரணி போற்றும் தமிழின வெற்றி மாநாட்டை நடத்திக் காட்டிய தமிழினத்தின் செல்லப்பிள்ளை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியின் சார்பாக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை என்பது பண்டிகை காலத்து வாழ்த்துரையாக இல்லாமல், தமிழக மக்களை வாழவைக்கின்ற உரையாக இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையில் சமத்துவமும், சமூக நீதியும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியும், மக்களை வாழவைக்கும் நலத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

நெடுங்காலமாய் தமிழக மக்களின் கோரிக்கையான சேது கால்வாய்த் திட்டம், தரணியில் தமிழர் பெருமை உயர்த்தும் திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள், தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம், கோயம்புத்தூரில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், மதுரையில் இந்திய தொழில்நுட்பவியல் நிறுவனம், திருச்சியில் இந்திய அறிவியல்



கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம், சென்னையில் தமிழ் செம்மொழி ஆய்வு மையம், மாநிலத்தில் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டம், எண்ணூர், கடலூரில் கப்பல் கட்டும் தளம், வேலூர், சேலத்தில் விமான நிலையம் அமைக்கும் திட்டம், வேளாண்மை வளர்ச்சித் திட்டம், மின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் திட்டம், சிறப்பாகச் செயல்படும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்க்கு கணினிகள் வழங்கும் திட்டம், தந்தை பெரியார் உருவச்சிலையுடன்கூடிய 240 சமத்துவபுரங்கள் அமைக்கும் திட்டம், சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருக்கும் அருந்ததியர்க்குத் தனி இட உள் ஒதுக்கீடு போன்ற அருமையான திட்டங்களை அறிவித்திருப்பது மிகவும் வரவேற்பிற்குரிய திட்டங்கள் ஆகும்.

தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்ட சாலைகள், நவீனமயமாக்கப்பட்ட பேருந்து வசதிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள், மேலும் எழையெளிய மக்களுக்கு 3 இலட்சத்திற்கு மேல் வீட்டுமனைப் பட்டா வழங்கியதுடன், 5 வருடங்களுக்கு மேல் குடியிருப்போருக்கும் வீட்டுமனைப் பட்டா, வண்ணத் தொலைக்காட்சி மாநிலமாக தமிழகம், 50 இலட்சம் பேர் பயனடைந்துள்ள வருமுன் காப்போம் திட்டம், வறுமைப் பசியினைப் போக்க இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம், விலையேற்றத்தைத் தடுக்க அத்தியாவசியப் பொருட்களை அரசு நியாயவிலைக் கடைகளில் வழங்கும் திட்டம், குழந்தைகள் பயன்பெறும் வகையில் வாரந்தோறும் 3 முட்டைகள் வழங்கும் திட்டம், விவசாயிகளின் கடன் 7 ஆயிரம் கோடி ரூபாயை தள்ளுபடி செய்ததுடன் மீண்டும் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டம், ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம், மருத்துவத் துறை, மின்சாரத் துறை, போக்குவரத்துத் துறை, உள்ளாட்சித் துறை, கல்வித் துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகளில் இலட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியதோடு, புதிய தொழில் நிறுவனங்களின் மூலமாகவும் பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் என பல்வேறு நலத் திட்டங்களால் மக்கள் பயனடைந்து வருகிறார்கள்.

[திரு. ஓ. சுப்பிரமணியம்] [2008 ஜனவரி 30

முற்பகல் 11-50

அமைப்புச் சாரா தொழிலாளர்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட தொழிலாளர்கள் நல வாரியங்களுடன் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட அரவாணிகளுக்கும் தனி நல வாரியங்கள் என இந்த நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழர் பண்பாட்டைத் தமிழகம் முழுவதும் நினைவுபடுத்தும் வகையில் சென்னையில் நடந்த சங்கமம் விழாவினைப் போல் மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்த மேதகு ஆளுநர் உரையில் தெரிவித்துள்ளது தமிழர்களின் உள்ளங்களில் பால் வார்த்ததுபோல் அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தவிர மகளிர் மேம்பாட்டிற்காக தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி வருகின்ற மகளிர் முன்னேற்றத் திட்டங்களை எண்ணுகின்றபோது 50 ஆண்டுகளுக்கு முன்பாக நமது பழம் பெரும் பாடகர் அண்ணன் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் பாடிய பாடலை இந்தப் பேரவையில் நினைவுகூர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தக் குரலிலேயே பாடுங்கள் பார்க்கலாம்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கற்பூரக் காட்டினிலே கனல் விழுந்துவிட்டதம்மா
இரு காலடியில் கன்னிமலர் கசங்கியே உலர்ந்ததம்மா
இரு காலடியில் கன்னிமலர் கசங்கியே உலர்ந்ததம்மா
பெண்ணே உன்கதி இதுதானா – உன்
பெண்மை ஆண்மைக்கு பலிதானா
பெண்ணே உன்கதி இதுதானா – உன்
பெண்மை ஆண்மைக்கு பலிதானா
உலகே உனக்கு சுமைதானா
உலகே உனக்கு சுமைதானா – உன்
உடலே உனக்குப் பகைதானா
பெண்ணே உன்கதி இதுதானா – உன்
பெண்மை ஆண்மைக்கு பலிதானா

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கே ஒரு 'ஓ' போடலாம் போல இருக்கிறது. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)



2008 ஜனவரி 30]

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோபுர அழகும் கொடி மலர் பொலிவும்
குங்கும மஞ்சளும் மலரும் நாம்
கும்பிடும் தெய்வத்தின் புனிதமும் சேர்த்து
செய்தது பெண் உருவம்
இத்தனை புனிதமும் ஆண்களின்
கைகள் பட்டதும் அழியுதம்மா
இத்தனை புனிதமும் ஆண்களின்
கைகள் பட்டதும் அழியுதம்மா
ஒரு இடியது விழுந்த பனை மரம் போலே
நொடியினில் கருகுதம்மா – பெண்மை
நொடியினில் கருகுதம்மா
பெண்ணே உன்கதி இதுதானா – உன்
பெண்மை ஆண்மைக்கு பலிதானா (மேசையைத் தட்டும் ஒலி)

என்று மக்களை ஈன்றெடுக்க கருவைச் சுமக்கின்ற மகளிரை உலகின் சுமையாக நினைக்கின்ற நிலை மாற வேண்டும் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர்க்கும் சொத்திலே சம பங்கு, 15,000 ரூபாய் திருமண நிதியுதவித் திட்டம், கருவுற்ற தாய்மார்க்கு ரூ.6,000/- நிதி உதவி, விதவைத் தாய்க்கும், மகளுக்கும் நிதி உதவி, மகளிர் ஆசிரியைகளாக நியமனம், மகளிர் முன்னேற்றத்திற்கு சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன்கூடிய நிதி உதவி, உள்ளாட்சி மன்றங்களில் 3-ல் ஒரு பங்கு மகளிருக்கு இட ஒதுக்கீடு, மகளிருக்கு நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் 3-ல் ஒரு பங்கு இட ஒதுக்கீடு கோரிக்கைக்கு ஆதரவாக சென்னையில் மகளிர் பேரணி, அந்தஸ்தும் அழகும் உள்ள பெண்களுக்கு மட்டும்தான் என்றிருந்த விமானப் பணிப் பெண் வேலையை தாழ்த்தப்பட்ட மகளிர் 50 பேருக்குப் பெற்றுத் தந்த தலைவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய வரலாற்றில் முதன் முறையாக ஒரு பெண் ஜனாதிபதி ஆவதற்கு உறுதுணையாக இருந்தவர், உருவாக்கிக் காட்டியவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

தமிழக மக்கள் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு இத்தகைய நலத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்குக் காரணம்,

[திரு. ஓ. சுப்பிரமணியம்] [2008 ஜனவரி 30

தலைவ ரென்பார், தத்துவ மேதை என்பார்,
நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்.
மனிதரென்பார், மாணிக்கமென்பார், மாநிலத்து அமைச்சரென்பார்,
அன்னையென்பார், அருமொழிக் காவல் என்பார்,
அரசியல் வாதி என்பார் – அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர்–நெஞ்சத்து அன்பாலே
'அண்ணா' என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே – அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்,
வணங்காமுடிப் பாரதிதாசருக்கும் சிலை.
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல், போப்புக்கும் சிலை
கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்பத் திருவள்ளுவர்க்கும் சிலை
பத்து சிலை வைத்ததனால் – அண்ணன் தமிழின் பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய; அந்த
அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது...
ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்...
ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ, இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஒரு விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதய மன்னா...
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும்பயணம் ஏன் தொடர்ந்தாய்...?
உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே!
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்; நியாயந்தானா?



2008 ஜனவரி 30] [திரு. ஓ. சுப்பிரமணியம்]

கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக்கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக்கொண்டாய்?
கண்மூடிக்கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை;
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா!
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா... நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி)

என்று பேரறிஞர் அண்ணாவினுடைய இதயத்தை இரவலாகப் பெற்றிருக்கின்ற காரணத்தால் தமிழ் இனத்தின் நலனே தன் வாழ்வு என வரலாற்றுத் தாயாக வாழ்ந்துகொண்டு இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களே, கோவை, ஈரோடு மற்றும் புதிதாக உருவாக்கப்பட உள்ள திருப்பூர் போன்ற மாவட்டங்களின் 7 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 20 இலட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக, நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்துவதற்காக, அவினாசி—அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமெனவும், கல்லூரி இல்லாத என்னுடைய பவானிசாகர் தொகுதியில் அரசு பொறியியற் கல்லூரி ஒன்றும், சமத்துவபுரம் இல்லாத என்னுடைய தொகுதியில்

சமத்துவபுரம் ஒன்றும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக ஆக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் ஈரோடு மாவட்ட மக்களின் சார்பாக மீண்டும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

## 7. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் படகுகள் விடுவிப்பு—அரசு நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் 'துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 12 மீனவர்களையும், 3 படகுகளையும், தமிழ்நாட்டிற்குத் திரும்பிக் கொண்டுவருவது சம்பந்தமாக நம்முடைய எதிர்கட்சித் தலைவர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவருமே இங்கே கருத்துகளை எடுத்துச்சொன்னார்கள். அப்போது நான் பதில் அளிக்கும்போது, அவர்களை விடுவிப்பதற்கும், அந்தப் படகுகளை தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று சொன்னேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இரண்டு நாட்களாகத் தொடர்ந்து மத்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தியும், நேற்று இரவு 11 மணி வரையிலேகூட மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களோடு தொடர்புகொண்டும் அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய காரணத்தால், இலங்கை அரசு இன்றையதினம் 3 படகுகளையும், 12 மீனவர்களையும் விடுவித்து இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன். 15 நிமிடங்கள்.

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியினுடைய கடமையை முழு மனநிறைவோடு எங்களுக்கு ஆற்றுகிற வாய்ப்பை நீங்கள் மனப்பூர்வமாக தருவீர்கள் என்கின்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையினைத் தொடங்குகிறேன். கல்லினுள் தேரைக்கும் கலந்தூட்டும் ஈசனைப் போல, இரு முறை தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து இல்லாமை என்பது நாட்டு மக்களுக்கு இல்லாமல் செய்து, நல்லாட்சி தந்த மனிதப் புனிதவதி, தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளாலும், ஆசியாலும், (மேசையைத் தட்டும் ஒலி) கவர்னர் உரையின்மீது பேசுவதற்கான வாய்ப்பினைத் தந்த வருங்கால தமிழகத்தின் முதல்வர், இந்தியாவின் வழிகாட்டி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய உரையினைத் தொடங்குகிறேன். பண்டைக் காலத்திலே மன்னர்களுடைய அவையிலே மன்னர்களை பொன்னுக்கும், பொருளுக்குமாக புகழ்ந்து பாடுவதற்கு என்று புலவர்களை அமர்த்தி வைத்திருப்பார்கள். அதைப்போலும் மன்னர்கள் செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் மதியூகிகளையும் வைத்திருப்பார்கள். ஒரு பிரதான எதிர்க்கட்சியினுடைய கடமை என்பது ஆட்சியாளர்களைப் பாராட்டுவதாகவும், ஆட்சியாளர்களுடைய பணிகளைப் பாராட்டுவதற்காகவே அமைந்துவிடுவதாகவும் இருக்கக் கூடாது என்று நமக்கு முன்பு இருந்த அறிஞர்கள் குறிப்பிட்டதைப்போல, ஆட்சியாளர்கள் வேகமாகப் போகும்போது அவர்களுக்கு வேகத்தடை உண்டாக்குவதற்கும், ஆட்சியாளர்கள் செய்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்குமான ஒரு நல்ல வாய்ப்பை எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவது என்பது ஜனநாயகத்தினுடைய பிரதான மரபு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டி, நான் பேசுகிற நேரத்திலே நான் விளைவிக்கின்ற கருத்துகளுக்கு உடனுக்குடனாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எழுந்து பதில் சொல்லி, என்னுடைய காலத்தை எடுத்துக்கொள்ளாமல், பிரதான எதிர்க்கட்சியினுடைய கருத்தை இந்த அவையிலே முழுமையாகப் பதிய வைக்கின்ற ஜனநாயக மரபை நீங்கள் மலரவிட வேண்டுமென்று பாராட்டுதலுக்குரிய பேரவைத் துணைத் தலைவர்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்][2008 ஜனவரி 30

அவர்கள், அந்த உரிமையை, நீதியை நீங்கள் எனக்கு வழங்க எப்பொழுதும் தயாராக இருப்பீர்கள் என்ற உணர்வோடு நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல ஆட்சி என்பது நல்ல நிர்வாகம். ஒரு நல்ல நிர்வாகம் என்பது ஆட்சியினுடைய நிர்வாகத்தின்மூலம் புதிதாக வரிகளைப் போடாமல் வருமானத்தைப் பெருக்குவது என்பதாகும். மாண்புமிகு அம்மா அவர்கள் 2000-2001-லே ஆட்சிப் பொறுப்பேற்கிற நேரத்தில், அன்றைய நிதிநிலை மிக வறட்சியாக இருந்த சூழ்நிலையில், விற்பனை வரியின்மூலம் 8,000 கோடிதான் வருமானம் இருந்தது என்கிற சூழ்நிலையிலே, 3 ஆண்டு காலம் புதியதாக வரிகளைப் போடாமல், 2006-லே ஆட்சிப் பொறுப்பைவிட்டு நாங்கள் அகலுகிற நேரத்திலே, விற்பனை வரியின்மூலம் 18,000 கோடியாக மாநிலத்தினுடைய வருவாயை உயர்த்திக் காட்டியவர்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 2000-2001 வரை, மணல் குவாரிமூலம் ரூ.30 கோடிதான் வருமானம் என்று இருந்த சூழ்நிலையிலே, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, நிர்வாகச் சீர்திருத்தத்தின் மூலமாக, அரசாங்கமே மணல் குவாரிகளை நடத்துவதன்மூலம் ரூ.30 கோடியிலே இருந்த மணல் வருவாயை 164 கோடி ரூபாயாக உயர்த்திக் காட்டியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மதுபானக் கடைகளைத் தனியாருக்கு ஏலத்திலே விட்டு வந்த காலம் வரையிலே, 2000-2001 வரையிலே, மதுபானக் கடைகள்மூலம் ஆண்டு வருமானம் 3,000 கோடி என்றிருந்த நிலையிலே இந்த ஆண்டு மதுபானக் கடையின்மூலம் மாநில அரசினுடைய வருவாய் 8,000 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) நிருவாகச் சீர்திருத்தத்தின் காரணமாக, நல்ல ஆட்சி மேன்மையின் காரணமாக, புரட்சி தலைவி அம்மா அவர்கள் மதுபானக் கடைகளைத் தனியார் நடத்துவதற்குப் பதிலாக, எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் அரசே நடத்தலாம் என்கிற நிர்வாகச் சீர்திருத்தத்தைக்



2008 ஜனவரி 30] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

கொண்டு வந்ததன்மூலம் இன்றைக்கு 8,000 கோடி ரூபாய் அளவிற்கு மது விற்பனையின்மூலம் மாநில அரசினுடைய வருமானம் பெருகியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே 2002 ஆம் ஆண்டிலே தமிழகத்தினுடைய உணவு மானியத்தினுடைய செலவினங்களைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அன்றைக்கு அம்மா அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதுவரையிலே தமிழகத்தினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் நாட்டு மக்களுக்குத் தேவையான அரிசியை நியாயவிலைக் கடைகளிலே விநியோகம் செய்வதற்காக, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசே சொந்தமாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்து, நியாயவிலைக் கடைகளிலே அந்த அரிசியை ரூ. 3.50 பைசாவிற்கு விநியோகித்த நேரத்திலே அன்றைக்கு ஆண்டு செலவு உணவு மானியத்திலே 2,000 கோடி ரூபாய் அளவிற்கு எட்டிப் பார்க்கிற சூழ்நிலை இருந்த நிலையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசினுடைய உணவுக் கழகத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, தமிழக அரசுக்குத் தேவையான அரிசியை, நியாயவிலைக் கடைகளுக்குத் தேவையான அரிசியை, மத்திய உணவுக் கழகமே வழங்கும் என்றும், மத்திய அரசிற்காக மாநிலத்தினுடைய நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்லைக் கொள்முதல் செய்யும் என்றும் அம்மா அவர்கள் அன்றைக்கு எடுத்த புதிய புரட்சிகரமான நிர்வாகச் சீர்திருத்தத்தின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய் பணம் மீதப்படுத்தப்பட்டது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இதைச் சொல்கிற நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேகூட இதை ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டாக பக்கம் 48-லே, பத்தி 4-லே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இந்திய உணவுக் கழகத்தின் முகவராக மாற்றி, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மூடிவிட்டு, விவசாயிகளின் வயிற்றில் அடித்த நிலைமை மாற்றப்பட்டு, மீண்டும் நுகர்பொருள் வாணிபக் கழகமே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலே ஈடுபட வழிவகைக் காண்போம் என்று அன்றைக்கு 2006 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருந்தும்கூட, அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்தத்

திட்டத்தைத்தான் இன்றைக்கும் பின்பற்றுகிற ஒரு நிலையிலே தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதி காற்றோடு பறக்கவிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை, குற்றச்சாட்டு இல்லை. (குறுக்கீடு) உங்களுடைய வாதத்திற்கு நான் தெளிவுபடுத்துகிறேன். சென்ற முறை இதே மாமன்றத்திலே எதிர்க்கட்சியாக நாங்கள் இருந்தபொழுது, கொள்முதல் செய்கிற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். அப்பொழுது இதே மாண்புமிகு அமைச்சர் இங்கே உட்கார்ந்துகொண்டு ஊக்கத் தொகை நாங்கள் அளிக்க முடியாது; மாநில அரசாங்கம் அளிக்க முடியாது. ஏனென்று சொன்னால், நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு கொள்முதல் செய்து கொடுக்கிறோம் என்று வாதத்தை வைத்தார்கள். அதனால்தான், தமிழக அரசின் சார்பாக நேரடியாகக் கொள்முதல் செய்தால் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளிக்கலாமே என்று நாங்கள் சொன்னோம். அதற்காக முகவராக இருக்கக் கூடாது என்று சொன்னோம். ஆனால், இப்பொழுது மாநில அரசாங்கம் இந்த ஆண்டு 100 ரூபாய் கொடுத்தும்கூட அது போதவில்லை. மாநில அரசாங்கம் 50 ரூபாய் விவசாயிகளுக்காக கொடுத்து இருக்கிறோம் என்பதையும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இப்பொழுதும் நாங்கள் முகவராக இருந்து மாநில அரசாங்கம் வாங்கிக் கொடுத்தாலும்கூட விவசாயிகளுக்கு அன்றன்றைக்குத் தலைவர் கலைஞருடைய அரசு இந்த ஆண்டு ஊக்கத் தொகை கொடுத்ததைப்போல, அவ்வப்பொழுது அவர்களுக்கு வேண்டியதை நிறைவாகச் செய்து கொண்டிருப்போம்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொட்டைப் பாக்குக்கு விலை சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



நான் வேறு சப்ஜெட்டுக்குப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்தப் புதிய திட்டத்தினால்தான் நீங்கள் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியை விநியோகிக்க முடிகிறது. நீங்கள் போகிற முறைக்குச் சென்றால் இன்றைக்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் அதற்காகச் செலவு செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஒரு அரசாங்கம் என்பது மக்களுக்கு ஆண்டாண்டு காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடிய நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி என்றென்றும் மக்கள் மனதிலே நல்ல இடத்தைப் பெறவேண்டும், சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, சத்துணவுத் திட்டத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள், இலவச வேட்டி சேலை திட்டத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். பள்ளி மாணவர்களுக்கு இலவசச் சீருடை, பள்ளி மாணவர்களுக்குக் காலணி, பற்பொடி ஆகியவற்றையெல்லாம் வழங்குகின்ற திட்டங்களை எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் ஆண்டாண்டுகாலமாக அனைவரும் நாம் பின்பற்றிக் கொண்டு இருக்கிறோம். அதேபோல, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இலவசமாக சைக்கிள் வழங்கும் திட்டம் இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அது இன்றைக்கு அனைத்து மாநிலங்களும் பின்பற்றுகிற திட்டமாக இருக்கிறது. அதேபோல 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை இலவசமாக பாடப் புத்தகம் வழங்குகிற திட்டத்தை அம்மா அவர்கள் அன்றைக்கு அறிமுகம் செய்தார்கள். கல்வி ஆண்டினுடைய தொடக்கத்திலே ஏழைப் பெற்றோர்கள் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகம் வாங்குவதற்கு கண்ணீர் சிந்தக் கூடாது என்பதற்காக அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்தத் திட்டம் இன்றைக்கும் நீங்கள் பின்பற்றுகிற திட்டமாக, என்றைக்கும் கைவிட முடியாத திட்டமாக செயல்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்த திருக்கோயில்களிலே அன்னதானத் திட்டம் என்பது தமிழகத்தினுடைய வரலாற்றிலே என்றைக்கும் ஒரு ஆட்சியாளர்களுடைய சாதனைக்கான புதிய வரலாற்றை என்றென்றைக்கும் கூறிக் கொண்டிருக்கிற திட்டமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்][2008 ஜனவரி 30

மேலாக, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தை 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி கோட்டைக் கொத்தளத்திலே கொடியேற்றி வைத்துவிட்டு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். கருவறையிலே இருந்து கல்லறை வரையிலே இருக்கிற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்கள் 1 கோடியே 96 இலட்சம் பேருக்கு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 4 மாத காலத்திலே அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி வரையிலே 201 கோடி ரூபாய் உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த கவர்னர் உரையிலே இன்றைக்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 19 மாத கால இந்த ஆட்சியிலே, சொன்னதைச் செய்கிற ஆட்சியிலே, உழவர் பாதுகாப்புத் திட்டத்தை விவசாயிகள் நல வாரியம் என்று மாற்றியதற்குப் பிறகு, இந்த 19 மாத காலத்திலே மொத்தம் வழங்கப்பட்ட உதவித் தொகை 56 கோடி ரூபாய் மட்டும்தான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல ஒரு நல்ல ஆட்சியினுடைய சாதனை என்று சொன்னால், சென்னை மாநகர மக்களுடைய குடிநீர் தாகத்தைத் தீர்ப்பதற்காக புதிய வீராணம் திட்டத்தை அறிவித்து 18 மாத காலத்திலே நிறைவேற்ற வேண்டிய திட்டத்தை 16 மாத காலத்திலே குறிப்பாக 228 கிலோ மீட்டர் நீளத்திற்கு 1 இலட்சத்து 10 ஆயிரம் டன் இரும்பு பைப்புகளை பூமிக்கு அடியிலே பதித்து 700 கோடி ரூபாயில் திட்டம் நிறைவேற்றப்பட்டது. புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்தக் குழாய்களிலே தண்ணீர் வராது, ஏழை மக்களுடைய கண்ணீர்தான் வரும் என்று அன்றைக்கு இந்த அவையிலேகூட சிலர் சொன்னார்கள். புதிய வீராணம் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு ஏழையெளிய மக்களுடைய தாகத்தைத் தீர்த்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னால், அது அம்மா ஆட்சியினுடைய முத்தாய்ப்பான திட்டமாக இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

அதேபோல சட்டம் ஒழுங்கை எடுத்துக்கொண்டால், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாராலும் பிடிக்க முடியாத மாயாவி வீரப்பன் என்று சொல்லப்பட்டவனை, நாட்டிலே சட்டம் ஒழுங்கு இருக்கிறதா என்று கேள்விக்குறியாக இருந்த, சந்தன வீரப்பனை பிடிப்பதற்கு வீர மங்கை நான் இருக்கிறேன், வீழ்த்திக்காட்டுகிறேன்



2008 ஜனவரி 30][திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

என்று அவன் உடலை சல்லடைக்கண்களாக துளைத்தெடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கட்டப் பஞ்சாயத்து, ரவுடியிஸம், தீவிரவாதம் ஆகியவற்றை இரும்புக் கரம் கொண்டு, வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்த்துக்காட்டி, வீரத் தாய், வெற்றித் தாய், வீர நாச்சியாராக விளங்கியவர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மாவினுடைய ஆட்சிக்கு, சாதனைக்கு மணிமகுடமாக ஒரே சமயத்திலே 38 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சியாகத் தேர்தல் பிரசாரம் செய்த நேரத்திலே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அமைந்தால் மக்களுக்குத் தேவையான பணிகளை, திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்றுவோம்' என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஆட்சி அமைந்து 19 மாத காலம், 20 மாத காலமாகியும்— இந்தக் கேள்விக்கு நீங்கள் பின்னாலே பதில் சொல்லுங்கள். என்னுடைய காலத்தை எடுத்தக்கொள்ள வேண்டாம்—38 இலட்சம் புதிய குடும்ப அட்டைகளுக்கு இன்றைய வரையிலே முழுமையாக நீங்கள் மண்ணெண்ணெயை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுத்திருக்கிறீர்களா? இன்றைய வரை அந்தத் திட்டம் நிறைவேறாமல் இருக்கிறது. அதைப் பெற்றுத் தர வேண்டுமென்று வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர்கள் ஆட்சியை விட்டுப்போகிறபோது, கிட்டத்தட்ட 40 இலட்சம் கார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்காமலே சென்றுவிட்டார்கள். (குறுக்கீடு) தொடர்ந்து அதற்காக மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டது. இன்றைய வரையில் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும்கூட நாங்கள் நிறுத்தவில்லை. இந்தப் பொங்கல் தினத்தில்கூட இலவச எரிவாயு அடுப்புகள் கொடுத்ததன்மூலமாக வருகிற savings, அடுத்து bogus கார்டுகளைப் பிடித்ததன்மூலமாக வருகிற savings, இவற்றின்மூலம் கிட்டத்தட்ட 4,500 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை மீதப்படுத்தி, தலைவர்

[திரு. எ.வ. வேலு] [2008 ஜனவரி 30

கலைஞர் அவர்கள் இந்தப் பொங்கல் தினத்திலிருந்து அந்த கார்டுகள் அனைத்திற்கும் ஒரு லிட்டர் கொடுங்கள்; மேற்கொண்டும் வரவழைத்து, மேலும், மேலும் கொடுத்துக்கொண்டிருக்கலாம் என்று உத்தரவிட்டு நல்ல நோக்கத்தோடு இப்போது கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இப்போது அனைத்து கார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லா குடும்ப அட்டைகளுக்கும் முழுமையான அளவிலே மண்ணெண்ணெயை மத்திய அரசாங்கத்திடமிருந்து நீங்கள் பெற்று...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 38 இலட்சம் கார்டுகள் கொடுத்தோம் என்று சொல்கிறார்களே! இவர்கள் எப்படி மண்ணெண்ணெய் வாங்காமல் கொடுத்துவிட்டுப் போனார்கள்? தேர்தலுக்காகக் கொடுக்கப்பட்ட கார்டுகளே தவிர, மண்ணெண்ணெய் வழங்க அவர்கள் எந்தவகையான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. அதுதான் உண்மை. Election வருகிறது என்று எல்லோருக்கும் கார்டுகளைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்களே தவிர, அந்தக் கார்டுகளுக்குரியதை பெறுகிற வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. அதைத்தான் இப்போது மிச்சப்படுத்தி, உணவு அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் ஒரு லிட்டர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 38 இலட்சம் கார்டுகள் புதிதாகக் கொடுத்தோம் என்று சொல்பவர்கள் அப்போது ஏன் மண்ணெண்ணெயைப் பெறத் தவறிவிட்டார்கள்? அதற்கான உத்தரவு வாங்கியிருக்க வேண்டுமல்லவா? ஏன் வாங்கவில்லை? (குறுக்கீடு) அதற்கு என்ன காரணம்?

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.



2008 ஜனவரி 30]

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய காலத்தில் குடும்ப அட்டை இல்லாத குடும்பதாரர்களுக்குக் குடும்ப அட்டை வழங்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, 38 இலட்சம் குடும்ப அட்டைகளாக வழங்கப்பட்டன. அந்தப் புதிய அட்டைகள், புதிய அட்டைகளுக்கு மத்திய தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய் குடும்ப அட்டைகளுக்கு மத்திய தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய் வழங்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் உண்டு. அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல முறை கடிதம் எழுதினார்கள். அங்கேயிருந்து சாதகமான பதில் வரவில்லை. ஆனால் உங்களுடைய தேர்தல் அறிக்கையில் மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே ஆட்சி இருந்தால் மத்தியிலிருந்து வர வேண்டியதைப் பெற்று நாங்கள் உறுதியாகத் தருவோம் என்று நீங்கள் வாக்குறுதி தந்தீர்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தற்போது இருக்கின்ற கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ பொங்கலன்று ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கினோம் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. பொங்கலுக்கு இல்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேச்சை முடித்துக்கொள்கிறேன். பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. நீங்கள் தேர்தல் அறிக்கையில்...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் நாங்கள் மண்ணெண்ணெய் வழங்குகிறோம் என்று தேர்தல் அறிக்கையிலே எங்குமே சொல்லவில்லை. தேர்தல் அறிக்கையிலே அனைவருக்கும் மண்ணெண்ணெய் கொடுக்கிறோம், நீங்கள் கொடுத்துவிட்டுப் போன கார்டுகளுக்கும் கொடுக்கிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை, ஒன்று.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இந்தப் பொங்கல் தினத்திலிருந்து விடுபட்டிருக்கிற அனைத்து கார்டுகளுக்கும் ஒரு லிட்டர் வீதம் மாதாமாதம் தொடர்ந்து கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறோமேயொழிய ...

[2008 ஜனவரி 30

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாதாமாதம் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இல்லை, இல்லை. அப்படித்தான். பொங்கல் தினத்திலிருந்து அனைத்து கார்டுகளுக்கும் இதுவரைக்கும் விடுபட்ட 35, 40 இலட்சம் கார்டுகளுக்கு ஒரு லிட்டர் வீதம் தொடர்ந்து கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலகட்டங்களில் அனைத்துப் பொதுக் கூட்டங்களிலும் இதைச் சொன்னார்கள். மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே ஆட்சியிருந்தால் வாங்க வேண்டியதை வாங்கி நாங்கள் தருவோம் என்று சொன்னார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கின்றார். பொங்கல் அன்று ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் கொடுத்ததை, ஏதோ தொடர்ந்து வழங்க வேண்டிய மண்ணெண்ணெயை, பெருமாள் கோயில் தீர்த்தம் போல, ஒரு லிட்டர் கொடுத்தால் மக்களுக்கு எப்படி அது சென்றடையும்? *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** நீங்கள் மண்ணெண்ணெயே வழங்காமல் 40 இலட்சம் பேருக்கு கார்டுகள் கொடுத்துவிட்டுப் போய்விட்டீர்கள். இப்போது நாங்களாவது 40 இலட்சம் கார்டுகளுக்குத் தொடர்ந்து ஒவ்வொரு லிட்டர் கொடுககிறோம் என்று சொல்கிறோமே; நாங்கள் கொடுக்கிறோம், தொடர்ந்து கொடுப்போம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு மண்ணெண்ணெய் வர வேண்டும். அது எங்கிருந்து வர வேண்டும்? மத்திய அரசிலிருந்து, மத்திய தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும். நீங்கள் கடந்த 9 ஆண்டுகளாகத் தொடர்ந்து மத்திய மந்திரி சபையில் அமைச்சராகப் பொறுப்பேற்று வீற்றிருக்கின்றீர்கள். நீங்கள் பெற வேண்டியதை அங்கே பெற்றுத் தர முடியாத காரணத்தை, இயலாமையைத்தான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2008 ஜனவரி 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** இதில் இயலாமை என்கிற வாதத்திற்கு இடமில்லை. *(குறுக்கீடுகள்)* இருங்கள், இருங்கள். சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? ஆனால் ஏற்கெனவே அரசாங்கத்தின் இருப்பிலே மண்ணெண்ணெய் இல்லாமலேயே 40 இலட்சம் பேருக்கு நீங்கள் எப்படி கார்டுகள் கொடுத்தீர்கள்? மண்ணெண்ணெயே இல்லை; ஏன் 40 இலட்சம் பேருக்கு கார்டுகள் கொடுத்தீர்கள்? சரி, நீங்கள் கொடுத்த கார்டுகளுக்கு, இப்போது 40 இலட்சம் கார்டுகளுக்கு நாங்கள் முதல் கட்டமாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் கொடுக்கிறோம். அதில் அடுத்தக் கட்டமாகத் தொடர்ந்து கொடுப்போம். அதை 2 லிட்டர் ஆக்கலாம், 3 லிட்டர் ஆக்கலாம். தொடர்ந்து கொடுப்போம், savings பண்ணிக் கொடுப்போம்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயராமன், உங்கள் டைம் முடிந்துவிட்டது.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** என் டைம் முடியாது. நீங்கள் ஜனநாயகத்தை மூடி மறைப்பதானால் மறைத்துக்கொள்ளுங்கள். நான் இப்போதுதான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜனநாயகத்தையெல்லாம் மூடி மறைக்கவில்லை.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** 7 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். Bullet Points–களை மட்டும் ஒரே நிமிடத்திலே சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் கொடுக்கிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை, இல்லை, வேண்டாம். அப்படியென்றால் நான் உட்கார்ந்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்கார்ந்துகொள்ளுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை, இல்லை. அப்படியெல்லாம் நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்கார்ந்துவிடுங்கள்.

[2008 ஜனவரி 30

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியினுடைய. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரதான எதிர்க்கட்சி, காங்கிரஸ் இருக்கிறது. இங்கே பாருங்கள். எல்லோருக்கும் 15 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறோம். 2 நிமிடங்கள் interruption-ஐகூட நான் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. ஒரு நிமிடம் கொடுக்கிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அம்மாவினுடைய ஐந்தாண்டு கால ஆட்சியிலே 3 ஆண்டுகள் வறட்சி. நான்காம் ஆண்டு சுனாமி, ஐந்தாம் ஆண்டு வெள்ளம். இருந்தாலும் விலைவாசி ஏற்றம் இல்லை. ஆனால் இன்றைக்கு விலைவாசி ஏற்றம் – மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் காமதேனு சூப்பர் மார்க்கெட்டில் வாங்கியிருக்கிறேன். ஒரு கிலோ பொன்னி அரிசி 24 ரூபாய், பச்சரிசி 20 ரூபாய், கடலை எண்ணெய் ஒரு கிலோ 71 ரூபாய், நல்லெண்ணெய் ஒரு கிலோ 104 ரூபாய் 50 பைசா, உளுத்தம் பருப்பு ஒரு கிலோ 40 ரூபாய், துவரம் பருப்பு ஒரு கிலோ 44 ரூபாய், கடலைப் பருப்பு ஒரு கிலோ 35 ரூபாய், மலைப் பூண்டு 80 ரூபாய், மிளகாய் வற்றல் ஒரு கிலோ 55 ரூபாய், பாசிப் பருப்பு 36 ரூபாய்; சம்பா ரவை ஒரு கிலோ 50 ரூபாய், கோதுமை ஒரு கிலோ 14 ரூபாய். இந்த அளவிற்கு விஷம்போல் விலைவாசி ஏறியிருக்கிறது. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம், ஏழை அழுகிற கண்ணீர் இந்த ஆட்சியாளர்களை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைவாசி என்பது, 2001–லே இவர்கள் ஆட்சிக்கு வந்தபோது – அரிசி விலைபற்றிச் சொன்னார் அவர். – அரிசி விலை 15 ரூபாய் 66 பைசா இருந்தது. ஆனால் ஆட்சியை விட்டு, ஐந்து வருடங்கள் முடித்துவிட்டுப் போகும்போது அரிசி விலை 18 ரூபாய் 64 பைசா. கிட்டத்தட்ட பார்த்தீர்கள் என்றால், ஒவ்வொரு பொருளின் விலையும் நாம் பார்க்கிறபோது, ஆட்சிக்கு இவர்கள் 2001-லே வந்தபோது பருப்பு விலையாக இருந்தாலும், அரிசி விலையாக இருந்தாலும் தொடர்ந்து ஐந்து ஆண்டு காலம் இவர்கள் ஆட்சி முடிகிறபோது ஒவ்வொரு பொருளும் 10 ரூபாய் 15 ரூபாய் விலை ஏறியிருக்கிறது. நீங்கள்கூட ஆட்சிக்கு வந்த 2001-லிருந்து தொடர்ந்து விலைவாசியைக்



2008 ஜனவரி 30] [திரு. எ.வ. வேலு]

கட்டுப்படுத்தி அப்படியே ஆட்சியை நடத்திவிடவில்லை. ஏனென்றால், புள்ளிவிவரம் டேட்டாவோடு இருக்கிறது. நேரம் காலத்தைக் கருதித்தான் நான் சுருக்கமாகச் சொல்கிறேன். இன்றைக்கு விலைவாசியை எடுத்துக்கொண்டால்கூட தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு இன்றைக்கு வெளி மார்க்கெட்டிலே, அரிசி விலை இன்றைக்கு டேட்டா எடுத்தால்கூட 15 ரூபாய்தான். ஆனால் இதுவே கேரளாவிலே 18 ரூபாய், மகாராஷ்டிராவிலே 16 ரூபாய், டெல்லியிலே 17 ரூபாய். இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவிற்கு நாம் கட்டுப்படுத்தியிருக்கிறோம். துவரம் பருப்பு விலை வெளி மார்க்கெட்டைப் பொறுத்த அளவிற்கு ரூ.44 என்று சொன்னார். இங்கே தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு 38 ரூபாய்தான் அதனுடைய விலை. ஆனால் பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலே 42 ரூபாய், கேரளாவிலே 48 ரூபாய், மகாராஷ்டிராவிலே 40 ரூபாய், மேற்கு வங்காளத்திலே 40 ரூபாய், டெல்லியிலே 42 ரூபாய். பிற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது தமிழ்நாட்டிலே இன்றைக்கும் விலைவாசியை கட்டுப்படுத்திக்கொண்டுதான் தலைவர் கலைஞர் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற பட்டியலையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் கூறிய பட்டியலையும் மக்கள் மன்றத்தில் நேரடியாக அமைச்சர் வந்து விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறாரா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, இது நான் கொடுத்தது அல்ல. இன்றைக்குக் காலையிலே எல்லா மாநிலங்களிலும் தமிழ்நாட்டிலும் பொருட்களின் விலை என்ன என்பது குறித்து இன்டர்நெட்டிலே எடுக்கப்பட்ட விவரம் இது. அதனால் மக்கள் மன்றத்திற்கு எப்பொழுதும் நாங்கள் வரத் தயார். மடியிலே

எங்களுக்குக் கனம் இல்லை; அதனால் வழியிலே எங்களுக்குப் பயமில்லை. எந்தக் காலத்திலும் மக்கள் மன்றத்திலே வருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் வேறு உறுப்பினரைக் கூப்பிடப் போகிறேன். (குறுக்கீடு) 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த ஆட்சியிலே நடக்கிற நிலைமைகளைத் தடையின்றி விளக்க வேண்டுமென்றால், எங்களுக்கெல்லாம் பாதுகாப்புத் தரவேண்டியது பேரவைத் தலைவருடைய கடமை; பேரவைத் துணைத் தலைவருடைய கடமை. எங்கள்மீது போடப்பட்டிருக்கிற பொய் வழக்குகளுடைய அளவுகள், எண்ணிக்கையில் அடங்காத அளவிற்கு இன்றைக்கு இந்த ஆட்சியாளர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பேரவையிலே உள்ள இத்தனை உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது, மதுரை மேற்கு தொகுதி இடைத்தேர்தலிலே, Crime No.787/2007, Section I.P.C.147, 148, 452, 427, 436 and 120-B பிரிவுகளில் எங்கள்மீதும், திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள்மீதும் வழக்கு. கோவை மாவட்டம், அவினாசிபாளையம் காவல் நிலையத்திலே Crime No.201/. .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே பாருங்கள்; wind up பண்ணுகிறபோது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் விரிவாக law and order–ஐப்பற்றித்தான் நிறைய பேசுவார்கள். அடுத்து, திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஒவ்வொருவர்மீதும் போடப்பட்ட வழக்குகள், எந்தெந்த section-ல் போடப்பட்டன என்று பேச ஆரம்பித்தால் மணிக்கணக்கிலே பேசலாம். காவல் துறை மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்கவிருக்கிறது. அந்த நேரத்திலே இதையெல்லாம் சொல்லலாம். இதுவரையிலே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நாங்கள் குறுக்கிடவில்லை.



ஆனால், அவர் அமைச்சராக இருக்கும்போது, நாங்கள் ஏதாவது கேட்டால், உடனே எழுந்துகொள்வார். நாங்கள் அப்படி எழுந்துகொள்ளாமல்தான் உட்கார்ந்து கொண்டிருந்தோம். (குறுக்கீடு) ஆகவே, நேரத்தினுடைய அருமையைக் கருதி, ஏனென்றால், இன்றைக்கு அரை மணி நேரம் ஏற்கெனவே நாம் காந்தியினுடைய நினைவாக உறுதிமொழி எடுத்துக்கொள்ளச் சென்றோம். இன்னும் 10 பேர் பேச வேண்டியிருக்கிறது. அதை மனதிலே வைத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) அப்புறம் பேசிக்கொள்ளலாம், திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், விற்பனை வரி சம்பந்தமாக இங்கே பேசுகிறபோது, (குறுக்கீடு) நீங்கள் முடித்த பிறகுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் முடித்த பிறகுதான் சொல்கிறேன். நீங்கள் முடித்த பிறகு பேசச் சொன்னீர்கள்; அதனால் நீங்கள் முடித்த பிறகுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) Please கொஞ்சம் சும்மா இருங்கள். '2001-லிருந்து 2006 வரையில் வரி போடாமலே விற்பனை வரி வருவாயை உயர்த்தினோம்' என்று ஒரு தவறான தகவலை மீண்டும் மீண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) தவறான தகவலை, உண்மைக்குப் புறம்பான தகவலை இந்த மாமன்றத்திலே கூறி வருகிறார்கள்.

2002 ஆம் ஆண்டு மறு விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரிமூலமாக ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய் வரி போட்டீர்கள்; ரூ.1,000 கோடிக்கும் குறையாமல், ஒவ்வோர் ஆண்டும் போட்டீர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இதை முதலிலேயே, முன்னரே நீங்கள் சொல்லி, இதே அவையிலே அது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் அந்தத் தவறான தகவலை நீங்கள் தரக் கூடாது. அப்போதுகூட நாங்கள் சொல்லியிருக்கிறோம்; அரிசிக்கும்கூட வரி போட்டு, மக்கள் விரட்டியடித்த காரணத்தினாலே, அந்த அரிசி மீதான வரியைத் திரும்பப் பெற்றீர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், பேசுங்கள்.

(உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் தொடர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு (குறுக்கீடு) நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஆளுநர் உரையில் நல்ல பல திட்டங்களை..

**HON. DEPUTY SPEAKER:** Press gallery, nothing of the speech of Mr. Pollachi Jayaraman will go on record. (Interruption) உங்களுடைய பேச்சு அவைக்குறிப்பில் ஏறாது என்று ஆங்கிலத்திலே சொன்னேன், வேறொன்றுமில்லை. (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 12-25*

**திரு. கோவை தங்கம்:** ஆளுநர் உரையில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் நல்ல திட்டங்களை (குறுக்கீடுகள்) ** தமிழ்நாட்டில் பாயும் ஆறுகளையெல்லாம் இணைக்கின்ற (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஆளுநர் உரையில், குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாட்டிலே பாய்கின்ற ஆறுகளையெல்லாம் இணைக்கின்ற திட்டம் நல்ல திட்டம். இந்தத் திட்டத்தினால் விவசாயிகள் நன்மை அடைவார்கள். விவசாயிகள்மூலமாக உற்பத்தி பெருகும். குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாது. இந்த நல்ல திட்டம் அறிவிக்கப்பட்டதை காங்கிரஸ் பேரியக்கம் வரவேற்கிறது. அதேபோல இந்த ஆளுநர் உரையிலே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று அறிவித்திருக்கின்றீர்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். வால்பாறையில் இருக்கிறது என்.இ.பி.சி. எஸ்டேட். அங்கே சரியான நேரத்திலே சம்பளம் கொடுக்காமல், மக்கள் அவதிக்குள்ளாகி இருக்கின்ற நேரத்தில் அங்கு இருக்கின்ற மக்களை நான் சந்தித்து, 'உங்களுக்குச் சரியான சம்பளம் நிருவாகம் தருவதில்லையே, நீங்கள் எப்படிச் சாப்பிடுகிறீர்கள்' என்று கேட்டபோது, வயதுவந்த மூதாட்டி ஒருவர் சொன்னார், 'ஐயா, எங்களுக்கு ஒன்றாம் தேதி கொடுக்க வேண்டிய சம்பளம் 25 ஆம் தேதிதான் கிடைக்கிறது. ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு கொடுக்கிறாரே, அந்த ஒரு கிலோ அரிசி எங்களுக்கு இரண்டு ரூபாய்க்குக் கிடைப்பதால்தான் இப்பொழுது நாங்கள் வயிறார சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த நல்ல திட்டத்தை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேபோல, 10 ஆண்டுகாலம் குடியிருப்பவர்களுக்கு இலவச நிலப் பட்டா, வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தை ஏற்கெனவே அறிவித்திருந்தீர்கள். இப்பொழுது புதிதாக, 5 ஆண்டு காலம் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தை அறிவித்திருக்கின்றீர்கள். இது உள்ளபடியே வரவேற்கக்கூடிய நல்ல அருமையான திட்டமாகும், ஓர் அற்புதமான திட்டமாகும். இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள், நடுத்தர மக்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள், கூலித் தொழிலாளர்கள் எல்லாம் இந்த 5 ஆண்டு காலம் குடியிருப்பவர்களுக்கு, இலவசமாகப் பட்டா வழங்குகிற திட்டத்தைப் பாராட்டி வரவேற்றிருக்கின்றார்கள். இதனால் கோடானுகோடி மக்கள் நன்மை அடைகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே இங்கே நான் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

அதேபோல தொழிலாளர்களுக்காக அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நல வாரியம் அமைத்திருக்கின்றீர்கள். நெசவாளர்கள், மீனவர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் போன்ற அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இந்த அரசின்மூலமாகப் பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள். அதை நான் வரவேற்கின்றேன். காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனதாரப் பாராட்டுகிறோம். ஆனால், அதேநேரத்தில், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்துத் தொழிலாளர்களுக்கும், நன்மை ஏற்படுத்தி நல்ல திட்டங்களை அறிவித்த நம்முடைய அரசு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த அறிவிப்பிலே ஒன்றும் அறிவிக்காதது எங்களுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு புள்ளிவிவரத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வால்பாறையில் இருக்கின்ற ஒரே முதலாளி டாட்டா

[திரு. கோவை தங்கம்] [2008 ஜனவரி 30

எஸ்டேட்டினுடைய முதலாளி, வால்பாறையில் இருக்கின்ற அந்த முதலாளி, வால்பாறையிலே 38 கிலோ தேயிலை பறித்தால், 77 ரூபாய் தருகிறார். அதே முதலாளி அருகிலே இருக்கின்ற வழுக்குப்பாறை, அதாவது 5 அடி, 10 அடி தூரத்திலே இருக்கின்ற அந்த வழுக்குப்பாறை—ஒரு கொடி வித்தியாசம் என்று சொல்லுவார்கள் – ஒரு கொடி வித்தியாசத்தில் இருக்கின்ற வழுக்குப்பாறையில், 16 கிலோ பறித்தால் அதே முதலாளி 94 ரூபாய் சம்பளம் வழங்குகிறார். வால்பாறையில் இருக்கின்ற முதலாளி 38 கிலோ தேயிலை பறித்தால்தான் 77 ரூபாய் தருகிறார். அதே முதலாளி கேரளாவிலே இருக்கின்ற வழுக்குப்பாறையில் 16 கிலோ தேயிலை பறித்தாலே 94 ரூபாய் தருகிறார். இந்த அளவிற்கு ஒரு வித்தியாசம் இருப்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

அதைப்போல, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி இன்று வால்பாறையில் 40 கிலோவிலிருந்து 150 கிலோ வரைக்கும் பறிக்கிறார். 4 கிலோ தேயிலை ஒரு கிலோ Tea தூளாகிறது. அப்படி என்று சொன்னால் ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு சுமார் 900 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை முதலாளி சம்பாதிக்க வழிசெய்கிறார். நான்கு கிலோ தேயிலைப் பறித்தால் ஒரு கிலோ Tea தூள். 40 கிலோவிலிருந்து 100 கிலோ பறிக்கிறார்கள். அப்படிப் பார்த்தோம் என்று சொன்னால் ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் முதலாளி சம்பாதிக்க வழிசெய்கிறார் ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி. ஆனால் அவர்களுக்கு வழங்குகின்ற கூலி வெறும் 77 ரூபாய். இதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த நிர்வாகம் குறித்து, நான் இங்கே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய அனுமதியோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நான் இந்த Tea தூளை கொண்டு வந்திருக்கிறேன்.

*(உறுப்பினர் ஒரு பொட்டலத்தைக் காண்பித்தார்.)*

ஒரு கிலோ Super Tea 145 ரூபாய் என்று முதலாளிகள் விற்கிறார்கள். அதைப்போல மட்ட ரக Tea 124 ரூபாய்க்கு விற்கிறார்கள். TANTEA–யை எடுத்துக்கொண்டால் அவர்களும் 124 ரூபாய்க்கு விற்கிறார்கள். TANTEA–யை பொறுத்தவரையில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 18 கிலோ தேயிலை பறித்தால் 87 ரூபாய்



2008 ஜனவரி 30] [திரு. கோவை தங்கம்]

20 பைசா கூலியாக வழங்குகிறார்கள். புதிய ஒப்பந்தத்தின்படி இப்போது கூடுதலாகச் சம்பளம் தர வேண்டும். ஆக, சென்ற முறை இங்கே நடைபெற்ற கூட்டத்தில் நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். TANTEA–யைப் பொறுத்தவரையில் ஓரே வருடத்தில் 2 கோடியே 54 இலட்ச ரூபாய் இலாபம் வருவதாகக் கூறினார்கள். 18 கிலோ பறிக்கிற அந்த TANTEA நிர்வாகத்திற்கு 2 கோடியே 54 இலட்ச ரூபாய் வருகிறது என்று இந்த அவையிலே அறிவித்தார்கள் வனத் துறை அமைச்சர் அவர்கள். அப்படியென்றால் ஒரு நாளைக்கு 38 கிலோவிலிருந்து 100 கிலோ வரைக்கும் தேயிலைப் பறிக்கின்ற தனியார் தோட்ட நிர்வாகத்திற்கு எவ்வளவு இலாபம் வரும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வால்பாறையைப் பொறுத்தவரையில் 1,25,000 பேர்கள் இருந்தார்கள். இப்பொழுது 50,000 பேர்கள் வால்பாறையைவிட்டு திருப்பூருக்குச் சென்றுவிட்டார்கள். காரணம் வால்பாறையிலே குறைந்த கூலி, அடிப்படை வசதிகள் இல்லை, 80 ஆண்டுகாலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட குடியிருப்புகள், வீடுகள் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. சாலைகள் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. இன்று அங்கு எந்த வசதியும் இல்லை. நான் இந்தப் பேரவையிலே இந்தப் பிரச்சினை பற்றி பலமுறை இங்கே பேசியிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் ஆறு, ஏழு முறை நானும் எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களும், துணைத் தலைவர் திருமதி யசோதா அவர்களும், கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், Deputy கொறடா திரு. ஞானசேகரன் அவர்கள் உட்பட அனைவரும் ஐந்தாறு முறை இந்தப் பிரச்சினை குறித்து தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

அதோடு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சுமார் 30 முறை இந்தப் பிரச்சினைபற்றித் தெளிவாகப் பேசியிருக்கின்றோம். அதோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழ்நாட்டினுடைய தொழிற்சங்கத் தலைவர் திரு. குப்புசாமி, எம்.பி. அவர்கள், தொழிற்சங்கச் செயலாளர் திரு. சண்முகம் அவர்கள், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கோவிந்தசாமி அவர்கள் உட்பட பல்வேறு மூத்த தலைவர்களும் இது விஷயமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையோடு 125 ரூபாய் வழங்க வேண்டும்

என்கின்ற அந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசி வருகின்றார்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையில் அவர் பொறுப்பு எடுத்ததற்குப் பிறகு மூன்று முறை நிர்வாகத்தினரை அழைத்து தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அவர் மிகப்பெரும் முயற்சி எடுத்து வருகிறார். நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். இந்த அவையின்மூலமாக எங்களுடைய பாராட்டுகளை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் பல முறை பேசியும் நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு வராததால் இந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது

*பிற்பகல் 12–35*

ஏற்கெனவே சென்றமுறை வால்பாறையில் பல போராட்டங்களை நான் நடத்தியிருக்கின்றேன். இந்த முறை, தோழமைக் கட்சி என்பதால், வற்புறுத்தி, வற்புறுத்தி, இந்த அவையிலும் சரி, முதலமைச்சர் அவர்களிடமும் சரி, தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடமும் சரி, பலமுறை எடுத்துக்கூறி, நியாயம் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இந்த நேரத்திலே நான் குறிப்பிடுவதெல்லாம், நிர்வாகத்தை அழைத்துப் பேச வேண்டும். நேற்றுகூடப் பேசி, 86 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் 125 ரூபாய் கேட்கிறோம். நீங்கள் நினைத்துப் பாருங்கள், 16 கிலோ பறிப்பதற்கு 94 ரூபாய் கொடுக்கிற முதலாளி, 38 கிலோ பறிப்பதற்கு, நியாயப்பிரகாரம் பார்த்தால், 188 ரூபாய் வழங்க வேண்டும். (குறுக்கீடு) அதைத்தான், கேரளாவிலே கொடுக்கிறார்கள். சொல்லிவிட்டேன். 188 ரூபாய் வழங்க வேண்டும். ஆனால் நாங்கள் கேட்பது, வெறும் 125 ரூபாய்தான். இந்த 125 ரூபாயைக் கொடுப்பதற்கு நிர்வாகம் முன்வராத காரணத்தால், நான் இந்தநேரத்தில் இதைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இதே அவையிலே பேசி, சிறப்பு நீதிமன்றத்தைப் பெற்றோம். அந்தச் சிறப்பு நீதிமன்றத்தையும் நிர்வாகம் செயல்படவிடவில்லை. சென்ற ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது குறைந்தபட்ச ஊதிய உயர்வுக் கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று பேசி, குறைந்தபட்ச ஊதிய உயர்வுக் கமிட்டியை அரசு அறிவித்தது. ஆனால், அதிலே சட்டமன்ற உறுப்பினரான என்னை, நீக்க வேண்டுமென்று, உயர் நீதிமன்றத்தில் தடையாணை வாங்கிவிட்டார்கள். இந்தத் தடையாணைக்கு



அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன என்பதை இப்போது நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இதே அவையில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், பத்து நாட்களிலே சம்பளப் பிரச்சினையை முடித்துத் தருவதாக அறிவித்தார்கள். இப்பொழுதும் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பலமுறை எங்களுடைய குறைகளையெல்லாம் சொல்லிவிட்டோம். சொல்ல அங்கேயிருக்கிற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், பனியிலும், முடியாத துயரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கொட்டுகிற மழையிலும், வெயிலிலும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்பினார்கள். ஊதிய உயர்வு தொடர்பாக தோட்ட அதிபர்களும், தொழிற்சங்க நிர்வாகிகளும், 2005 ஆம் ஆண்டு நேரடியாகச் செய்து கொண்ட ஒப்பந்தம், கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி முடிவிற்கு வந்தது. தொழிலாளர்களின் நலனில் அக்கறையுள்ள கலைஞர் அவர்களது அரசு, புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை 31-12-2007-க்குள் முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், பழைய ஒப்பந்தம் முடிவதற்குச் சுமார் 4 மாதங்களுக்கு முன்பாகவே, நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கத்தினரையும் அழைத்துப் பேசியது நம்முடைய அரசு. என்னுடைய அறிவுரையின்பேரில், தொழிலாளர் துறை ஆணையர், இப்பிரச்சினை சம்பந்தமாக இரு தரப்பினரையும் அழைத்துப் பேசியிருக்கிறார் இப்பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் தாங்களே பேசி முடிவு செய்துகொள்வதாக அறிவித்து, அதைத் தொடர்ந்து புதிய ஒப்பந்தம் சம்பந்தமாக, 26-9-2007, 26-10-2007, 14-11-2007, 1-12-2007, 19-12-2007 29-12-2007 ஆகிய தேதிகளில் தோட்ட நிர்வாகிகளும், தொழிற்சங்கத்தினரும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், இரு தரப்பினரும் தொடர்ந்து பேசி வந்தபோதிலும், இப்பிரச்சினையில் ஒரு நல்ல முடிவு [illegible]

2.2.8100
சென்னை-600 008

வேண்டுமென்பதற்காக, 3-1-2008, 6-1-2008 ஆகிய தேதிகளில் இரு தரப்பினரையும் சென்னைக்கு அழைத்து நானே நேரில் பேசினேன். விரைவில் இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காணப்படவில்லையென்றால், அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை வரும் என்று கூட்டத்தில் வலியுறுத்திக் கூறி அனுப்பியிருக்கிறேன். இதைத் தொடர்ந்து, 22-1-2008 மற்றும் 23-1-2008 ஆகிய தேதிகளில் இரு தரப்பினரும் மீண்டும் கூடிப் பேசியிருக்கிறார்கள். தொடர்ந்து 29-1-2008 அன்றும் பேசியிருக்கிறார்கள். மீண்டும் வருகின்ற 5-2--2008 அன்றும் கோவையிலே பேச்சுவார்த்தை நடத்துவதாக நேற்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, 125 ரூபாயிலிருந்த தொழிற்சங்கத்தினர், இன்றைக்கு சற்று இறங்கி வந்திருக்கிறார்கள். அதைப்போலவே, நிர்வாகத் தரப்பினரும் குறைந்த கூலி தருவதாக இருந்தவர்கள், கொஞ்சம் ஏற்றித் தருவதாக வந்திருக்கிறார்கள். ஆகவே, இப்பிரச்சினை நிச்சயமாக இன்னுமொரு 10, 15 தினங்களுக்குள்ளாக முடிகிற ஒரு நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கோவை தங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை உங்களைப் பற்றித்தான் பேசுகிறார், திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் விவாதத்தைத் தொடங்குகிறபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் வேகத்தோடு பேசுகிறபோது இவர் குறிப்பிட்டு, ** என்று சொன்ன வார்த்தையைத் தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ** என்று திரு. கோவை தங்கம் அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மூத்த தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம்,

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மூத்த தொழிற்சங்கத் தலைவர்கள் தலைமையிலே ஒன்றாகக்கூடி பேசுகிறபோது, நியாயமாகக் கணக்குப்போட்டு, இதுவரை 2002 ஒப்பந்தப் பிரகாரம், 2005-லே ஏற்பட்ட ஒப்பந்தம் தவறான ஒப்பந்தம். ஆகவே, 2002-லேயிருந்து தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சம்பளம் ரூ.95.76. இந்த ரூ.95.76-க்குமேல் நீங்கள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்று நிர்வாகத்திடம் கூறினார்கள். இது 31-12-2007 உடன் முடிகிறபோது மீண்டும் ஒரு புதிய ஒப்பந்தம். ஆக, 95.76-க்கு மேல் புதிய ஒப்பந்தத்தோடு சேர்த்து 110 ரூபாய், 115 ரூபாய் வரைக்கும் சம்பளம் வரவேண்டுமென்ற கருத்தினை இன்று வலியுறுத்தி பேசிக்கொண்டிருக்கின்றோம்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், நான் இரண்டு முறை அழைத்துப் பேசினேன் என்று. உண்மைதான். பேசி வலியுறுத்தினார். ஆனால், அதேசமயத்தில், இரண்டு முறை பேசிய பிறகு, அவர்கள் முத்தரப்பு பேச்சுக்கு வழி ஏற்படாமல், இரு தரப்பு பேச்சுவார்த்தை ஏற்பட்டுவிட்டதால், இப்பொழுது தொழிற்சங்கத் தலைவர்களுடன் முதலாளிகள் நேரடியாகப் பேசுகிறபோதுதான் அங்கே நியாயமான சம்பளப் பேச்சுவார்த்தை தொழிலாளர்களுக்கு நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் நேரடியாக, தமிழ்நாட்டில் இருக்கிற தேயிலைத் தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகக்கூடி இனிமேல் உங்கள் முன்னால்தான் பேச்சுவார்த்தை வைப்போம், தேயிலைத் தோட்ட நிர்வாகத்தோடு நாங்கள் பேச்சுவார்த்தை வைக்கமாட்டோம் என்று கூறினார்கள். அப்படி இருக்கிறபொழுது இனி மேற்கொண்டு பேச்சுவார்த்தை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் முன்னிலையில், ஏற்கெனவே இரண்டு முறை பேசிவிட்டார், மூன்றாவது முறையும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் முன்னிலையில்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், நேரமாகிவிட்டது. 18 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். அதற்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த அவையிலே அவர்கள்

அறிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இன்று தமிழ்நாட்டில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 5 ஆம் தேதி பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 5 ஆம் தேதியும் அந்த பேச்சுவார்த்தை முடியவில்லையென்றால் நேராக என்னுடைய தலைமையிலேயே அந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று சுமுகமான முடிவை இந்த அரசு ஏற்படுத்தித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. விதி 110–ன்கீழ் அறிக்கை

### தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகச் செயல்படுவோர்மீது நடவடிக்கை – மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக செயல்படும் போக்கு குறித்து 29-1-2008 அன்று பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது அத்தகைய செயல்கள் பற்றி, தக்க திறமையான கற்றறிந்த வழக்கறிஞர்களுடைய குழுவிலே ஆராய்ந்து அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமேயானால், அதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, இன்று (30-1-2008) காலையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நிதியமைச்சர் பேராசிரியர், நான், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, அட்வகேட் ஜெனரல் திரு. மாசிலாமணி, உள் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், டி.ஜி.பி., எ.டி.ஜி.பி., (புலனாய்வுத் துறை) ஆகியோர் கூடி விவாதித்தோம்.





இதற்காகப் புதிதாகச் சட்டம் கொண்டுவர வேண்டுமா அல்லது ஏற்கெனவே உள்ள சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்க இயலுமா என்றெல்லாம் கலந்தாலோசிக்கப்பட்டு, இறுதியாக எடுக்கப்பட்ட முடிவு வருமாறு:–

பிற்பகல் 12-45

"தடை செய்யப்பட்டுள்ள எந்த இயக்கமாயினும் அவற்றுக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதோ, செயல்படுவதோ, துண்டு அறிக்கைகள், சுவரொட்டிகள் வெளியிடுவதோ, ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாநோன்புகள் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதோ, அவற்றில் கலந்துகொள்வதோ The Unlawful Activities (Prevention) Act, 1967 (37 of 1967) சட்டப்படி குற்றமுடையதாகும். அத்தகைய குற்றமிழைப்போர் தனிப்பட்டவராயினும், சங்கம் அல்லது அமைப்பு ரீதியில் இயங்குவோராயினும், அவர்கள் அரசின் இந்த அறிவிப்பினை உரிய எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதையும் மீறி மேற்கண்ட நடவடிக்கைகள் ஏதேனும் ஒன்றில் யார் ஈடுபட்டாலும் அவர்கள், மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்தின்படி நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள்."

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். ஒரு நிமிடம்தான். ஏற்கெனவே நிறைய நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** நன்றி, நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சினைகளை முடித்துத் தருவதாகக் கூறியிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அப்படி ஒத்துவரவில்லையென்று சொன்னால், அரசாங்கமே அந்த TANTEA–ஐப் போல அந்தத் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தை எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியிலே இருக்கின்ற அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வால்பாறையிலே

[திரு. கோவை தங்கம்] [2008 ஜனவரி 30

இருக்கின்ற மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏதாவது உடல்நிலை பாதிக்கப்பட்டால் வால்பாறையிலிருந்து கோவை பெரிய ஆஸ்பத்திரிக்கு 100 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

அப்படிப் போகின்ற வழியில், பல உயிர்கள், பல நேரங்களிலே இறக்கின்ற நிலை ஏற்பட்டிருப்பதால் நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக நீங்கள் வால்பாறைக்கு வந்து, வால்பாறை தொகுதியில் இருக்கின்ற அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது பால் உணவுப் பொருட்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை வால்பாறையிலே ஏற்படுத்தப்படும் என்று கூறினார்கள். இன்னும் எந்த அளவில் அவருடைய முயற்சி இருக்கிறது என்று தெரியவில்லை. வால்பாறையிலே பால் உணவு உற்பத்தித் தொழிற்சாலையை உருவாக்கி, உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய கோவை மாவட்டத்தினுடைய அமைச்சர் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. பொங்கலூர் பழனிசாமி அவர்கள் கோவை மாவட்டத்தில், குறிப்பாக வால்பாறை தொகுதிக்கு நிறைய உதவிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஊரகத் தொழில் துறைமூலமாக அங்கே சிறு தொழில் தொடங்குவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டு மக்களுக்கு கல்வி மிக முக்கிய அடிப்படைத் தேவையான ஒன்றாக இருக்கிறது. சமச்சீர் கல்வி குறித்து, கடந்த தொடரிலே கல்வி குறித்த முத்துக்குமரன் அறிக்கை அவையில் வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில், சமச்சீர் கல்வி, தமிழ் வழிக் கல்வி பற்றியெல்லாம் அரசு காலம்தாழ்த்தாமல் விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சர் அவர்களும் விரைவிலே சமச்சீர் கல்வி கொண்டுவரப்படும் என்று பத்திரிகைகளின் வாயிலாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட,



2008 ஜனவரி 30] [திரு. அ. தமிழரசு]

"ஆக்கப்பொறுத்ததை ஆறப் பொறுக்க வேண்டுமென" கூடக் கூறியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, ஆக்கி பல ஆண்டுகாலமாகிவிட்டது. ஆறியும் பல ஆண்டு காலம் ஆகிவிட்டது. எனவே, காலங்கடத்தாமல், வரும் கல்வியாண்டிலே கட்டாயமாக இந்தச் சமச்சீர் கல்வியைக் கொண்டு வரவேண்டும். ப்ளஸ் 2 வரை தமிழ் வழிக் கல்வியைச் செயல்படுத்த இந்தத் தொடரிலேயே சட்டம் நிறைவேற்ற வேண்டுமென அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே மேட்டூர் அணை இருக்கிறது. அந்த மேட்டூர் அணையிலே இந்த ஆண்டு மட்டும் 7 முறை தண்ணீர் நிரம்பிச் சென்றிருக்கிறது. கடலிலே கலந்திருக்கிறது. இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுடைய தலைமையிலே மிகப் பெரிய ஒரு கோரிக்கைப் பேரணியை அரசுக்கு வைக்கின்றவகையிலே, மேட்டூரிலே இருக்கின்ற காவிரி நீரை, அதுவும் குறிப்பாக பதினாறுகணவாயிலே நிறைந்து செல்கின்றபோது தாரமங்கலம் தொகுதியிலே, பூனாண்டியூர் என்ற இடத்திற்கு அருகிலே முல்லைரோடு என்ற இடத்திலே நிரம்பியிருக்கின்ற அந்தத் தண்ணீரை, எப்படியாவது ஒரு திட்டத்தின்வாயிலாக, மேச்சேரிக்குக் கொண்டுவந்தால், மேச்சேரியிலிருந்து, ஓமலூருக்கு சரபங்கா ஆற்றின்வழியாக அந்தத் தண்ணீரை விடும்பொழுது, தாரமங்கலம் தொகுதி, எடப்பாடி தொகுதி, சேலம் மாவட்டம் முழுவதும் அனைத்துப் பகுதிகளுக்கும் பாசனத்திற்காக அந்தத் தண்ணீரைக் கொண்டு செல்ல முடியும் என்று அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறோம். அதன் வரைபடத்தையும், சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்தக் கடிதங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நேரிலே கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்து, சட்டப் பேரவை உறுப்பினர்களாலும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களாலும் என்னுடைய கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு நானே நேரிலே வருகிறேன். அந்த இடங்களைப் பார்த்து, தேவையென்றால் அந்த நல்ல காரியத்தை அரசு நிச்சயம் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 ஜனவரி 30

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்து செய்து தருவதாகச் சொன்னதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, சேலம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்கு ஏற்காடு பகுதியிலேயிருந்து வருகின்ற மழை நீர் ஓமலூர் தொகுதியிலே சர்க்கரைசெட்டிப்பட்டி என்ற ஊராட்சி வழியாக வந்துகொண்டிருக்கிறது. இதுவும், சரபங்கா ஆற்றின் வழியாக காவிரியைச் சென்றடைகிறது. பாசனத்திற்குப் பயன்படாமல் செல்கிறது. எனவே, இந்த நீரை சர்க்கரைசெட்டிப்பட்டி ஊராட்சியிலே, புறமெச்சிக்கரடு என்ற பகுதியிலே ஒரு சிறு அணையைக் கட்டினால், அந்த நீரைத் தேக்கி, அந்தப் பகுதியிலுள்ள அனைத்து ஏரிகளிலும் நிரப்பி, அதையும் பாசனத்திற்குப் பயன்படுத்தலாம். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே எனது கிராமமான புளியம்பட்டியிலே அங்கு ஒரு வாய்க்கால் வருகிறது. அந்த வாய்க்கால் வழியாக தண்ணீர் வரும்போது, சமீபத்திலே வெள்ளத்தால் உடைப்பு ஏற்பட்டு பெரும் பாதிப்புக்கு அந்தப் பகுதி மக்கள் உள்ளாகியிருக்கிறார்கள். இதை நான் பலமுறை எடுத்துச் சொல்லியும், பொதுப் பணித் துறை அதைச் செய்யாத காரணத்தினாலே நானும், நமது தாரமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும் சொந்தச் செலவு செய்து 2 இலட்சம் ரூபாயில் அதைப் புனரமைத்திருக்கிறோம். எனவே, அதற்கு ஒரு திட்டத்தைத் தயார் செய்து, அது நான்கு வழிப் பாதையைக் கடந்து செல்ல வேண்டி இருக்கிற காரணத்தினாலே, நான்கு வழிப் பாதையிலே தண்ணீர் செல்வதற்கு இடையூறாக இருக்கிறது. அதையும் சரி செய்து, அனைத்து ஏரிகளிலும் அந்தத் தண்ணீரை நிரப்பிக் கொடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற நிலங்களை நூற்றுக்கணக்கிலே வெளி மாநிலத்திலே இருக்கிறவர்கள் வாங்கி வருவது அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்நிலை இப்படியே நீடித்தால், எதிர்க்காலத்தில் பழைய ஜமீன்தார்கள் முறை வரும் அபாயம் தமிழகத்திற்கு உள்ளது. எனவே, வரும்முன் காப்போம் என்ற திட்டத்தின் அடிப்படையிலே அதற்கான ஒரு சட்டம் நிறைவேற்றி, வெளி மாநில தனியார் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வாங்குவதை இந்த அரசு தடை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



2008 ஜனவரி 30] [திரு. அ. தமிழரசு]

வேளாண் தொழில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு வேளாண் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டும். குறிப்பாக, நெல், கரும்பு. கரும்பை குறிப்பிட்ட காலத்திலே வெட்டி சர்க்கரை ஆலைகளுக்கு உடனுக்குடன் அனுப்பி பணப் பட்டுவாடா செய்கின்ற வகையிலே அரசு விரைவாகச் செய்ய வேண்டும்.

இன்றைக்கு Bt cotton என்று சொல்லக்கூடிய பருத்தி விதை, அந்த நிறுவனம் கொடுக்கின்ற அந்த விதையினால் விவசாயிகள் பெரிதும் பாதித்திருக்கிறார்கள். இதை நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே பேசி இருக்கிறேன். இதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எனது தொகுதிக்கு வந்து அந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூபாய் 5 ஆயிரம் நஷ்டஈட்டுத் தொகையை வழங்கி இருக்கிறார்கள். ஆனால், நாங்கள் அதற்கு முன்பாக அந்த நிறுவனத்தையே தடை செய்ய வேண்டும். அதனால் விவசாயிகள் பெரிதும் பாதித்திருக்கிறார்கள் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். எனவே, இப்பொழுதும் அதை இந்த அவையிலே வலியுறுத்துகிறேன். அதைப்போன்ற பருத்தி விதைகளை விற்பனை செய்யக்கூடிய அந்த நிறுவனத்தைத் தடை செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே நான் வலியுறுத்துகிறேன்.

இன்றைக்குப் பேருந்துகளிலே மகிழுந்து, பேருந்து, சரக்குந்து உட்பட அனைத்து வாகனங்களிலும் காற்று ஒலிப்பான்களைப் பயன்படுத்தக்கூடாது எனத் தடை உள்ளது. இப்படி இருந்தும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, அந்தத் தடையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், பேருந்துகளிலே முன்பாதியிலே பெண்களும், பின்பாதியிலே ஆண்களும் பயணம் செய்யலாம் என்ற ஆணையும் இருக்கிறது. அதுவும் இன்றைக்கு தமிழகத்திலே முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

இப்போது, எனது தொகுதியிலே மட்டுமல்லாது, சேலம் மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களிலே சாராயம் தாராளமாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள், புகைப்படங்கள்

[திரு. அ. தமிழரசு] [2008 ஜனவரி 30

என்னிடத்திலே இருக்கின்றன. நான் ஆதாரத்தோடு சொல்கிறேன்; கள்ளச் சாராயம், அதுவும் ஒரு பெண்மணி விற்பனை செய்யக்கூடிய நிலை. இதற்காகப் புகார்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம், எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த நிர்வாகிகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இப்போதிருக்கிற காவல் துறை அதன்மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த கூட்டுறவுத் தேர்தலில் ஓமலூர் பேருந்து நிலையத்தில் இருக்கின்ற வங்கியிலே தேர்தல் அதிகாரி தேர்தல் நடத்துவதற்கு வரவில்லை என்று மக்களிடத்திலே ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக அங்கே நான் சென்றபோது, அங்கு வட்டாட்சியரும், அங்கே இருக்கிற டி.எஸ்.பி. அவர்களும் இருந்தபோது, பொது மக்கள் முன்னிலையிலே, தேர்தல் அதிகாரி வரவேண்டுமென்று நான் கேட்டு, அங்கு அமர்ந்திருந்தேன். அமைதியாக அங்கு நான் அமர்ந்து இருந்தேன். அந்தவேளையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினர் நின்றுகொண்டு அங்கு பிரச்சினை செய்ததோடு மட்டுமல்லாமல், என்மீது சோடா பாட்டில் வீசப்படுகிறது, கொலை முயற்சி அங்கே நடக்கிறது. இது அங்கிருக்கிற பொது மக்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும். ஏன் இதை இங்கு சொல்கிறேன் என்று சொன்னால், இ.த.ச. 506 (2) என்ற அந்தச் சட்டப் பிரிவின்கீழ் கொலை முயற்சி வழக்கு என்மீது போடப்பட்டிருக்கிறது. அங்கு கொலை செய்ய வந்தவர்கள் விடுவிக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் இதை ஆதாரத்தோடு கொடுத்திருக்கிறேன். நான் சென்றதிலிருந்து திரும்பி வந்தவரை என்னிடத்திலே புகைப்படம் இருக்கிறது. அங்கு வீடியோ எடுக்கப்பட்ட அந்த ஒளிநாடா இருக்கிறது. இதைக் காவல் துறையும் எடுத்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே மாண்புமிகு தமிழக முதல்வருடைய அறைக்கு காவல் துறை சென்றது எப்படிச் சரியாக இருக்கும், இது சரி இல்லை என்று இந்த நாட்டு மக்களிடத்திலே எடுத்துப் பேசியிருக்கிற ஒரு இயக்கமாக பாட்டாளி மக்கள் கட்சி இயக்கம் இருந்திருக்கிறது. அதனுடைய சட்டமன்ற உறுப்பினராக நான் இருக்கிறேன். ஆக, இன்றைக்கு எனக்கே இந்த நிலைமை இருக்கிறது. கடந்த 6 மாத காலமாக இப்படி என்மீது இந்த வழக்கு இருந்துகொண்டிருக்கிறது. இதை இதுவரை நீக்கவில்லை. பலமுறை நான் எடுத்துச் சொல்லியும், இதைக் காவல் துறை கண்டுகொள்ளாத ஒரு நிலையிலே இருக்கிறது. இதற்கெல்லாம் யார் காரணம்? காவல் துறை, அதைச் சார்ந்து யார் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு கண்டறிந்து செயல்பட வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும்.



2008 ஜனவரி 30] [திரு. அ. தமிழரசு]

என்மீது போடப்பட்டிருக்கிற அந்தப் பொய் வழக்கை நீக்க வேண்டும் என்று இந்த அவையிலே நான் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்) கொஞ்சம் தயவுசெய்து பொறுமையாக இருங்கள். பிரச்சினை இருக்கிறது, நாங்கள் கொஞ்சம் சொல்ல வேண்டும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினரைப் பற்றி இன்னொரு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் அந்தக் குற்றச்சாட்டை முதலிலேயே மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரிவித்து, அந்த உறுப்பினருக்குத் தெரிவித்த பிறகுதான் பேச வேண்டும் என்பது மரபு. ஆனால், ** மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்; அது முன்னாலேயே உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதா? இதை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்மீது ஓர் உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்கிறபோது அந்த அமைச்சர் சொல்லலாம், இல்லையென்றால் மற்றொரு அமைச்சர், இங்கே பதில் சொல்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே அதைச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது வேறு. ஆனால் இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினரைப் பற்றி இன்னோர் உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்கிறபோது அதை முன்பே சபாநாயகருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறது. எனவேதான் அனுமதிக்கிறீர்களா என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாக என்னிடம் எந்தக் குற்றச்சாட்டும் யாரும் சொல்லவில்லை. அதனாலே அவர் சொன்ன குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) பேசுங்கள், பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஜனவரி 30

பிற்பகல் 1-00

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விளக்கமாகத்தான் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், என்னிடத்தில் சொல்லிவிட்டுத்தான் பேச வேண்டும்.

**திரு. அ. தமிழரசு:** எனக்குப் பேசுகின்ற வாய்ப்பு வருகின்றபோதுதான், நான் சபையில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. என்னிடம் நீங்கள் கேட்கவில்லை.

**திரு. அ. தமிழரசு:** நான் இதுகுறித்து முதலமைச்சரிடம் கடிதம் கொடுத்திருக்கின்றேன். அனைவருக்கும் கடிதம் கொடுத்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய கவனத்திற்கு நீங்கள் அதைக் கொண்டு வரவேயில்லை. (குறுக்கீடு) மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குற்றச்சாட்டுக்காக சொல்லப்படுவதல்ல. ** என்று மன்றத்தில் கேட்காமல், வேறு எங்கே கேட்பது? ஆகவே, அதை நீக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது கவனத்தில் கொள்ளப்படும். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொல்வதைப் போல, அவருக்குச் சொல்வதற்கு உரிமை உண்டு. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் சொல்வதற்கு என்று ஒரு மரபு இருக்கிறது. அந்த மரபு பின்பற்றப்பட்டதா என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு) அதாவது, நேற்றே நான் சொன்னேன். குற்றச்சாட்டு என்பது வேறு. நேற்று ஒரு செய்தி சொன்னதே, குற்றச்சாட்டாக இருந்து, அதைச் சபைக் குறிப்பிலிருந்து எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். ** அந்தக் குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னால் சபாநாயகரிடம் தெரிவித்திருக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. (குறுக்கீடு) திரு. மணி, நான் விதி 93-ஐ வாசிக்கின்றேன், கேளுங்கள். "ஓர் உறுப்பினர் எழுத்து மூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கு தெரிவித்திருந்தாலன்றி, மற்ற எந்த உறுப்பினர்மீதோ அல்லது எந்த அலுவலர்மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையில் அவர்மீது குற்றம் சாட்டக்கூடாது." (குறுக்கீடு) விடுங்கள், விடுங்கள். அதாவது அனுமதியில்லாமல் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. (குறுக்கீடு) சரி, தகவலுக்காகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். இனிமேல் அந்த மாதிரி வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ** சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆயிற்று, அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன். இன்னும் பல உறுப்பினர்கள் பேசவேண்டி இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கக் கூடாது. இது உறுப்பினருடைய உரிமைப் பிரச்சினை. தகவலுக்காகச் சொல்கிறோம். நீக்குகிறீர்கள் என்று சொன்னால், எங்கள் உரிமை பறிக்கப்படுகின்றது. ** எங்கே பார்த்துச் சொல்வது? இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய நடவடிக்கை விதியை மீறிய செயல், ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. மணி அவர்களுக்குத் தெரியாதது அல்ல ** ஆனால், அதுமட்டுமா அவர் சொன்னார். ** அந்தக் குற்றச்சாட்டை நீக்க வேண்டுமென்பதுதான் வாதமே தவிர, தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. ** சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுதானே. (குறுக்கீடு) அதுதான் ** என்ற வரியை குற்றச்சாட்டிலிருந்து நீக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். திரு. தமிழரசு, நீங்கள் மேற்கொண்டு பேசுகிறீர்களா? அடுத்த உறுப்பினரைக் கூப்பிடட்டுமா?

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த சம்பவத்தை இங்கே சொல்கிறேன். தயவுசெய்து நீங்கள் இதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். வருங்காலங்களில் இந்த மாதிரி சட்டமன்ற உறுப்பினருடைய. . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கட்சி உறுப்பினர்களெல்லாம் பேசவேண்டி இருக்கிறது.

**திரு. தி. வேல்முருகன்:** **

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்னதுபோல், இப்போது அவர் சொன்ன குற்றச்சாட்டு உண்மையா, பொய்யா என்பதல்ல இங்கே வாதம். அது சரியா, இல்லையா என்பதல்ல வாதம். ஆனால், சொல்லப்பட்ட விதம் இங்கே மரபை மீறி இருக்கிற காரணத்தால் அவையினுடைய மரபுக்கு உகந்ததாக இல்லை என்று சொல்கிறோம். மூன்றாவதாக இன்னொன்று, மாண்புமிகு திரு. வேல்முருகன் அவர்கள், அவர் என்ன கருத்து சொன்னாரோ அதே கருத்தை திருப்பி அவர் point of order-ல் கிளப்பியிருக்கிறார். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதையும் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன் சொன்ன அந்த வார்த்தைகளும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சார், திரு. வேல்முருகன், நீங்கள் சொன்னது குற்றச்சாட்டு, தெரிகிறதா? (குறுக்கீடுகள்) என் கருத்துப்படி அது குற்றச்சாட்டு. அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No second thought. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 30]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து உங்களைப் பேசச் சொன்னேன்.

**திரு. வே. மாரிமுத்து:** ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய அடிப்படையில் தமிழகத்திலே குடியிருக்கிற, இடமற்ற (குறுக்கீடுகள்) ஏழை மக்களுக்கு மூன்று இலட்சம் இலவசப் பட்டா . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய முடிவை சொல்லியாகிவிட்டது. முடிவில் மாற்றம் கிடையாது. திரு. மாரிமுத்து, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய அடிப்படையில், (குறுக்கீடுகள்) தமிழகத்திலே குடியிருப்பு மனை இல்லாத மக்களுக்கு இடமற்ற ஏழைகளுக்கு இந்த ஆண்டிற்குள் 3 இலட்சம் இலவசப் பட்டா வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு அந்த இலக்கு நிறைவேற்றப்பட்டிருப்பதாக ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஏறத்தாழ மூன்று இலட்சம் மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது, இந்த அரசு செய்திருக்கக்கூடிய பாராட்டிற்குரிய விஷயம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஏழை மக்களுக்கு வழங்கக்கூடிய பட்டாவிற்கு ஏற்கெனவே இருந்த வருமான வரம்பினைத் தளர்த்தியதும், 10 ஆண்டுகள் என்பதை ஐந்து ஆண்டுகளாகக் குறைத்ததும் பாராட்டிற்குரிய விஷயம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பார்க்கிறது. (குறுக்கீடுகள்) அத்துடன். இன்றைக்கு . . .

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்)

அத்தோடு, இன்றைக்கு அரசின் கவனத்திற்கு நாங்கள் கொண்டுவர விரும்புவது மேலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். மாநிலம் முழுவதும் வாழ்வதற்கு வீடற்ற நிலையில் இருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு மீண்டும் பட்டா கிடைப்பதற்குண்டான முறையில் விரிவுபடுத்த வேண்டுமெனக் கருதுகிறோம்.

தமிழகத்திலே நீர்நிலை புறம்போக்குகளிலும் மற்றைய புறம்போக்குகளிலும் வாழ்கின்ற மக்களுக்கும் பட்டா கிடைக்கின்ற வகையில் அந்த மனைகளை வகை மாற்றம் செய்து மக்களுக்குப் பட்டா கிடைப்பதற்கு உண்டான முறையில் அரசு துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகிறோம். அதேபோல, இன்றைக்கு அரசின் கவனத்திற்கு நாங்கள் கொண்டுவர விரும்புவது நீண்டகாலமாக தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய இன்னொரு முக்கியமான பிரச்சினை, கோயில் மனைகளிலே பல இலட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 50 ஆண்டு காலமாக சட்டமன்றத்திலே, தமிழகத்தினுடைய பொது மேடைகளிலே, விவாதத்திற்கு உட்பட்டு வரக்கூடிய இந்தப் பிரச்சினை இன்று வரை தீர்க்கப்படாமல் இருக்கிறது. எனவே, கோயில் மனைகளிலே குடியிருக்கக்கூடிய மக்களுக்கு அந்த இடத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்கிற கோரிக்கை என்பது தமிழகத்திலே இன்றைக்கு வலுத்து வருகிறது. அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது சென்னை சூளையிலே இருக்கக்கூடிய . . . (குறுக்கீடு)

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல அறநிலையத் துறையின் சார்பில் திருக்கோயில் நிலங்களில் குடியிருக்கக்கூடியவர்களுக்குப் பட்டா வழங்குவதென்பது இயலாத ஒன்று. நீண்ட காலமாகக் குடியிருப்போர் என்று கருதப்பட்டவர்கள் அடிப்படை வசதிகளை, மின் வசதி, குடிநீர் வசதி இவற்றைப் பெறுவதற்கு ஏதுவாக சென்ற அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது ஏறத்தாழ 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நீண்ட





நாள் குடியிருப்பவர்களுக்கு அந்த உரிமைகள், நியாய வாடகை நிர்ணயம் செய்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, பட்டா வழங்குவது என்பது அறநிலையத் துறை நிலங்களைப் பொறுத்தவரை, மனைகளைப் பொறுத்தவரை இயலாத ஒன்று என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நாங்கள் கோருவது எல்லாம் தமிழகத்திலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதன்மூலமாக இப்படிப்பட்ட கோயில் மனைகளை, கோயில் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு அவற்றைச் சொந்தமாக்க வேண்டும் என்பதுதான். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னை, சூளை, தட்டான்குளம் பகுதியில் இருக்கக்கூடிய அங்காள பரமேஸ்வரி கோயிலுக்குச் சொந்தமான அந்தப் பகுதியில் குடியிருப்புகள் உருவாகி ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அதேபோல வில்லிவாக்கத்திலே இருக்கக்கூடிய அகஸ்தீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்புகள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** 1910 ஆம் ஆண்டு குடியிருப்புகள் ஏற்பட்டு 99 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட பகுதியாகும். எனவே இப்படிப்பட்ட பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு அந்த இடத்தை நாங்கள் இலவசமாகக் கேட்கவில்லை. ஒரு தொகையைத் தீர்மானித்து அந்தத் தொகையின் அடிப்படையில் அந்த இடங்களை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

இதுசம்பந்தமாக 20-4-1960 ஆம் நாளன்று இந்த அவையிலே நில உச்சவரம்பு மசோதா சம்பந்தமாக முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகிறபோது, "அறநிலையங்களுக்கு ஏன் 200 ஏக்கர் தருகிறீர்கள். அது இல்லாவிட்டால் விபூதி மாடத்தில் விபூதி இருக்காதா, வில்வ மரம் வளராதா, சைவ நெறி தழைக்காதா, எதற்காக கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொத்து இருக்க வேண்டும், ஆகையால் மடாலயம், அறநிலையங்களுக்கு ஒரு துளியும் நிலம் இருத்தல் கூடாது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே அவையிலே பேசியிருக்கிறார்கள்.

[திரு. வே. மாரிமுத்து] [2008 ஜனவரி 30

அது மட்டுமல்ல, தமிழகத்தினுடைய முதல்வராய், பழுத்த அரசியல்வாதியாய், அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் 1980 ஆம் ஆண்டு புரசைவாக்கத்திலே விவசாயிகள் மாநாட்டிலே பேசுகிறபோது "கோயில் நிலங்களை, பயிரிடும் சாகுபடியாளர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும், நஷ்டயீடுகளை அரசு தவணைகளாகப் பெற வேண்டும், கோயில்களின் பெயரால் நிரந்தர வைப்புத் தொகையாக அந்தத் தொகையை வங்கியில் போட வேண்டும், அதன்மூலம் கிடைக்கக்கூடிய வட்டியைக் கொண்டு கோயில் காரியங்களைச் சிறப்பாக நடத்த முடியும் என்பது மட்டுமல்ல, ஊழல் இல்லாமல் நடத்த முடியும்" என்று பெரியவர் பக்தவத்சலம் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே 50, 60 ஆண்டு காலமாக தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வரக்கூடிய ஒரு பிரச்சினை என்கிற முறையில் அரசு இத்தகைய பிரச்சினையில் என்ன நிலை எடுக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். தமிழகத்திலே இலட்சக்கணக்கான மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல ஆளுநர் உரையில் அரவாணிகள் நல வாரியம் அமைக்கப்படும் என அறிவித்திருப்பது பாராட்டுக்குரிய விஷயம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. அதோடு அரசு கவனிக்க வேண்டிய இன்னொன்று, அமைக்கப்பட்ட வாரியங்களுக்குத் தேவையான நிதி என்பது ஒதுக்கப்படுகிறதா, போதுமான ஊழியர்கள் வாரிய அலுவலகங்களிலே இருக்கிறார்களா, அந்த வாரியத்தின்மூலம் போதுமான அளவுக்கு உறுப்பினர் சேர்ப்பு நடைபெறுகிறதா, சேர்த்த உறுப்பினர்களுக்கு உரிய நலச் சலுகைகள் வாரியத்தின்மூலம் வழங்கப்படுகிறதா என்று கேட்டால் அதில் பலவீனம் இருக்கிறது. வாரியங்களிலே போதுமான ஊழியர்கள் இல்லை. மீனவர்களுக்கு என்று தனி வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய நாகப்பட்டினத்தில்கூட மீன்வளத் துறையின்மூலமாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற உத்தரவு இருந்தாலும், இன்னும் எங்களுக்கு உத்தரவு கிடைக்கவில்லை என்கிற தகவல்தான் வந்து கொண்டிருக்கிறது. எனவே வாரியச் செயல்பாடுகளைக் கவனிக்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, சித்தாலை என்னும் ஊரைச் சேர்ந்த தனியார் மருத்துவமனையிலே பணியாற்றிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 30]

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் துவங்கப்பட்டு இருக்கின்ற மீனவ நல வாரியம் படிவங்கள் கடந்த வாரத்தில் முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்டு அந்தந்த மாவட்ட ஆய்வாளர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு அந்தந்த கிராமங்களுக்கு வழங்கப்பட்டு, இன்றைக்கு மாநிலம் முழுவதும் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, சித்தாலை என்னும் ஊரைச் சேர்ந்த செவிலியர் கற்பகவல்லி, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். மதுரை டி.வி.எஸ். நகரில், நாகேஷ் என்பவர் வீட்டில் மர்மமான முறையில் மரணம் அடைந்து இருக்கிறார். இது கொலையாக இருக்கலாம் என அப்பகுதி மக்களும் அவருடைய பெற்றோரும், உறவினர்களும் கருதுகிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம் உருவாகி இருக்கிறது. எனவே, மாநில அரசு இது சம்பந்தமாக உரிய முறையிலே நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துவதோடு விதிகளை மீறி பெற்றோர்களுக்கே தெரியாமல் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு அந்த issue எடுக்கப் போகிறோம். திரும்பி அதைச் சொல்லி ஏன் நேரத்தை waste பண்ணுகிறீர்கள்? விடுங்கள் அடுத்ததற்குப் போங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, கல்லூரிப் பேராசிரியர் பணி நியமனத்தில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கான பின்னடைவுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. தற்போது பணி நியமனத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. S.C., S.T-க்கான பின்னடைவுப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

அதேபோல, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணி நியமனத்திற்கான பணிகள் நடைபெற்று வருவதாக அரசு அறிவித்துள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் இளநிலை பட்டப் படிப்பில் எந்தப் பாடத்தில் படித்தார்களோ, அதே பாடத்தில் முதுநிலைப் பட்டப் படிப்பும் படித்து இருந்தால்தான் பணி நியமனம். இளநிலைப் பட்டம் ஒரு பாடத்திலும், முதுநிலைப் பட்டம் வேறு ஒரு பாடத்திலும் இருந்தால் பணி நியமனம் செய்யக் கூடாது என உத்தரவிடப்பட்டது. இதனால் பல்லாயிரக்கணக்கான முதுநிலை பட்டதாரிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, தற்போது மேற்கொள்ளப்படும் முதுநிலை ஆசிரியர் பணி நியமனத்தில் cross major கூடாது என கடந்த ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட உத்தரவை இரத்து செய்து பதிவு மூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அதேபோல, தமிழகத்திலே இருக்கக்கூடிய மலைப் பிரதேசங்களில் வாழ்கிற மக்களுக்கு இதுவரை வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைக்கவில்லை என்கிற கருத்து வந்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து, உரையை முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** எனவே, அடுத்த முறை வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகிறபோது அந்த மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

அதேபோல், மாநிலம் முழுவதும் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு அரசால் கட்டி வழங்கப்பட்டிருக்கிற தொகுப்பு வீடுகள், காலனி வீடுகள் இன்றைக்கு அந்த மக்கள் வசிப்பதற்கு இலாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. 1990 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட பல ஆயிரக்கணக்கான வீடுகளில் வாழ்கிற அந்த மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு வீட்டுக்கு ரூ.10,000 வழங்கலாம் என அரசு உத்தரவிட்டு இருந்தாலும், 10,000 ரூபாய் செலவில் அந்த வீடுகளைப் புதுப்பிக்கின்ற நிலையில் அந்த வீடுகள் இல்லை. எனவே, அரசு ஒரு சிறப்புத் திட்டத்தின்மூலமாக நிதியினை ஒதுக்கி பழுதடைந்து இருக்கக்கூடிய அத்துனை வீடுகளையும் இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என வலியுறுத்துகிறோம். அதேபோல, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மாரிமுத்து, உரையை முடியுங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும்.





**திரு. வே. மாரிமுத்து:** இதோ ஒரு நிமிடம். தமிழக அரசினுடைய பொது நிறுவனமாகிய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் மனைவீடுகள் பெற்று 15 ஆண்டுகள் முதல் 35 ஆண்டுகள் வரை கடந்தும் விற்பனைப் பத்திரம் கிடைக்காமல் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, விற்பனை ஒப்பந்த ஷரத்தின் அடிப்படையில் அந்த மக்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு பத்திரத்தை உடனடியாக அந்த மக்களுக்கு வழங்க வேண்டும். வட்டி, அபராத வட்டி போன்றவற்றையும் இரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்துவதோடு தமிழ்நாடு கூட்டுறவு வீடு கட்டும் இணையம் மூலமாக வீடு கட்ட கடன் வாங்கிய பல்லாயிரக்கணக்கான மீனவர்கள், (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிட்டேன். எங்கள் பகுதியில் வட்டி, அபராத வட்டியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. இராமச்சந்திரன்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைமீது என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடங்கள்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை 10 நிமிடங்கள். மேதகு ஆளுநர் உரைமீது என்னுடைய கருத்துகளை எடுத்துரைப்பதற்கு முன்பாக ஒரு கருத்தை இங்கே நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற வாழும் மகாத்மா என்று அனைவராலும் போற்றக்கூடிய எளிமையான வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான பொதுவுடைமை இயக்கத்தின் மகத்தான தலைவர் திரு. ஆர். நல்லகண்ணு அவர்களுக்கு, மேலும் அவர்களுடைய பணியை ஊக்குவிக்கும் வகையிலே டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விருது பெற்ற தலைவர் திரு. நல்லகண்ணு

அவர்கள் பணி சிறக்க வாழ்த்தி மேதகு ஆளுநர் உரை என்பது சம்பிரதாயச் சடங்காக இல்லாமல், இந்த அரசு கடந்த 1½ ஆண்டு காலமாகச் செயல்படுத்தி வருகின்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களும், எதிர்காலத்திலே நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் புதிய கொள்கை முடிவுகளும் இடம்பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. முழுப் பூசணிக்காயை எவ்வாறு சோற்றில் மறைத்து வைக்க முடியாதோ அதேபோலத்தான் இந்த அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் இந்த அரசின் சிறப்பான செயல்பாடுகளையும் யாராலும் குறை கூறவோ, மறுக்கவோ முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு இந்த அரசின் சிறப்பான செயல்பாடுகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு நாடு சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் முடிந்தும்கூட இந்த நாட்டினுடைய குடிமகன்தான் என்று சொல்லிக்கொள்வதற்கு கையளவு நிலம்கூட தனக்குச் சொந்தம் இல்லை என்ற நிலை இல்லாது, புறம்போக்கு வீட்டிலே பிறந்து, வாழ்ந்து தான் இறக்கும்போதுகூட புறம்போக்கு சுடுகாட்டிலே புதைக்கின்ற அல்லது எரிக்கின்ற ஓர் அவலநிலையைப் போக்குகின்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்திலுள்ள 3 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 10 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் கேட்டு விண்ணப்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, தகுதி படைத்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே இன்றைக்கு நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களான வாரி, குளம், குட்டை, ஏரி போன்ற புறம்போக்குகளிலே வீடு கட்டிக்கொண்டு பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வருவாய்ப் பதிவேட்டில்தான் அது நீர்நிலைப் புறம்போக்கு என்று இருந்து கொண்டிருக்கிறது. நமது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக அந்தப் பகுதியிலே வாழ்கின்றவர்களுக்கு, குடியிருப்பவர்களுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி போன்ற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அதேபோல, அங்கே குடியிருப்பவர்கள் பல ஆண்டுகளாக அரசுக்கு வீட்டுமனை வரி செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அது நீர்நிலைப் புறம்போக்கு என்று தவறாக வருவாய்த் துறை பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.





அத்தகைய நீர்நிலைப் புறம்போக்கில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அரசு பதவியேற்ற இந்த 19 மாத காலத்திற்குள் 1 லட்சத்து 38 ஆயிரம் ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையிலே 1 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. இன்றைக்கு இந்தியாவிலே மேற்கு வங்க மாநிலத்தையடுத்து அதிக நிலம் வழங்கிய ஒரு மாநிலம் தமிழகம் என்ற பெருமை நமது முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே இன்றைக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திலே என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியிலும், அதேபோல ஓசூர் சட்டமன்றத் தொகுதியிலும் 1989 ஆம் ஆண்டும் மற்றும் 2006 ஆம் ஆண்டும் நிலங்களை விநியோகம் செய்வதற்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியிலே 19 ஊராட்சிகளில் Hill Conservation Act, மலைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அந்த 19 ஊராட்சிகளில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் என்பது வழங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தடையாணையைத் தளர்த்தி என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியிலே உள்ள 19 ஊராட்சிகளிலே வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு 2 ஏக்கர் நிலத்தை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஓசூர் தாலுகா பெங்களூருக்கு அருகிலே இருப்பதால் அங்கே நிலத்தினுடைய மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது. ஆகவே, அங்கு பட்டா வழங்க முடியாது என்று வருவாய்த் துறை அதிகாரிகள் கூறி வருகிறார்கள். ஆகவே, இதுவரை ஓசூர் தாலுகாவிலே சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்படவில்லை. சுவாதின அனுபவத்தில் உள்ள நிலத்திற்கும் பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, நிபந்தனையோடுகூடிய பட்டாவை 25 ஆண்டுக்ள் அந்த விவசாயிகள் விற்க முடியாது என்று அரசு நிபந்தனை போட்டு, பட்டா வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசின்முன் நான் வைக்கிறேன்.

அதேபோல, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம். கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்ட மக்களுடைய ஜீவாதார கோரிக்கையாக இருப்பது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம். கடந்த 1968 ஆம் ஆண்டிலிருந்து

ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தேர்தல் அறிக்கையிலும், அதேபோல கவர்னர் உரையிலும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் இதுவரை அந்த ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் அந்த 2 மாவட்ட மக்களுக்கும் கானல் நீராகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர்கூட சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக 29-4-2006-ல் தருமபுரிக்கு வந்தபோது கழக ஆட்சி வருமேயானால் நிச்சயமாக இந்த இரண்டு மாவட்ட மக்களுடைய நிரந்தரப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையிலே ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை அமல்படுத்துவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலே இன்றைக்கு கவர்னர் உரையில் அது இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல, அந்த ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து தங்களுடைய பொற்கரங்களால் அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நாள் அந்த இரண்டு மாவட்டத்து மக்களுடைய வாழ்க்கையிலே பொன்னாளாக அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பள்ளிக் கல்வித் துறையிலே பல்வேறு மாற்றங்கள் நிகழ்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக, இன்றைக்கு சமுதாயத்தில் நிலவுகின்ற பல்வேறு மாற்றங்களைப் போக்கும் வகையிலே அனைவருக்கும் சமச்சீர் கல்வியை இந்த நிதியாண்டிலே கொண்டுவரப்படும் என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல, அனைத்துச் சிறார்களும் 10 ஆண்டுகள் கல்வி பெறும் வகையிலே இந்த அரசால் இடைநிலைக் கல்வி 11-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே துவக்கப்படும் என்பது வரவேற்கத்தக்கது.

*பிற்பகல் 1-25*

குறிப்பாக என்னுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓசூர் மற்றும் தளி சட்டமன்றத் தொகுதிகளிலே 60 சதவிகிதம் மக்கள் தெலுங்கு பேசக்கூடிய மக்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட தெலுங்குப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், கடந்த 7 ஆண்டுகளாக அங்கே B.T. ஆசிரியர், அதாவது தெலுங்கு வழி B.T. ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. 800 மாணவர்கள் படிக்கின்ற பள்ளியிலே ஓரே ஒரு ஆசிரியர் இருக்கின்ற நிலைமை என்பது பல பள்ளிகளிலே



தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நமது முதல்வர் சிறுபான்மை மக்கள்மீதும், சிறுபான்மை மொழிமீதும் ஆர்வம் கொண்டவர். ஆகவே, சிறுபான்மை மக்களுடைய சமூகப் பாதுகாவலராக இருக்கின்ற நமது முதல்வர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) தெலுங்கு, கன்னடம் மற்றும் உருது பள்ளிகளிலே இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சட்டம்-ஒழுங்கு பற்றியெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பெரிய விவாதம் நடந்தது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை. (குறுக்கீடு) உரையை முடியுங்கள். நான் இரண்டுமுறை மணி அடித்துவிட்டேன். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** கடந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, இந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, சமூகவிரோதச் செயல்கள் என்பது எல்லா ஆட்சியிலும் நடைபெற்றுள்ளன. ஆனால், தமிழகத்தில் ஏதோ சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டதாக, இந்த ஆட்சி ராஜினாமா செய்ய வேண்டுமென்று பல்வேறு தலைவர்கள் எல்லாம் பத்திரிகைகளிலே பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய கருத்து என்னவென்றால், சமூகவிரோதச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். அந்தச் சமூகவிரோதச் செயல்களைச் செய்பவர்கள் யாராக இருந்தாலும், கட்சிப் பாகுபாடு இல்லாமல் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்திலே, அப்படித் தண்டிக்கும்போது, அதாவது, மனித உரிமைகளை பாதிக்காதவாறு அந்தச் சட்டங்கள் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, விலைவாசி உயர்வு என்பது இன்றைக்குத் தமிழகத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுதுரை. (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பில் பேசுங்கள். உட்காருங்கள்.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இலட்சோபலட்சம் தொண்டர்களின் உழைப்பாலும், இரத்தத்தாலும், சிந்திய வியர்வையாலும் கட்டப்பட்ட ஓர் எஃகுக் கோட்டையாகும். எந்தச் சக்தியாலும், எத்தகைய கூட்டணியாலும் இக்கோட்டையை

அசைக்க முடியாது என்பதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இராணுவக் கட்டுப்பாட்டைப்போல் கழகத்தைக் கட்டுக்கோப்புடன் காத்து வரும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனக் கருதி நாள்தோறும் மக்களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 'எப்போதெல்லாம் அதர்மம் தலைவிரித்தாடுகிறதோ அப்போதெல்லாம் நான் அவதரிப்பேன்' என்று கீதையிலே கண்ணன் கூறியதைப்போல, நாட்டில் எங்கெல்லாம் கொடுமைகளும், அதர்மங்களும் கோலோச்சுகிறதோ அங்கெல்லாம் தன் படைத் தளபதிகளை அழைத்து அவற்றை எதிர்த்துப் போராட வைக்கிறார்.

மக்கள் குறை தீர்ப்பதில் நாள் தவறாமல் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை செய்து வருகிறார். அன்பின் திருவுருவாய், தியாகத்தின் இலக்கணமாய், செயலாற்றலில் பொக்கிஷமாய்த் திகழும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஆளுங்கட்சிக்குச் சிம்மசொப்பனமாகக் காட்சியளிக்கிறார்கள். அந்த ஒப்பற்ற, ஈடு இணையற்ற ஒரு தலைவியின் தலைமையின்கீழ் இயங்கும் பேரியக்கத்தின் கடைகோடி தொண்டனாய் நின்று இந்த அவையிலே பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, ஆளுநர் உரைமீது சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்ததைப்போல், ஆளுநர் உரை என்றால் அதில் ஒரு தொலைநோக்குப் பார்வை இருக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழகம் எப்படி வளர்ச்சியடைய வேண்டும், எத்தகையத் திட்டங்கள் மக்களுக்குப் பயனுள்ளவையாக இருக்கும் என்பன போன்ற கருத்துகளை மனதில் கொண்டு ஆளுநர் உரையைத் தயாரித்திருக்க வேண்டும். ஆனால், கடந்த 23 ஆம் தேதி மேதகு ஆளுநர் இங்கு ஆற்றிய உரையில் உருப்படியான அறிவிப்புகளும், திட்டங்களும் இல்லை என்பதை நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் நாட்டின் சட்டம்-ஒழுங்கு தறிகெட்டு ஓடுகிறது. ரவுடிகள் சாம்ராஜ்ஜியம் தலைவிரித்தாடுகிறது என்று மக்கள் சொல்வது உண்மையாகி வருகிறது. அதேபோன்று,





விடுதலைப் புலிகள் ஊடுருவலும், அவர்கள் இஷ்டப்படி இங்கு கொட்டம் அடிப்பதும் இந்த ஆட்சியில்தான் நடக்கின்றன என்ற நிதர்சன உண்மைகளை மக்கள் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் சட்டம்-ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ரவுடிகள் அட்டகாசத்தை அடக்கி வைத்திருந்தார் எங்கள் அம்மா. யாராலும் பிடிக்க முடியாது என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த வேளையில் சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடித்து சரித்திரம் படைத்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஆட்சியின்போது சென்னையில் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரபட்சமின்றி நிவாரண உதவிகளை வழங்கினோம். ஆனால், இன்றையதினம் இலவசத் திட்டம் என்ற பெயரில் பல திட்டங்களை இந்த அரசு அறிவித்து அவற்றைச் செயல்படுத்துகிறோம் என்ற ஒரு மாயையை மக்களிடத்திலே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. செ. பொன்னுதுரை:** நியாயவிலைக் கடைகளில் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் வழங்கப்படுவதாக ஆளுநர் உரையில் பெருமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், உண்மை நிலை என்ன என்பதை ஆட்சியிலே இருப்பவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இரண்டு ரூபாய் அரிசி 50 சதவீதம்கூட பொதுமக்களுக்கு வழங்கப்படுவது இல்லை. எல்லா அரிசிகளும் அண்டை மாநிலங்களுக்கு மூட்டை மூட்டையாக லாரிகளிலும், இரயிலிலும் கடத்தப்படுகிறது. நாள் தவறாமல் நாளேடுகளில் அரிசிக் கடத்தல் பற்றிச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. அரிசிக் கடத்தலில் ஆளுங்கட்சியினருக்கு பெரும்பங்கு இருப்பதால்தான் அதிகாரிகள் கண்டும் காணாமல் இருக்கின்றனர் என்று நான் சொல்லவில்லை, பொதுமக்கள் சொல்லிக்கொள்கிறார்கள். நாங்கள் சொல்லும் குற்றச்சாட்டுக்களை நீங்கள் பொறுமையாகக் கேட்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும்.

தமிழகம் முழுவதும் தற்போது மின்சாரம் எப்போது வரும், எப்போது நிறுத்தப்படும் என்று தெரியாத அளவிற்கு மறைமுகமான மின்வெட்டுக் கொடுமை தாண்டவமாடுகிறது. மத்தியிலும் உங்கள் கூட்டணி அரசுதான் இருக்கிறது. நீங்கள் மத்திய அரசுடன் ஏன் வாதாடி, வேண்டிய மின்சாரத்தைப் பெறக்கூடாது? அறிவிப்புகள் எல்லாம் காகித வடிவில்தான் உள்ளதே தவிர, செயல்வடிவில் இல்லை.

பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் ஆயிரம் மாணவ மாணவியருக்கு ஊக்கப் பரிசாக கணினி அளிக்கப்படும் என்று அறிவித்தீர்கள். ஆனால், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தேர்தல் பிரசாரத்தின்போது அனைத்து மாணவ-மாணவியருக்கும் கணினி வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்திருந்தால், அதை நிச்சயம் நிறைவேற்றியிருப்பார்கள். உங்களிடம் போதிய நிதி வசதி இருப்பதாகச் சொல்கிறீர்கள். எனவே, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்குமாவது கணினி இலவசமாக வழங்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க, அரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று ஆளுநர் உரையில் உள்ளது. ஆனால், இன்றைய சூழ்நிலையில் விவசாயிகளின் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. 'உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்குக் கூட மிஞ்சாது' என்ற பரிதாப நிலையில்தான் விவசாயிகள் உள்ளனர். அவர்கள் வாழ்வில் வளம்பெற வேண்டுமென்றால், அரசு, விவசாயிகளுக்கு நெல் கொள்முதலுக்கு ஒரு குவிண்டாலுக்கு 1,000/- ரூபாய் வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் கிடைக்க வேண்டிய உரங்கள் எல்லாம் இன்றைக்கு கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதால் விவசாயிகள் படும் அவலநிலையை மாற்ற அரசு ஆவன செய்ய முன்வர வேண்டும். விவசாயிகளின் உப தொழில்களில் ஒன்றாக விளங்கும் பால் உற்பத்திக்கும் அரசு ஊக்கம் அளிக்க வேண்டும்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வலியுறுத்தலின்பேரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனை முழுமையாக அரசு இரத்து செய்ய தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.



மாநிலத்தில் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளில் வீணாகும் தண்ணீரை தடுப்பணைகள் மூலமாகச் சேமித்து, ஆண்டு முழுவதும் விவசாயம் மற்றும் குடிநீர் வசதிக்காகப் பயன்படுத்தும் திட்டம் ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பவானிசாகருக்கு வரும் தண்ணீர்—பாசனம், விவசாயம், தொழிற்சாலைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 53 டி.எம்.சி. தண்ணீர் தேவை. மழைக் காலங்களில் பெய்யும் பலத்த மழையினால் மட்டும் சுமார் 5 டி.எம்.சி. தண்ணீர் — உபரியாக, வீணாக வெளியேறி கடலில் கலக்கிறது. அவிநாசி–அத்திக்கடவு நீர் செறிவூட்டும் திட்டத்திற்கு 2 டி.எம்.சி. தண்ணீரே போதுமானது. எனவே, இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

இந்தத் திட்டத்தின் மூலமாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை, காங்கேயம், கோபிசெட்டிப்பாளையம், பவானிசாகர் மற்றும் கோவை மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம், அவிநாசி, திருப்பூர், பல்லடம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பெருந்துறை, ஊத்துக்குளி, சென்னிமலை, நம்பியூர், கோபி, பவானிசாகர், திருப்பூர், காரமடை, அவிநாசி, அன்னூர் ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 50 குளங்களிலும், 300 குட்டைகளிலும் தண்ணீரைத் தேக்கினால், அதன்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும். அதனால், முக்கியமான இந்த அவிநாசி–அத்திக்கடவு நீர் செறிவூட்டும் திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும். இதன்மூலம் சுமார் 20 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கு கடந்த 2003 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 270 கோடி ரூபாய் செலவில் திட்டம் வடிவமைக்கப்பட்டு, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று பல்வேறு கட்டங்களாகச் செயலாக்கப்பட உள்ளது என அப்போதைய நிதியமைச்சர், நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார். மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் இத்திட்டத்தை நிறைவேற்றியிருப்பார்.

எனது தொகுதியில் உள்ள பெருந்துறை சிப்காட் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் சாயக் கழிவுநீரால் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயப் பாசனக் கிணறுகள், குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுகின்றன. அதைத் தடுக்க, சிப்காட் பகுதியிலும் திருப்பூர், ஈரோடு பகுதியிலிருந்தும் சாயக் கழிவுநீரினை வெளியேற்ற குழாய்மூலம் எடுத்துச் சென்று சுத்திகரிப்பு செய்து கடலில் கலக்கும் ரூ.800 கோடி மதிப்பிலான திட்டத்தினை, அரசு உடனே நிறைவேற்ற வேண்டும்.

[தி. ந. செ. பொன்னுதுரை] [2008 ஜனவரி 30
பிற்பகல் 1-35

பெருந்துறையில் உள்ள அரசு சாலைப் போக்குவரத்துக் கழகம் சார்பில் சுமார் 350 ஏக்கர் பரப்பளவில் மருத்துவமனை இயங்கி வருகிறது. இதில் தினமும் சுமார் 1500 ஏழை எளிய மக்கள் புறநோயாளிகளாகவும், உள் நோயாளிகளாகவும் கட்டணம் செலுத்தித்தான் சிகிச்சைப் பெற முடிகிறது. அதே நேரத்தில் அங்குள்ள தாலுகா மருத்துவமனை எந்தவித கட்டட வசதியும் இல்லாமல் இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையை ஐ.ஆர்.டி. மருத்துவமனை கல்லூரி வளாகத்தில் இணைத்துவிட்டால் பொதுமக்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ வசதி கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, சுற்றுவட்டாரத்தில் உள்ள பொது மக்களின் வசதிக்காக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், ஊத்துக்குளியிலிருந்து திருப்பூர் செல்லும் வழியில் திம்பநாயக்கன்பாளையம் என்ற இடத்திலும், ஊத்துக்குளியிலிருந்து காங்கேயம் செல்லும் வழியில் ஊத்துக்குளி ஆர்.எஸ்-யிலும், பெருந்துறையிலிருந்து சென்னிமலை செல்லும் வழியில் ஈங்கூர் என்னுமிடத்திலும், மூன்று இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2003 ஆம் ஆண்டு சுமார் 23 கோடி ரூபாய் செலவில் பணிகள் துவக்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வந்தன. ஆனால் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு இன்னும் வேலை முடியாமல் பாதியிலேயே பணிகள் நின்றுவிட்டன. இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். இந்த மூன்று இரயில்வே மேம்பாலப் பணிகளையும் துரிதமாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகளை இணைத்து பெருந்துறையை நகராட்சியாக அறிவித்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

பெருந்துறை தொகுதியில் உள்ள ஊத்துக்குளி காவல் நிலையம் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் அதற்குப் புதிதாக கட்டடம் ஒன்றினைக் கட்டிக் கொடுக்கவும், திங்களூர் சார் பதிவாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில்... *(மணியடிக்கப்பெற்றது)* சார் ஒரே ஒரு நிமிடம். *(குறுக்கீடுகள்)*



2008 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும் பொன்னுதுரை. உங்கள் தொகுதிக்கு நிறைய கேட்டிருக்கிறீர்கள். போதும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-1-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

23. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய மற்றும் நடுத்தர பாசன அமைப்புகளின் பாசனப் பகுதியை வரையறுத்து, அதனை பகிர்மானக் குழுப் பகுதியாக அறிவித்தது குறித்து பொதுப் பணித் (டபிள்யூ2) துறையின் 23-4-2007 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 30 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய பாசன அமைப்புகளின் பாசனப் பகுதியை அல்லது அதன் ஒரு பகுதியை வரையறுத்து, அதனை திட்டக் குழுப் பகுதியாக அறிவித்தது குறித்து பொதுப் பணித் (டபிள்யூ2) துறையின் 23-4-2007 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 30 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

25. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பினால் பராமரிக்கப்படும் அனைத்து ஆயக்கட்டுப் பகுதிகளிலும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தின் வழிவகைகள் 7-5-2007 ஆம் நாள் முதல் செயலுக்கு வருமென்று அறிவித்தது குறித்து பொதுப் பணித் (டபிள்யூ2) துறையின் 30-4-2007 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 30 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2008 ஜனவரி 30

26. பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரங்கள் அமைப்பின் உதவிப் பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளர் அல்லது மேற்பார்வையாளரை நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமித்தது குறித்து பொதுப் பணித் (டபிள்யூ2) துறையின் 4–6–2007 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 50 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் விதிகள் இயற்றியது குறித்து பொதுப் பணித் (டபிள்யூ2) துறையின் 28–9–2007 ஆம் நாளிட்ட 320 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2007) 13 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் 1–10–2007 ஆம் தேதியிலிருந்து செயலுக்கு வரும் என்று அறிவித்தது குறித்து பொதுப் பணித் (டபிள்யூ2) துறையின் 28–9–2007 ஆம் நாளிட்ட 320 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2007) 13 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

39. பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை. (2007–2008)

40. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கை. (2007–2008)



2008 ஜனவரி 30]

41. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்திரண்டாவது அறிக்கை. (2007–2008)

42. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை. (2007–2008)

43. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை. (2007–2008)

44. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தைந்தாவது அறிக்கை. (2007–2008)

45. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. (2007–2008)

46. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை. (2007–2008)

47. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தாறாவது அறிக்கை. (2007–2008)

48. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தேழாவது அறிக்கை. (2007–2008)

49. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தெட்டாவது அறிக்கை. (2007–2008)

50. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தொன்பதாவது அறிக்கை. (2007–2008)

D
V 21, 3/08
P08. 402
228100
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner
of Stationery and Printing,
Chennai-600 002.